www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
New Kandy Stores
No. 11. Colombo Road
பக்கம் 20
05 - 11. 9.1993
ரூபா 8/50

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY — முரசு 15



## வளர்ந்து வருகிறார் பிரதமர் ரணில்! ஆளும் கட்சிக்குள் முரண்பாடுகளா?

—எக்ஸ்ரே ரிப்போர்ட்—



திடுக் திடுக்

ஆச்சரியமான அதிரடித் தகவல்களோடு

தகவல் பெட்டி



## அரைவேக்காடான அரசியலுக்கு வழிவகுக்கும் தேர்தல் முஸ்தீபு

-அரசியல் அலசல்-


வர்ண படங்களோடு சினிவிசிட்

தையல் + சமையல் தையலருக்காக லேடீஸ் ஸ்பெஷல்

சித்திரத் தொடர் ஆரம்பம்



ஸ்போர்ட்ஸ்



உலக ரவுண்டப்

## கழுகு கவ்விச் சென்ற சின்னம் சிறுவன்

## ஆச்சரியமாகக் கிடைத்த அதிசயப் படம்

— மற்றும் —

சிறுகதை - சிறுவர் கதை - சித்திரக் கதை

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
பலர் பிரமித்துப் போயிருக்கிறார்கள்.
சிலர் பொறாமைப்பட்டுமிருக்கிறார்கள்.
காய்க்கும் மரத்துக்குத்தானே
கல்லடி படும்.
எங்கே தினமுரசு வாரமலருக்கு
கண்பட்டுவிடுமோ என்ற நல்ல நோக்கத்தில்
திருஷ்டி சுற்றிப் போடுவது போல
ஒரு சிலர் படுகின்ற எரிச்சல்கள்!
எங்கே தங்கள் முகமூடிகளும்
கிழிக்கப்பட்டுவிடுமோ
என்று கவலைப்படுகிறார்கள்-பாவம்.
வாசக நெஞ்சங்கள் சிலரும்
அது சொல்லி வருத்தப்பட்டிருக்கிறார்கள்.
அலட்சியப்படுத்துங்கள்.
தகுதியற்ற வாதங்களோடு பொருதுவது வீண்.

■

வாசக நெஞ்சங்களின்
தீவிர ஈடுபாடு தெம்பூட்டுகிறது.
நெம்புகோலாக உந்துதல் தருகிறது.
அதே சமயம் யோசிக்கவும் வைக்கிறது.
உங்கள் அன்புக்கும், அளவற்ற பற்றுக்கும்
ஏற்றவகையில்
இன்னும் நிறையச் செய்யவேண்டுமே!
என்ன செய்யலாம்?
என்பதுதான் எமது யோசனை.
செய்தேயாக வேண்டும். செய்வோம்.

■

"பட்டுவேட்டி பற்றிய
கனவில் இருந்த போது
கட்டியிருந்த கோவணமும்
களவாடப்பட்டது"
இது சுருக்கமாக, சூடாக
தேச அவலம் சொன்ன கவிதை-
வைரமுத்து எழுதியது.

"நாங்கள் சேற்றில்
கால் வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றில்
கைவைக்க முடியாது"
உழைக்கும் விவசாயிகளின்
உரத்த குரலாக ஒலித்த கவிதை-
தணிகைச் செல்வன் என்னும்
தமிழகக் கவிஞர் படைத்தது.

இந்த இரு கவிதைகளும்
தேண்கிண்ணம் பகுதிக்கு
இருவரால் அனுப்பப்பட்டிருந்தன.
தங்கள் பெயர்களில்
தங்கள் படைப்பாக உரிமைகோரி
திருடியதை பத்திரமாக அனுப்பியிருந்தனர்.
முதல் தவறு என்பதால்

அவர்கள் பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை.

இவ்வாறான சின்ன ஆசைகள் வேண்டாமே.
உள்ள திறமைகளை வளர்த்துக்
கொள்ளுங்கள்.
உள்ளத்து உணர்வுகளுக்கு உரமூட்டுங்கள்.
இரவல் வெளிச்சத்தில்
இல்லாத திறமைகளுக்கு விளம்பரம் தேடுதல்
கலை, இலக்கியக் களத்தில் கால் ஊன்ற
ஒருபோதும் உதவாது.

■

முரசுக்கு ஆக்கம் அனுப்பும்
அன்புக்குரியவர்கள்
தினமுரசின் தனித்துவப் பாணி புரிந்து
அதற்கேற்ப படைப்புக்களைத் தாருங்கள்.
பெண்களை கேலி செய்யும் கதைகள்
பெண் புத்தி கெட்டவள் போன்ற
சித்தரிப்புக்கள்-எத்தனை நாள்
குளிக்கவில்லை போன்ற
"நகைச்சுவை" துணுக்குகள்
தயவு செய்து வேண்டாம்.
முரசில் அவை முகம் காட்டா.

மகிழ்ச்சி முக்கியம். மலர்ச்சி முக்கியம்.
அதற்காக
அபத்தங்கள், சமத்துவ நிராகரிப்புக்கள்,
உணர்வுகளை நசுக்கும், மறுக்கும்
முயற்சிகள் வேண்டாம்.
முரசின் வாசகர்கள் வித்தியாசமானவர்கள்.

மீண்டும் மறுமடலில் வந்து
கலக்கும் வரை

அன்புடன்
—ஆசிரியர்—

## தினமுரசு போன்: 820265

### அட... அல்பம் ரெடி நீங்கள் ரெடியா?

உங்களிடம் கமரா இருக்கிறதா? இருந்தால் இப்போதே புறப்படுங்கள். உங்கள் சூழலில் கண்ணில் படும் வியப்பான - வித்தியாசமான காட்சிகளை கமராச் சிறைக்குள் மடக்குங்கள். பத்திரமாய் எமக்கு அனுப்புங்கள். சிறந்தவை பின் அட்டையில் 'அட .... அல்பம்' பகுதியில் இடம்பெறும். கலர் படங்களே விரும்பப்படுகின்றன.

முகவரி-
அட...அல்பம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருல்ப்பனை
கொழும்பு -5.

## கவிதைப் போட்டி இல-15



பாருங்கள் படத்தை. உள்ளத்தில் உற்பத்தியாகும் எண்ணத்திற்கு மடலிலே உருவம் கொடுத்து அனுப்புங்கள். தபாலட்டை போதும். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி- 11.9.93.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:15
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு -5

## கவிதைப் போட்டி இல-12

### வெற்றி பெற்ற கவிதை ஒன்றும் வியக்க வைத்த கவிதைகளும்

#### பரிசுபெறும் கவிதை

**மனித நேயம்**
மனித நேயம் குழி தோண்டி
புதைக்கப்படுகிறது
பயங்கரவாதம் நீரூற்றி
வளர்க்கப்படுகிறது.
எம்.எம்.முஸ்தரி பேகம்
இந்து தமிழ் ம.வி. - புத்தளம்.

**அவமானம்**
அநாகரிக
ஆயுதங்கள் கொண்டு
வல்லாதிக்கப்
பிசாசுகளினால்
மாத்திரம்
செதுக்க முடிந்த
வரலாற்றுச் சிற்பமா?
இல்லை;
அவமானச் சின்னம்!
ஏ.அமீர்
சம்மாந்துறை.

**பிரிவு**
இன வெறி
வேடர்களின்
வேட்டைக்குப்
பலியோ?
"பாலமுனை வாஹிட்"

**மறந்தனரோ?**
நித்திரையில்
உன் முகத்தை
உருக்குலைத்த
பாவியர்கள்
உடன் பிறப்பு
என்பதனை
ஏன்தான்
மறந்தனரோ.
பரீஹா ஏ.ஜுனைது
ஏறாவூர்-06.

**மனிதா கேள்!**
மானிடரே
மனிதாபிமானமே
மரணிக்கும் போது
மனித
மரணங்களுக்கு
ஏதுகுறை...?
பொ.பிரமிளாவாணி
பதுளை.

**மரணம்**
உயிருக்கு
உலகில்
கொடுக்கப்படும்
ஈகையோ!...
ஏ.எல்.ஸாஜஹான்
புதிய காத்தான்குடி-06

**எண்ணை ஊற்று**
நாட்டு நடப்பினை
நயமுறச்
சித்தரிக்கும்
நல்லதொரு
சிற்பமிது.
க.கலையரசி
வவுனியா.

**கல்லோ? காவியமோ?**
கல்லில் செதுக்கிய
சிலைகள்-இது
காண்பவர் வியக்கும்
கலைகள்
கவலையில் தோய்ந்த
முகங்கள்-இக்
கலைகள் தர்னோ? நிஜங்கள்"
-முத்துமாதவன்-
வாழைச்சேனை.



**கேள்விக் குறி**
மனிதாபிமானம்
மரணித்துப் போன பூமியிலே
மனித முகத்தையா
தேடுகிறாய்.....?
கே.தர்மராஜ்
கொழும்பு-13.

கலவரமே உனக்கு
பழுத்தோலையை
விட்டு விட்டு
குருத்தோலையை
காவு கொண்ட
கலவரமே
உனக்கொரு
சாவு வராதா?
ஆர்.பாலகிருஷ்ணன்
மாத்தளை.

**இருந்தென்ன?**
மனிதம் மரணித்து
வெடி குண்டு ஆட்சி
செய்யும் இம்மயான
பூமியில் இருந்தென்ன
இறந்தென்ன-அன்னையே.
ச.சக்கீல்
தெஹிவளை.

**அரவணைப்பு**
அணைந்த
உயிரை
அணைக்கும்
உயிர்
எஸ்.பி.பிரகாஷ்
மாத்தளை.

**அழுகிறாள் மாது.....**
அராஜகம்
தின்று தீர்த்த
தன் கணவனைத் தேடி
எலும்புக் கூடாய்க்
கண்டவள்
கதறி அழுகிறாள்.
ஹரீரா அனஸ்
அக்குறணை.

எங்களுக்குத்தான் அவல
நிலை
உனக்குமா....
எம். ஆர்.எம்.ஹிம்தாப்
கொச்சிக்கடை.

**நினைவுச் சின்னம்**
வடக்கின் யதார்த்தத்தை
நிதர்சனப் படுத்தும்
அழியாக் கல்வெட்டு
எம்.எச்.எம். ஹாரிஸ்
புத்தளம்.

**இயந்திர உலகம்**
இரத்தமும்
குண்டுச்
சத்தமும்
நித்தமும்
தொடரும்
இயந்திர உலகமிது!
மனிதனோ-
மறைவிடம்
தேடுகிறான்
மரணத்தில்!
து.கலைவாணி
வத்தளை.

**தாயே உன்னைத்தான்**
அழாதே தாயே அழாதே
ஆயிரம் உயிர்
ஆயுதத்தால் அழிகிறது
அழாதே
வி.யோகேஸ்வரன்
அப்புத்தளை.

**சுமை**
இவ்வளவு தூரம் தான்
உன்னைச் சுமந்தேன்
இதற்கு மேல் யார்
உன்னைச் சுமப்பார்.
கம்மல்துறை-இளஞ்சோதரன்.

யுகங்கள் கழிந்தாலும்
யுத்தங்கள் நிற்காதென்று
நீயும் சிலையாகிவிட்டாயா?.....
செல்வி சிபானா சுபைர்
கலஹா.

## வாசக(ர்)சாலை

**கவர்ந்து விட ஆசை!**

ஞாயிறு தோறும் எம் இல்லங்களுக்கு வருகை தருகின்ற தினமுரசே! உனக்கு எனது முதற் கண் விஷ்.

தினமுரசு என்றால் தினமுரசு தான். சொல்லவா வேண்டும். அப்பப்பா. என்ன சுவைமிகு அம்சங்களை சுமந்து வருகின்றாய். உன் சுமை குறைந்து விடாமல் இன்னும் பல விடயங்களை சுமந்து வருவாயானால் உனக்கு நீயே நிகர். உன்னை தவறாது உன் சுவையில் மெய் மறந்து நிற்கும் வாசகி யான். எனக்கு உன்னில் சின்னச் சின்ன ஆசை. இங்கு உன்னை மேய்ந்து விட ஆசை. வண்ண வண்ண ஆசை. உன்னை கவர்ந்து விட ஆசை. தினமுரசை தொட்டு வாழ்த்தி விட ஆசை.

**எஸ்.கே.பௌமீனா சுஜீவா- நீர்கொழும்பு.**

விறுவிறுப்பான சுறுசுறுப்பான பரபரப்பான கிளுகிளுப்பான செய்திகளை புதுமையான நடையில் அருமையான முறையில் ஆசை ஆசையாய் அள்ளி வழங்கும் தினமுரசுக்கு நிகர் தினமுரசேதான். தகவல் பெட்டிக்குள் நுளைந்தாலே போதும் வாரம் ஒரு தரம் உலகையே வலம் வரும். திருப்தி. கண்ணே மதுமிதா தொடர் நவீனம் சூப்பர், காதுல பூ படு ஜோர்.

**பர்ஹானா புவாத் கல்முனை-3.**

கடந்த வாரம்தான் உன்னைச் சுவைக்க ஆரம்பித்தேன். உன் அற்புதமான ஆக்கங்களால் என்னை முற்றாக அடிமைப்படுத்திக் கொண்டு விட்டாய். உன் ஒவ்வொரு சிறுகுறிப்பும் பயன்பட வைப்பதுடன் உன் உன்னதமான பணி வானளாவ வளர 'புது தோழி' என் வாழ்த்துக்கள் தினமுரசே!

**வீ.தங்கவேல் - பதுளை.**

"தினமுரசே" உன் வளர்ச்சிக்கு என் இனிய வாழ்த்துக்கள். (உன்னில் ரசிகன் எழுதுவது யார்?

**சாந்தி செல்வராஜ்.**

"தினமுரசு"-தித்திக்கும் தேனடை
தெவிட்டாத நல்லமுது-செந்தமிழ்
தென்றல். எண்ணக் கருவூலங்களை
அள்ளித் தரும் இலட்சியப் பெட்டகம்
கவிக்குயில்களை- கதை மன்னர்களை
உருவாக்கும் கலைச் சோலை.
'முரசு' வளர்க! வாழ்க!

**ஆ.பாலசுந்தரம் - தம்பலகாமம்.**

முரசே முரசே....
எந்தன் வார முரசே!
நீ வராதிருந்தால்
நான் வாழாதிருப்பேன்
உன்னை சுவைக்காவிட்டால்
நான் துடியாய்த் துடிப்பேன்
உன் அங்கங்கள் அனைத்தும்
தேனாய் தித்திக்கிறதே....!

**கோகிலா குமாரவேல் இரத்தினபுரி.**

தினமுரசில் வரும் அத்தனை அம்சங்களும் சுவையென்றால் அப்படியொரு சுவை, ஒவ்வொரு பக்கத்தை புரட்ட புரட்ட எதை முதலில் படிப்போம் என்று ஒரே குழப்பமாக உள்ளது. சிந்தியாவின் பதில்களும் முகில் வண்ணன் வாரம் தோறும் எழுதிவரும் சிறுகதைகளும் சுப்பர்.

**நிர்மலா முருகையா-பண்டாரவளை.**

அன்பின் தினமுரசு வாரமலரே உன்னைக் கண்டதும் இதயம் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிறது. ஒவ்வொரு வாரமும் பாலில் விழுந்த பழம் போல் இன்சுவையைத் தருவதில் உனக்கு நிகர் யாருமில்லை. உன் வளர்ச்சிக்கு என் நல்வாழ்த்துக்கள்.

**ச.தமிழ்ச் செல்வன்- நிவித்திகல.**

கண்ணே மதுமிதா வெரி வெல்..... பேனா நண்பர் தொடர்பு பகுதியை பூர்த்தி செய்து விட்டாய் முரசே, உனக்கு என் பாசக் கரங்கள்....

**எம்.ஜே.எம்.பைஸால்-கலஹா.**

சுவையான செய்திகளை மட்டுமல்ல சூடான செய்திகளையும் சூடுபோடும் செய்திகளையும் நீ தவறாமல் தருவதால் தான் தரணி முழுவதும் உன்னை தவறாமல் வாசிக்கின்றோம். நேசிக்கின்றோம். தொடர்க உனது முழக்கம்.

**நிரஞ்சலா தங்கவேல் திருகோணமலை.**

நிகரில்லா முரசு நீ
நீ கொட்டும் முரசுக்கு
திக்கெட்டும் வரவேற்பு
நீ மட்டும் வந்துவிட்டால்
புவி கொட்டும் புகழ் முரசு
திகட்டாத தின(தினை)முரசு
நிகரில்லா உன் முரசு
வாழ்க உன் அரசு.

**கந்தையா விநாயகமூர்த்தி-வெதமுள்ள.**

வாரம் ஒருமுறை வலம் வந்து எம் சிந்தனைகளுக்கு விருந்தூட்டும் தினமுரசே, காலங்கள் போனாலும் நீ நிலைத்து நிற்பாயாக.

**த.சேசையா-சாமிமலை.**

தினமுரசில் எம்நாட்டு எழுத்தாளர்களுக்கும் இடம் கொடுத்துள்ளதற்காக கட்டாயம் நன்றியை தெரிவிக்கத்தான் வேண்டும். • ரசிகனும் எம்நாட்டு எழுத்தாளராக இருக்க மாட்டாரா என்ற ஏக்கம். என்னுள் மனதார பாராட்டுகின்றேன். தினமுரசில் தகவல் பெட்டியில் அதிசய மனிதனைப் பார்த்து வியப்புத்தான். பல அம்சங்கள் சுவையாக இருந்தன. வாழ்த்துக்கள். தினமுரசிற்கு.

**கே. வாணி-வத்தளை.**

ஓடி வரும் நீரில், ஆடி வரும் மீனைப் போல் என் இதயத் தடாகத்தில் நீந்தி வலம் வரும் என்னுயிர் தினமுரசே! சிந்திக்க வைக்கும் உந்தன் சேவை என்றும் தொடர எனது வாழ்த்துக்கள்.

**சியானா மனாப்-போப்பிட்டிய பசார்.**

உனைக் காணாமல் நாம் ஏது
உனை எண்ணாத நாள் ஏது
பூங்குயிலே பைந்தமிழே
எம் உயிரே நீ தான்!

**பாலா, சுபா, பரமேஸ் கட்டவளை.**

கொள்ளை அழகுடன் வெள்ளிதோறும் வலம் வந்து பல ஆக்கங்களையும்-நீ அள்ளித் தந்து-எம் மனதைக் கொள்ளையடிக்கும் செப்படி வித்தையை எப்படிச் சொல்லுவேன்!

**சேக்கார், எஸ்.பகீரதி-மட்டுநகர்.**

தினமுரசை பார்த்தேன்
சித்தம் குளிர்ந்தேன்
படைப்புக்களை சுவைத்தேன்
பரவசமடைந்தேன்
பாராட்டத் துடித்தேன்
வார்த்தையின்றித் தவித்தேன்
உயர்வாயென நினைத்தேன்
உயரக்கண்டு பூரித்தேன்!

**கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டிய.**

பூ பூக்கும் முரசே என்றும் நீ பொன் மலர்தான். முரசே நீ மலரும் போது உன்மணம் உலகமெங்கும் வீசுகிறது. என்னுயிர் முரசே என் வாழ்வினில் என்றுமே அழியாத தினமுரசுதான். வாழ்க தினமுரசே வளர்க உன் சேவை.

**எம்.பிரதாப்சந்திரன்-உடபுஸல்லாவ.**

கலைக் களஞ்சியமாம் - நீ இன்னவளின் கனவுகளை இனிதாகவே நனவாக்க காவியம் பல படைத்து கவி தொடுத்து கதை படைத்து உரை சில கொடுத்து சுடர் விடும் ஒளிவிளக்காய் நடை பயில நல்வாழ்த்துக்கள்.

**அரூஸியா இஸ்மாயில்- பாணந்துறை.**

யதார்த்தவாதி வெகுசன விரோதி என்பது பழமொழி. ஆனால் இன்று யதார்த்தத்தை எழுதும் தினமுரசோ மக்கள் முரசாகி விட்டது. வளர்க என்றும் உன் பணி!

**காந்தன்- வவுனியா.**

ரிஸ்வான், ரில்வான், ரிஸ்வி, ரிஸானா, மைமூன், மர்லியா, நிஹாரா, முனாஸ்-பேருவளை, வீ.ரேணுகா-வத்துகாமம், சந்திரபாலன்-இரத்தினபுரி, எஸ்.ஸரூக்-சீனக்குடா, தயானந்தன்-வெள்ளவத்தை.

# கடல் பகுதித் தாக்குதல்களில் கரும்புலிகள்!

# கடல் போக்குவரத்தை சீர்படுத்த புலிகள் திட்டம்!!

சமீபத்திய கடல் தாக்குதல்களில் புலிகளின் கை மேலோங்கியிருக்கிறது.

புலிகள் அமைப்பினர்' தமது கடற்புலிகள் பிரிவைப் பலப்படுத்தி வருவதாக ஏற்கனவே தினமுரசு வாரமலரின் எக்ஸ்ரே ரிப்போட்டில் தெரிவித்திருந்தோம்.

கடந்த ஆகஸ்ட் 26ம் திகதி கிளாலிக் கடலேரியில் இரண்டு கடற்படைப் படகுகள் புலிகள் அமைப்பினரால் மூழ்கடிக்கப்பட்டன. அப்படகுகளில் இருந்த பெறுமதி வாய்ந்த ஆயுதங்களையும் தாம் கைப்பற்றிவிட்டதாக புலிகள் அமைப்பினர் அறிவித்திருந்தனர்.

தமது தற்கொலைப் படைப்பிரிவினரே தாக்குதலில் ஈடுபட்டதாகவும் புலிகள் அமைப்பினரின் அறிக்கை தெரிவிக்கிறது.

300 கிலோ கிராம் வெடி மருந்து நிரப்பப்பட்ட இரு படகுகளில் சென்ற தமது தற்கொலைப் படையினரே கடற்படைப் படகுகளை மோதி மூழ்கடித்ததாக புலிகள் கூறியுள்ளனர்.

மேஜர் வரதன், கப்டன் மதன் ஆகிய தற்கொலைப் படைப் புலிகள் இருவர் "குமரப்பா", "புலேந்திரன்" என்ற பெயருடைய அதிவேக விசைப்படகுகள் இரண்டில் சென்றே தாக்குதலை நடத்தினார்கள்.

கடற்படையினரின் நான்கு சடலங்கள் புலிகளால் கொண்டு செல்லப்பட்டன. பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் புலிகளால் ஒப்படைக கப்பட்டன.

50 கலிபர் ரக துப்பாக்கிகள் இரண்டு, ஏ.கே ரக துப்பாக்கிகள் இரண்டு, அவற்றுக்குரிய ரவைகள் என்பனவற்றை தாம் எடுத்துச் சென்றதாக புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

50 கலிபர் ரக துப்பாக்கிகள் புலிகளால் எடுத்துச்



செல்லப்பட்டமை இராணுவ வட்டாரத்தினருக்கு கவலையளித்துள்ளது.

இராணுவ முகாம்கள் மீதான பாரிய தாக்குதல்களுக்கு புலிகள் அவற்றைப் பயன்படுத்துவார்கள்.

கிளாலிக் கடலேரித்தாக்குதலையடுத்து கடற்படையினர் உஷார்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு நடந்ததாகத் தெரியவில்லை.

கடந்த 29ம் திகதி பருத்தித்துறைக் கடலில் மற்றொரு வெற்றிகரமான தாக்குதலை புலிகள் நடத்தியுள்ளனர்.

கடற்படையினரின் அதி நவீன போர்ப்படகு தகர்க்கப்பட்டுள்ளது. டோரா ரகத்தைச் சேர்ந்த அப்படகின் நீளம் 40 அடியாகும். அதன் பெறுமதி ஆறு கோடி என்று புலிகள் கூறுகின்றனர்.

பருத்தித்துறைக் கடலில் 29ம் திகதி அதிகாலை கடற்புலிகளுக்கும் டோரா படகில் இருந்த கடற்படையினருக்கும் இடையே மோதல் ஆரம்பமானது. 4 விசைப்படகில் வந்த கடற்புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். ஒரு மணி நேரம் வரை மோதல் நீடித்தது. அச்சமயத்தில் புலிகளின் தற்கொலைப்படைப் பிரிவைச் சேர்ந்த இருவர் இரு விசைப்படகுகளில் வந்து கடற்படகில் மோதினார்கள். புகழரசன், மணியரசன் என்று அழைக்கப்படும் இரு கரும்புலிகளே அவ்வாறு மோதி மரணமானதாக புலிகள் அமைப்பு அறிவித்துள்ளது.

இரு பீரங்கிகள், 50 கலிபர் ரகத் துப்பாக்கிகள் 2, ஷெல்கள் 50, ஆகியவை தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் அமைப்பு உரிமை கோரியுள்ளது.

புலிகள் அமைப்பினரால் தாக்கப்பட்ட இரண்டாவது டோரா ரகப் போர் படகு இதுவாகும்.

1992 ஏப்ரல் 3ம் திகதி மாதகல் கடற்பகுதியில் , வைத்து கடற்படையினரின் டோரா ரகப் படகொன்று புலிகள் அமைப்பினரால் தாக்கப் பட்டது.

கடற்பகுதியில் தமது போக்குவரத்து நிலையைச் சீர்செய்யவே பாரிய தாக்குதல்களை புலிகள் அமைப்பினர் நடத்தியுள்ளதாகக் கருதப்படுகிறது.

## குறி தவறி விழுந்த குண்டுகள்!

யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் நடைபெற்ற விமானத் தாக்குதல்கள் புலிகளின் நிலைகளை விட்டு விலகியே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கடந்த 28ம் திகதி சனிக்கிழமை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய சுற்றாடல் பகுதியில் குண்டுகள் வீழ்ந்தன. இதில் நான்கு கடைகள் சேதமடைந்தன. மணமகள் இராம நாதன் என்னும் இளம் பெண் ஒருவர் காயமடைந்தார்.

மாதகல் இராணுவத்தினர் சுழிபுரம், சில்லாலைப் பகுதிகளை நோக்கி முன்னேற முயன்றபோது விமானப்படையினரும் அவர்களுக்கு உதவினர்.

விமானப் படையினரின் நடவடிக்கைகளால் புலிகள் பின்வாங்கிச் சென்றனர்.

அதேசமயத்தில் சில குண்டுகள் பறளாய் முருகன் கோவில் பகுதியிலும் விழுந்தன. தேர்முட்டி சேதமடைந்தது.

மாதகல் பகுதியில் 5 பொதுமக்கள் பலியானார்கள்.

சிற்றம்பலம் இராமசந்திரன்( வயது 53), கந்தையா அருளம்பலம் (வயது 60) காரைநகர், பொன்னுத்துரை முத்துசாமி (வயது 40) சுழிபுரம், சுப்பிரமணியம் சர்வகுலராசா (வயது 53) சுழிபுரம், அவரது மனைவி சகுந்தலாதேவி (வயது 45) மோதலின் இடையில் சிக்கிப் பலியானார்கள்.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயப் பகுதியில் காலையில் நடைபெற்ற தாக்குதலில் 5 பேர் பலியானதாகவும் 11 பேர் காயமடைந்தாகவும் தெரிவிக்கப் பட்டது. மாலையில் இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் பலியானதுடன் 6 பேர் காயமடைந்ததகவும் தெரிவிக் கப்பட்டது.

ஆலயத்தின் கல்யாண மண்டபம், சமையலறை என்பவை சேதமடைந்தன.

கடந்த சனிக்கிழமையன்று பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல், அச்சுவேலியில் விழுந்து வெடித்ததில் மூன்றுபேர் காய மடைந்ததாகவும் ஒருவர் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் முன்னேறிச்சென்று தாக்கிவிட்டு பின் மீண்டும் முகாமுக்கு திரும்பும் நடவடிக்கைகளையே இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

29ம் திகதியன்று கொக்குவில், கோண்டாவில் பகுதிகளிலும் தாக்குதல்கள் இடம் பெற்றன. இருவர் பலியானதாகவும் எட்டுப்பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப் பட்டிருக்கிறது. வ. சரோஜாதேவி (4) கோணடாவில், ஜ. மயில்வாகனம் (51) கோண்டாவில் ஆகியோர் பலியான தாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாதகல் பகுதியில் இராணு வத்தினர் புலிகளின் நிலை ஒன்றுமீது மேற்கொண்ட தாக்குதலில் மூன்று புலிகள் பலியானார்கள்.

## கார் வைத்திருப்பவர்களுக்கும் கஷ்டம்தான்! புலிகளிடம் பதிவு வைக்க வேண்டும்!!

யாழ்ப்பாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கார் வைத்திருப்பவர்கள் தம்மிடம் பதிவு செய்ய. வேண்டும் என்று புலிகள் இயக்கம் அறிவித்திருக்கிறது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக பதிவுகள் நடைபெற்று வருகின்றன.

அடுத்த முரசில் அசத்துவதற்கு..
பூமியை நோக்கி வரும் அபாயக்கல்லு
வள்ளிபட வசனமும்
ரஜனியின் எதிர்காலத் திட்டமும்
முக்கிய பிரமுகர்கள் அலசல்
துப்பறியும் குதிரை!
இன்னும் பல
விறுவிறு அம்சங்கள்
பிரதிக்கு முந்துங்கள்

## மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் தட்டச்சு செய்யப்பட்ட தமிழில் தவறுகள்!

சென்ற 23.08.93 அன்று மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட சூழற் கற்கை பரீட்சை வினாத்தாளில் தமிழ் பட்ட பாட்டைப் பாருங்கள்.

அணுகுமுறை என்பதற்கு அனுகுமுறை என்றும், நோக்கல் என்பதற்கு நோக்கள் என்றும், சுற்றுலாக்கள் என்பதற்கு சுற்றுளாக்கள் என்றும், வாடுவதேன் என்பதற்கு வாடுவேதேன் என்றும், பிரசினங்களுள் என்பதற்கு பிரசினங்களுல என்றும், காணும் என்பதற்கு கானும் என்றும், தீர்ப்பதன் என்பதற்கு தீர்பதன் என்றும், செயற்பாடுகள் என்பதற்கு செயல்போடுகள் என்றும், தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. தமிழ் வளர்க்கும் ஆசிரிய கலாசாலையில் இடம் பெற்றுள்ள இச் சொல் வழுக்களைக் காணும் போது தமிழ்ப் பகுதிகளல்லாத ஏனைய இடங்களில் இருக்கும் தமிழ் வழுக்களைச் சுட்டிக்காட்டுவது சுற்றுச் சங்கடமாகவுள்ளது.

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

## தொழிலாளர்களோ முப்பதாயிரம் பேர் தொலைபேசி வசதியோ இன்னும் இல்லை!

(இராகலை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் அக்கரைப்பத்தனை பகுதியில் சுமார் 30,000 தொழிலாளர்கள் வசிக்கின்றனர். பொலிஸ் நிலையங்கள், அரச மருத்துவமனைகள், போன்றவற்றோடு மிக கூடுதலான தேயிலை தோட்டங்களும் இப்பகுதியிலேயே இருக்கின்றன. ஆனால் கடந்த சுமார் 15 வருட காலமாக தொலைபேசி வசதிகள் இல்லாதது பெரும் குறையாக உள்ளது.

இங்குள்ள வர்த்தக நிலையங்கள், நிர்வாகங்கள், குடியிருப்புக்கள், போன்றவற்றிற்கு தொலைபேசி கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்ற போதிலும், இயங்கவில்லை. இதனால் அவசர தேவைகளின் போது தலவாக்கலை, நுவரெலியா அட்டன் போன்ற பிரதான நகரங்களுக்கு சென்று தமது தேவைகளை பூரணப்படுத்திக் கொள்கின்றனர். இவ்வாறான வேலைகளில், சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் பல அசௌகரியங்கள் ஏற்படுவதுண்டு.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கொண்டு மகாநாடொன்றை நடாத்தி இப்பகுதி மக்கள் பயன் பெறக்கூடிய வகையில் தொலைபேசி வசதிகளை செய்து கொடுக்குமாறு மத்திய மாகாண சபை உறுப்பினர் திரு.எஸ்.எஸ். அருள்சாமி தபால், தந்தி, தொலைதொடர்புகள் அமைச்சர் திரு. அதிகாரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மனுப் போட்டும் பயனில்லை. மனமுடைந்து போனார்கள்! கஷ்டப்படுகிறார்கள் கற்கைநெறி மாணவர்கள்!

(தலவாக்கொல்லை நிருபர்)

பட்டப்பின் படிப்பு கற்கைநெறி மாணவர்கள் பெரும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர். தலவாக்கலை, அட்டன், நுவரெலியா, இராகலை, மஸ்கெலியா, பொகவந்தலாவை போன்ற இடங்களில் இருந்து மேற்படி கற்கை நெறியில் பங்குகொள்வோர் கண்டியிலுள்ள பிராந்திய நிலையத்திற்கே செல்ல வேண்டும்.

கற்கை நெறி வார இறுதி நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.00 மணிவரை நடைபெறுகிறது. பரீட்சையின் போது 85% வரவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சீரான பஸ் போக்குவரத்து இல்லாமையால் காலையில் உரிய நேரத்திற்கு சமூகமளிக்க முடியாமலும் மாலையில் 4 மணிக்குப்பின் திரும்பிச் செல்ல முடியாமலும் பலர் பரிதவிப்புக்குள்ளாகின்றனர்.

உரிய நேரத்தில் கற்கை நெறியினை மேற்கொள்வதற்காக கண்டியில் இரவு தங்கவேண்டிய நிலை பலருக்கு ஏற்படுகிறது. இதனால் பெருந்தொகை பணச் செலவு ஏற்படுகிறது. இக்கற்கை நெறியின் பதிவுக் கட்டணமாக ரூ2000/- ஏற்கெனவே செலுத்தப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

கடந்த ஆண்டு இத்தகைய சிரமங்கள் காரணமாக இப்பகுதியில் பலர் பரீட்சைக்குத் தோற்றாமல் விட்டனர் என்பதும் கவலைக் குரியதாகும்.

அட்டனில் அல்லது நுவரெலியாவில் பிராந்திய நிலையம் ஒன்றை ஏற்படுத்தி இக்கற்கைநெறி மாணவர்களுக்கு வசதியேற்படுத்திக் கொடுப்பது பல்வேறு சிக்கல்களைத் தீர்க்கும். இதுசம்பந்தமாக தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை மனுக்கள் குறிப்பிட்ட மாணவர்களால் விடுக்கப்பட்டுள்ளன.

## "இலங்கை நடுவர்கள் மோசம்" இந்திய சஞ்சிகைகள் பாய்ச்சல்!



இந்திய-இலங்கை கிரிக்கெட் போட்டிகளில் அணிகளின் ஆட்டத்தை விட அதிக கவனத்திற்குரியவர்களாகிப் போனவர்கள் நடுவர்கள்தான். அவர்கள்தான் விளையாட்டின் வெற்றி தோல்வியை நிர்ணயித்த கதாநாயகர்கள்.

இந்தியாவில் இருந்து பல்வேறு மொழிகளில் வெளியாகும் 'இந்திய டுடே' சஞ்சிகை நம்நாட்டு நடுவர்களை காரமாக கண்டித்துள்ளது.

"கடைசி ஒரு நாள் போட்டியிலும் ஒரு நாள் போட்டித் தொடரிலும் இந்தியா தோல்வி அடையக் காரணம் மகா மோசமான அம்பயரிங்தான். கடைசி ஒரு நாள் போட்டியின் அம்பயர் பீட்டர் ரூபின் இனி எந்தச் சர்வதேசப் போட்டியையும் தாக்குப்பிடிக்க முடியாத அளவு படு மோசமாகப் பணியாற்றினார்" என்று கருத்து வெளியிட்டுள்ளது இந்தியா டுடே.

இலங்கை அணியில் அரவிந்த டி சில்வாவின் ஆட்டத்தை இந்தியா டுடே பாராட்டியும் இருக்கிறது.

இலங்கையின் அம்பயறிங் சரிப்படுத்தப்படாவிட்டால் அவர்கள் வெளிநாட்டில் நடக்கும் எந்த டெஸ்ட் மேட்சிலும் ஜெயிக்க முடியாது என்று 1985ம் ஆண்டு கபில்தேவ் சொன்னதையும் இந்திய டுடே நினைவூட்டியுள்ளது.

இந்தியாவில் இருந்து வெளிவரும் "இலஸ்ரேட்டட் வீக்லி" என்னும் சஞ்சிகை உலகில் மிக மோசமான கிரிக்கட் ஆட்ட நடுவர்கள் உள்ள நாடுகளில் இலங்கை முதலாமிடத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

மிக மோசமான நடுவர்கள் விடயத்தில் இலங்கைக்கு முதலாமிடம். மிகச் சிறந்த நடுவர்கள் உள்ள நாடுகளில் இங்கிலாந்து முதலாமிடத்தில் இருப்பதாகவும் அச் சஞ்சிகை பட்டியல் ஒன்று வெளியிட்டுள்ளது.

## மலையகத் தமிழ்ச் சங்கம்-ஆண்டுவிழாவுக்கு ஆயத்தம்!

(எஸ்.ஜி. ஸீ)

நுவரெலியா சினிசிட்டா அரங்கினில் எதிர்வரும் செப்டெம்பர் 4ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மலையக தமிழ்ச் சங்க ஆண்டு விழா நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம அதிதியாக கிராமிய, தொழிற்றுறை அபிவிருத்தி, உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களும், நூரளைப் பாராளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கம் உட்பட மத்திய மாகாண சபை கல்வி அமைச்சர் திரு. எஸ். சதாசிவம் மற்றும் இதர உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் பல கலைநிகழ்ச்சிகளும், கவியரங்கு- கருத்தரங்கு என்பவற்றுடன் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

## வானம் பொழியவில்லை! வரட்சி தீரவில்லை!!

(குருநாகல் நிருபர்)

குருநாகல் மாவட்டத்தில் பரவலான முறையில் வரட்சி தொடர்ந்து நிலவி வருகின்றது. இதனால் ஆறு, குளங்களில் நீர் வற்றியுள்ளது.

மனிதர்கள் மட்டுமல்ல, ஆடு, மாடுகளும் நீருக்காக பெரிதும் கஷ்டப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

இந்த சிறுபோகத்தில் ஆயிரக் கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் நீரின்றி கருகி நாசமாகியுள்ளன.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


(சிறு விளம்பரப் பகுதி)

## விசேட கணித வகுப்புக்கள்

G.C.E.(O/L) பரீட்சைக்கு அண்மித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

கணிதப் பாடத்தின் சகல பாட விதானங்களும் மூன்றே மாதத்தில் கற்பித்து முடிக்கப்படும். தனி மாணவருக்கோ அல்லது குழுவுக்கோ உங்கள் இல்லங்களில் வைத்துக் கற்பிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு**

க. நிரு
10, இராமகிருஷ்ணா வீதி,
வெள்ளவத்தை.



## "இலவச டயரி - 1994"

THE ENGLISH TEACHER இதழ் அறிமுகத் திட்டத்தின் கீழ், GOLD FOIL முகப்பும், பக்கத்திற்குப் பக்கம் ஆங்கில பொன் மொழிகளும் அடங்கிய அழகிய 1994ம் ஆண்டுக்கான டயரியொன்றினை முன்கூட்டியே இலவசமாகப் பெறுங்கள்.

நீங்கள் ஆங்கிலம் கற்க ஆசையுள்ளவராக இருந்தும், கற்ற புத்தகங்களும், சென்ற டியூசன் வகுப்புகளும் போதியளவு தமிழில் விளக்கம் தராமல் இருக்கலாம். அதனால், ஒரு வாக்கியத்தை சுயமாக அமைத்துப் பேசவோ, ஆங்கில வாக்கியங்களின் பொருளை விளங்கிக் கொள்ளவோ முடியாதிருக்கலாம். வினைச்சொற்களை எப்படி உபயோகிப்பது என்று தெரியாது தடுமாறலாம். இவற்றுக்கெல்லாம் போதிய விளக்கம் தந்து ஆசிரியர் உதவியின்றியே, ஆசிரியர் முன் நின்று கற்பதுபோல் கற்பிக்கிறது THE ENGLISH TEACHER இதழ்.

ஆங்கிலம் கற்க வசதியற்ற கிராமப் புறவாசிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம்! இது நீங்கள் நினைப்பது போன்று வழமையான ஒன்றல்ல. முற்றிலும் புதுமையானதும் வண்ணப் படங்கள் நிறைந்ததுமாகும். ஆசிரியர்கள், அறிஞர்கள் பலரது அமோக பாராட்டைப் பெற்றது.

THE ENGLISH TEACHER இதழோடு 1994ம் ஆண்டு டயரியையும் V.P.P. மூலம் பெற விண்ணப்பத்துடன் ஆங்கிலத்தில் உங்கள் விலாசமிட்டு - 5.50 முத்திரை ஒட்டிய நீண்ட உறையையும் வைத்து உடன் அனுப்பி முன்னுரிமையைப் பெறுங்கள்.

(TET தொடர்பு இலக்கம் பெற்ற சகலருக்கும் இந்த டயரிகள் இலவசமாக அனுப்பப்படவுள்ளதால் ஏற்கெனவே இதழ் பெற்றவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை. கொழும்பு தவிர்ந்த ஏனைய பகுதியிலுள்ளவர்களுக்கே இந்த இலவச சலுகை. டயரிக்காகவன்றி ஆங்கிலம் கற்க ஆசையுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்குக)

THE MANAGER (TET)
SHUJAH PUBLICATIONS, P.O.BOX: 286, COLOMBO.


## காவல் அதிகாரி அறையில் கள்வர்கள் கன்னமிட்டனரா?

(அட்டாளைச்சேனை நிருபர்)

அண்மையில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில், நிலையப் பொறுப்பதிகாரியின் 'அறை' ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு அறையினுள்ளிருந்த 'பிஸ்ரல்' ஒன்று திருட்டுப் போனதாக தெரிய வருகிறது. இதனையடுத்து, இத் திருட்டுச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் மூவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

## பணயக் கைதிகள் என்ன பகடைக்காய்களா?

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறைகளிலுள்ள பாதுகாப்புப் படையினரை விடுதலை செய்வது குறித்து அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தமை குறித்து இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் தனது ஆழ்ந்த விசனத்தைத் தெரிவிக்கிறது.

இந்தச் சிறைக் கைதிகளின் நிலையையும் அவர்களை விடுவிக்கலாம் என்ற முழு எதிர்பார்ப்புகளுடனும் யாழ்ப்பாணம் சென்ற அவர்களின் உறவினர்களுடைய மன உளைச்சலையும் பரிவுடன் பரிசீலனை செய்ய வேண்டும் என அரசையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் கேட்டுக் கொள்கிறோம்.

தங்களுடைய இராணுவத் தந்திரோபாயங்களுக்காக இவர்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்துவதை நிறுத்தி இவர்களை உடனே விடுதலை செய்யுமாறு விடுதலைப்புலிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

தம் வசமுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு அரசையும் விடுதலைப் புலிகளையும் மனிதாபிமானத்தின் பெயரால் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தலைவர் சார்ள்ஸ் அபேசேகர அவர்கள் தினமுரசுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பறந்து விட்டார் பம்மாத்து சாமியார் ஏமாறாதே! ஏமாற்றாதே!

(தலவாக்கொல்லை நிருபர்)

தீராத பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறி சில சித்து விளையாட்டுக்களினால் பக்தர்களை மயக்கி பணம் பண்ணும் இவரைப்பற்றி இப்பகுதியில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

ரூ 201/= கட்டிய பின்பே இவரைப் பார்க்க அனுமதி. வெறுங்கையில் விபூதி எடுப்பது போன்ற ஸ்பெசல் வேலைகள் சிலவற்றைச் செய்து பக்தர்களின் நம்பிக்கையை பெற்றுக் கொண்ட இச்சாமியார் பார்ப்பதற்கு அசல் தமிழக எம்.எல்.ஏக்களில் ஒருவரைப் போல தோற்றமளிக்கிறார்.

சில பக்தர்களின் வீடுகளில் தங்கியிருந்து தமது திருவிளையாடல்களை நடத்திய இச்சாமியார் பகிரங்கமாகப் பிடிபடும் முன்னர் தமிழ்நாட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டார்.

படித்தவர்கள் எனக் கூறிக் கொள்ளும் சிலர் தாங்கள் ஏமாந்தது மட்டுமின்றி மற்றவர்களையும் ஏமாறச் செய்வது எவ்வளவு ஏமாற்று வித்தை?

## வீதியின் விதியா இது?

காத்தான்குடி பிரதான வீதியுடன் இணைந்த குறுக்கு வீதியான 5ம் குறிச்சி அரபிக்கலாசாலை வீதி வாகனங்களின் போக்குவரத்தால் மிகவும் பழுதுற்ற நிலையில் பல வருடங்களாக காட்சியளிக்கின்றது. ஜனாதிபதி இடம்பெயர் சேவையின் போது சகல வீதிகளும் இப்பகுதியில் புனரமைக்கப்பட்டன. ஆனாலும் இவ்வீதி கைவிடப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது. என்றுதான் இக்குறை தீருமோ?

ஸஹ்ரான்- காத்தான்குடி-3.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—14

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | ■ |
| | 3 | | | | | 4 |
| 5 | | | | | 6 | |
| ■ | | 7 | | | | |
| 8 | | | ■ | 9 | | ■ |
| | ■ | 10 | | | | 11 |
| 12 | | ■ | 13 | | ■ | |

**இடமிருந்து வலம்**

1. இங்கு தீர்ப்புக்கள் உருவாகின்றன.
3. செய்யும் காரியம் கடினம் என்றால் இப்படியும் சொல்வதுண்டு.
5. நேர்மையற்ற மனிதர்களை இப்படியும் சொல்வதுண்டு.
7. இதைக் கையில் எடுத்தவர்கள் நெடுங்காலம் நிலைத்ததில்லை.
10. இந்த நாட்களில் அதிகாலையில் எழுந்து விடுவார்கள் பக்தர்கள்.
12. அதிகம் தாங்கினால் முதுகு வளையும்.
13. சிற்பத்தையும் உருவாக்கக் கூடியது.

**மேலிருந்து கீழ்**

1. இதனைப் பாவித்துத் தபாலையும் உடைக்கலாம்.
2. பறவைகளில் ஒன்று.
3. பிரபல ஆலயம் ஒன்று இங்கே இருக்கிறது.
4. முன்றெழுத்து மந்திரம் இளம் உள்ளங்களுக்கு.
6. உலக அறிவில் ஒரு பகுதி.
8. இப்போது உங்கள் கைகளில் இருக்கிறது. சுருக்கமாய் இப்படித்தான் அழைப்பீர்கள்.
9. உலோகங்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
11. சத்துள்ள பானம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டை ஒன்றில் மட்டும் வெட்டி ஒட்டி 11.9.93 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். (அஞ்சலட்டைகளை மாத்திரம் உபயோகிக்கவும்) அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல.-14
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகளுக்கு தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-12க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தா | ம் | பூ | ல | ம் | ■ | 2 வ |
| ம | ■ | 3 த | ப் | பு | ■ | ளை |
| ரை | கா | 4 வி | ■ | 5 ட | ரி | ய |
| ■ | 6 பா | சா | ங் | கு | ■ | ல் |
| 7 ப | ■ | ள | ■ | ■ | 8 பு | ■ |
| ல் | 9 ச | ர் | 12 வா | தி | கா | ரி |
| லி | 10 வ | ■ | ர் | பா | ர் | 11 த |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.12இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. புஸ்பராணி சிவலிங்கம்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
கொழும்பு-07.
2. வி. ரவீந்திரன்
கிருலப்பனை.
3. ஏ.எஸ்.இஸட். முனவ்வரா
தர்கா நகர்.
4. வீ.சிவப்பிரகாசம்
வெள்ளவத்தை.
5. கே.தவமலர்
பண்டாரவளை.
6. சா. நிகேதன்
கண்டி.
7. எஸ்.என். இலியாஸ்
கல்முனை.
8. கு. இந்திரா
கொழும்பு-7.
9. ரவி மாலதி
மட்டக்களப்பு.
10. எம். தாவூத்
பொலன்னறுவை.

இந்த. அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.

## புகார் பெட்டி

### ஆதாரம் சொல்லி அடையுங்கள் வாயை!

இலங்கையில் வெளிவரும் ஆங்கில, சிங்கள மற்றும் ஏனைய தமிழ் இதழ்களில் வெளிவராத மிகவும் அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் தினமுரசில் இடம் பிடித்து எம் போன்ற வாசகர்களுக்கு விருந்தாகின்றன. ஆனால், இவற்றில் உண்மை எதுவுமில்லை என்று எம் ஊரில் சிலர் வாதிடுகின்றனர்.

தினமுரசின் ஆக்கங்களால் கவரப்பட்ட எங்களுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. தினமுரசில் வெளியாகும் கதைகள் கற்பனையல்ல என்பதனை ஏதாவது ஒரு வழியில் நிரூபிக்க சான்றுகள் இருந்தால் பிரசுரித்து தூஷிப்பவர்களின் வாயை அடைக்க வேண்டும் என்று அன்பாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அப்துல் கரீம், அப்துல் பாரி
மடவல பஸார்.

## ஆதாரம் உண்டு — விடுங்கள் கவலையை!

*அன்புள்ள அப்துல் கரீம், அப்துல் பாரி,*

*வணக்கம்.*

*முரசு ஆதாரமில்லாத தகவல்களை வெளியிடாது.*

*வெளியிடப்படும் செய்திகளுக்கு முரசிடம் ஆதாரங்கள் உண்டு.*

*உலகில் எத்தனையோ விசித்திரங்கள். நேரில் பார்த்தால் வியக்கிறோம். காதில் கேட்டால் அப்படியிருக்குமா? உண்மையோ என்று ஆச்சரியத்தோடு நினைக்கிறோம்.*

*சமீபத்தில் திருமலையில் கூட மனிதக் குரங்கின் முகத்தோடு ஆட்டுக்குட்டி ஒன்று பிறந்து பின் மரித்தது.*

*அக்கரைப்பற்றில் நெற்றியிலே கண்ணோடு முயல் ஒன்று பிறந்து இறந்தது.*

*சில வெளியே தெரிகின்றன. சில சம்பந்தப்பட்ட ஊர்களோடு மட்டுமே நின்றுவிடுகின்றன.*

*வெளிநாடுகளில் ஆச்சரியங்களைத் திரட்டவென்றே கமராவோடு அலைகிறார்கள்.*

*அரச குடும்பத்து அந்தப்புரம் வரை கமரா எட்டிப்பார்க்கிறது. அது போல் ஆச்சரியமான விசயங்களையும் தேடித் துருவிப் பார்க்கிறது.*

*வெளவால் பையன் பற்றிய செய்தி மட்டுமல்ல, அது தேடப்படும் விளம்பரச் சுவரொட்டியும் வெளிவந்திருக்கிறது. அது இங்கே பிரசுரமாகியுள்ளது. பாருங்கள்.*




*வேறு சில சர்ச்சைக்குரிய விடயங்கள். மாண்டுபோன அமெரிக்க ஜனாதிபதி கென்னடி உயிரோடிருப்பதாக அவரது அந்தரங்க வைத்தியர் சொன்ன செய்தி. இது முன்னர் அமெரிக்க தொடர்பு சாதனங்களில் கூட பேசப்பட்ட ஆச்சரியமான சர்ச்சை. இப்போது பிரபல எழுத்தாளர் படத்தோடு சொல்கிறார் கென்னடி சாகவில்லை என்று.*

*அது பொய்யாக இருக்கலாம். ஆனால் உலக அரங்கில் எழுந்துள்ள புதிய சர்ச்சைக்குரிய செய்தி என்ற வகையில் நாம் அதனைப் பிரசுரிக்கிறோம். அவ்வளவுதான்.*

*உலகில் எத்தனை வித ஆச்சரியங்கள், எப்படியான தகவல்கள் எல்லாம் வெளியாகின்றன என்பதை நமது வாசகர்களும் அறிய வேண்டாமா? அதற்குத்தான்.*

*கப்பலை விழுங்கிய சுறா செய்தி. கடலில் மீன் பிடித்தவர்கள் சிலர் படத்தோடு வெளியிட்ட தகவல். கனடாவில் இருந்து வெளிவரும் பிரபலமான 'சண்' பத்திரிகையில் அது முகப்புச் செய்தி. காவல்துறை அதை உறுதிப்படுத்தவில்லை. ஆனால் படகு காணாமல் போனதாக புகார் கிடைத்ததாக கடல் காவல் அதிகாரிகள் கூறியுள்ளார்கள். அதனை எமது கனடா நிருபரும் திரட்டி அனுப்பியிருந்தார்.*

*எனவே, ஆச்சரியமான சர்ச்சைகள், உலக நடப்புக்கள், வியப்பான தோற்றங்கள் என்பனவற்றை தொடர்ந்து முரசு தரும். ஆதாரம் அதன் வசம் இருக்கும். ஆகவே கவலை வேண்டாம். உங்கள் அபிமானத்திற்கு எம் நன்றி.*

**வாழ்த்துக்களோடு — ஆசிரியர்.**

## நுளம்பு பெருகுது தடுக்காதோ நகரசபை?

புத்தளம் நகர மத்தியில் அமைந்துள்ள பிரதான இடம் புத்தளம் நகர சபை. இதனைச் சுற்றி வாசிகசாலை, நீதிமன்றம், கல்விக் காரியாலயம், கச்சேரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், வங்கிகள், அரசாங்க, தனியார் பஸ் நிலையங்கள், பொலிஸ் நிலையம், விவசாய இலாகா, விளையாட்டு மைதானம், வியாபார நிலையங்கள் என்பன அமைந்துள்ளன. இவ் வியாபார நிலையங்களிலிருந்து வெளியாகும் கழிவு நீர் விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதியில் தேங்கி நின்று, பெரும் நாற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனால் இவ்விடத்தில் நுளம்புகள் அதிகளவில் உற்பத்தியாவதுடன், சுகாதாரத்துக்கும் கேடு விளைவித்து, சுற்றாடலும் மாசுபடுத்தப்படுகின்றது. எனவே இது விடயத்தில் புத்தளம் நகரசபையினர் கவனம் செலுத்துவார்களா?

எல்.எல்.எம்.ரஹ்மத்துல்லா
புத்தளம்.

## சான்ஸ் இல்லாத சீசன் ரிக்கற்

இராகலை பஸ் நிலையமானது நுவரெலியா, வத்துமுல்லை, ஹைபோரஸ்ட், உடபுஸல்லாவ, வெளிமட ஆகிய இடங்களுக்கு பிரயாணிகள் செல்லும் ஒரு பிரதான பஸ்நிலையமாக விளங்குகிறது.

இராகலை தமிழ் மகா வித்தி யாலயம், சிங்கள மகா வித்தியாலயம் ஆகியவற்றில் மேற்கூறிய இடங்களிலிருந்து வரும் பெருந்தொகையான மாணவ மாணவிகள் கல்வி கற்கின்றனர். இவர்கள் சீசன் ரிக்கட் வைத்திருப்பதுதான் ஒரு குற்றம் போலும். ஏன் என்றால் இவர்களை அரசாங்க பஸ்களில் ஏற்றாமல் பஸ் நடத்துனர்கள் சென்று விடுகின்றனர். வசதியான குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தனியார் பஸ்களில் செல்கின்றனர்.

இது இப்படியே தொடருமாயின் ஏழை, எளிய மாணவர்களின் கல்வியின் நிலை என்ன? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை கொள்வார்களா?

"நலன் விரும்பி"
அ. ஜெயக்குமார்.

## தேவை ஒரு மைதானம்

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் விளாயாடுவதற்கு ஒரு மைதானம் இல்லாமையால் மாணவர்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் தமது திறமையை வெளிக்காட்டுவதற்கு தடையாக உள்ளது. தற்காலிகமாக அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் மைதானத்தைப் பயன்படுத்தி வந்தனர். இக் குறைபாடு குறித்து பல அரச அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தும் இன்னும் மைதானம் கிடைக்கவில்லை. குறைபாடு குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று விளையாட்டு வீரர்கள் தினமுரசுக்கு தெரிவித்துள்ளனர்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ஆளுங் கட்சிக்குள் அடுத்த தலைவராகும் ரணில்! கரம் கோர்ப்பார்களா காமினியும் ரணிலும்?



**த**லைநகர அரசியல் நிலவரம் விறுவிறுப்பாக இன்னும் மாறவில்லை.

திருமதி சந்திரிக்கா வெளிநாடு சென்றது பற்றி அவரது கட்சியின் மத்தியிலும் சிறு சிறு அபிப்பிராய பேதங்கள்.

முன்பு வெளிநாடு சென்று நீண்ட காலம் தங்கியிருந்ததையும் சிலர் நினைவூட்டுகிறார்கள். உள்நாட்டு அரசியலில் தீவிரம் காட்டுவதற்கு தனது வெளிநாட்டுப் பயணங்களை அவர் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது சிலரது அபிப்பிராயம்.

ஆரம்பத்தில் இருந்த வேகத்தையும் உற்சாகத்தையும் திருமதி சந்திரிக்காவிடம் இப்போது காணமுடியாமல் போயிருப்பது அவரது கட்சியினருக்கு ஏமாற்றமே என்று தெரிகிறது.

மாகாணசபைத் தேர்தலின் பின் வெற்றி பெற்ற சூட்டோடு பலத்த எதிர்பார்ப்புகளை உருவாக்கிக் கொண்டிருந்தார்.

கட்சிக்குள் திருமதி சந்திரிக்காவின் பிரதான போட்டியாளரான திரு அநுராவை திருமதி சிறிமாவோ வெளியேற்றியது அவருக்கு ஒரு ஆறுதல். ஆனாலும் சந்திரிக்கா பெரிய ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.



எதிர்க்கட்சிகள் மாகாண சபையில் அதிகாரத்திற்கு வருவதன் மூலம் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் முன்னேற்றங்கள் ஏற்படும் என்று கருதப்பட்டது.

ஆயினும் மேல் மாகாண சபை முதல்வர் திருமதி சந்திரிக்கா பாரிய பிரச்சனைகள் எதனையும் கிளப்பவில்லை. அவ்வப்போது குறை கூறுவதோடு சரி.

ஆக, சுவாரசியமான மோதல்கள் இல்லாத அரசியல் அரங்கம். எல்லோரிடமும் ஒரு சோர்வு காணப்படுகிறது. மறைந்த ஜனாதிபதி பிரேமதாச உயிரோடு இருந்தவரை எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி குறிவைக்க ஒருவர் இருந்தார். அவர்மீது கண்டனம் தொடுப்பதற்கென்றாலும் ஆக்ரோசமாகக் கூட்டம் போட்டார்கள். இப்போது அவரும் இல்லை.

ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கா சர்ச்சைகளை உருவாக்க விரும்பவில்லை.

தகவல் தொடர்பு சாதனங்களில் கூட அதிகம் பார்க்க முடியாத ஒரு ஜனாதிபதியாக இருக்கிறார்.

அடிக்கடி பார்க்க முடியாமையால் எதிர்க்கட்சிகளும் அவரை மறந்து போய் விடுகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆளும் கட்சி வட்டாரத்திலும் சுறு சுறுப்பான நிலமை காணப்படவில்லை.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா அவர்களின் பாதையில்தான் செல்கிறோம் என்று ஆளும் கட்சி அடித்துச் சொல்கிறது.

என்னதான் சொன்னாலும் தலைமைகள் மாறும் போது அணுகுமுறைகளும் மாறத்தான் செய்யும். மாறித்தான் உள்ளன.

கட்சி வேலைகளிலும் சற்று உற்சாகம் குறைந்துள்ளது போலவே தென்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**—நாரதர்—**

வேலைப்பளு கூடியவராகத் தெரிகிறார். அரசாங்கத்தின் சக்திவாய்ந்த தலைவர்களில் ஒருவராக வளர்ந்து வருபவர் என்று அவர் பற்றியே மக்களால் பேசப்படுகிறது.

பிரதமர் ரணில் விடயத்தில் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் இருப்பதாக எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் சில கூறிவருகின்றன.

ஆளும் கட்சிக்குள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்காவுக்குப் பின்னர் யார் என்ற கேள்விக்கு ரணில் என்றுதான் வெளியே தோற்றம் தெரிகிறது.

திரு. காமினி திசாநாயக்காவை கட்சிக்குள் மீண்டும் கொண்டு வர பிரதமர் ரணிலுக்கு பிடிக்காதவர்கள் முயல்வதாகவும் பேசப்படுகிறது.

கட்சி வளர்ச்சி கருதியே திரு காமினியை உள்ளே கொண்டுவர முயல்வதாகவும், ரணிலுக்கும் அதில் சம்மதமே என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும் காமினியை ஆளும் கட்சிக்குள் மீண்டும் புகுத்துவதில் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது. முயற்சியின் பின்னணியில் இருப்பதாகவும் ஒரு நம்பகமான தகவல்.

திரு. ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் மருமகனே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஆகவே மருமகனுக்கு முரணான நிலை ஒன்றினை ஜே.ஆர். தோற்றுவிக்க மாட்டார். காமினியை உள்ளே கொண்டுவரும் அதே சமயத்தில் பிரதமர் ரணிலுக்கும் தீர்க்கமான பாத்திரம் ஒன்று இருக்கும்படி தான் பார்த்துக் கொள்வார்.

சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் திரு காமினியை பிரதமர் ரணிலுக்கு அருகே அமரவைத்துப் பார்த்தார் ஜே.ஆர். இளைய தலைமுறைகளை நெருங்கிவரச் செய்கிறாரா ஜே. ஆர். என்று அரசியல் பார்வையாளர்கள் கேட்கின்றனர்.

மிக முக்கியமான ஒரு விசயம். இன்றைய அரசாங்கத்தில் உள்ள தலைவர்களில் அதாவது சிங்களம் பேசும் தலைவர்களில், ரணில் மாத்திரமே தமிழர்களால் பேசப்படுகின்றவராக இருக்கின்றார்.

அவரும் தமிழ் பேசும் மக்கள் தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டும் வருகிறார். தமிழிலும் உரையாற்ற முயற்சி செய்கிறார்.

இதே வேளை திரு. காமினி திசாநாயக்க ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவோடு பேசி விட்டு நிலமைகளைக் கூர்ந்து கவனித்து வருகிறார். அவசரப்படவில்லை. பொறுமையாகக் காத்திருக்கிறார்.

அமைச்சரவை மாற்றங்களும் நடந்துள்ளன.

மூத்த அமைச்சரும், இனப்பிரச்சனை விடயத்தில் நீண்டகாலப் பரிச்சயம் உடையவருமான ஏ.சி.எஸ் ஹமீத் அவர்கள் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவியேற்ற கையோடு தன் ராஜதந்திரத் திறமையை வெளிப்படுத்தி காட்டியும் இருக்கிறார்.

சர்வதேச அரங்கில் இலங்கையின் இனப்பிரச்சனை விடயத்தில் தலையீடுகள் பற்றிய பேச்சுக்கள் எழுந்துள்ளன.

இந்தச் சமயத்தில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை வெளிவிவகார அமைச்சராக நியமித்துள்ளமை ஜனாதிபதியின் புத்தி சாதுரியத்தைக் காட்டுகிறது.

எனினும் அமைச்சர் ஹமீத்தின் ராஜதந்திரம் அந்தரத்தில் நிற்கிறது. அது கால் ஊன்றி நிற்கவேண்டிய தளம் அரசால் உருவாக்கப்படவில்லை.

அரசியல் தீர்வுக்கான எவ்வித முயற்சியும் இல்லாமல் வெளியுலகைத் திருப்திப்படுத்துவது வெறும்கையால் முழம் போடும் வேலை.

ஒரு குறிப்பிட்ட வரையறை மட்டும் அமைச்சர் ஹமீத் அதனைச் செய்யலாம். பின்னர் அவருக்கே சலிப்புத் தோன்றிவிடும்.

உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றை நடத்தி தமிழ் பேசும் மக்கள் எமது பக்கமே என்று தேர்தல் முடிவினைப் பெற்று அதனை வெளியுலகுக்குக் காட்டலாம் என்று அரசு நினைக்கக் கூடும்.

சாதகமான முடிவோடு அமைச்சர் ஹமீத் அவர்களை அகில உலக அரங்கில் ஒரு வலம் வர வைக்கலாம் என்றும் எண்ணக்கூடும்.

ஆனால் எதிர்வரும் ஜனவரியில் உள்ளூராட்சித் தேர்தல் கிழக்கிலும் வவுனியாவிலும் நடைபெற்றாலும் கூட அரசாங்கத்திற்கு சார்பான முடிவுகள் வெளிப்படுமா என்பது சந்தேகமே.

மட்டக்களப்பு- திருமலை போன்ற பகுதிகளில் அரசு பிரச்சனைகளை அரசியல் தலைமைத்துவத்தின் மூலம் அணுகாமல் இராணுவத்தினர் ஊடாகவே அணுகுகிறது.

திருமலையில் ஆளும் கட்சியின் அமைப்பாளராக இருக்கும் பெரும்பான்மை இனப் பெண்மணி மீது தமிழர்களுக்கு அதிருப்திகள் நிலவுகின்றன.

குடியேற்றங்கள் தொடர்பாக நிறைய முரண்பாடுகள் - பிரச்சனைகள்.

அம்பாறை மற்றும் கிழக்கின் சிங்கள வாக்குகள் உள்ள பகுதிகளிலும் கூட அரசுக்கு சார்பான வாக்குகள் விழுமா என்பது சந்தேகமே.

ஏனைய பெரும்பான்மை இனக் கட்சிகள் வடக்கு கிழக்கை' அரசு தமிழர்களுக்கு தாரை வார்த்துக் கொடுக்கப் போவதாகக் கூறக்கூடும். வேறு பிரச்சார முறைகளையும் நாடக்கூடும்.

எனவே- அரசு முதலில் செய்ய வேண்டியது தனது கட்டுப்பாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம் பகுதிகளில் உள்ள மக்களிடையே நம்பிக்கைகளை ஏற்படுத்துவதேயாகும்.

இராணுவத்தினர் மூலம் அரசியல் பிரச்சனைகள், நிர்வாகப் பிரச்சனைகள் என்பவற்றை அணுகாமல் அரசியல் ரீதியில் அணுக வேண்டும்.

அங்குள்ள மக்களின் உண்மையான பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

துரதிஷ்டவசமாக பெரும்பான்மை இனத் தலைமைத்துவக் கட்சிகளில் உள்ள தமிழ் பேசுவோர் வாய்திறப்பதில்லை.

வாய்திறந்தால் தமக்குரிய வசதிகள் போய்விடுமோ என்று அஞ்சுகின்ற பழக்கம் இன்று நேற்றல்ல தொன்று தொட்டே நிலவிவருகிறது.

விதி விலக்குகளும் உண்டு. தமிழ் அமைச்சர் ஒருவர் புலிகள் உட்பட சகல தமிழ் அமைப்புக்களையும் குறை கூறுவதில் கெட்டிக்காரர். ஆனால் இதுவரை தமிழர் பிரச்சனை பற்றியே அவர் பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை.

ஆக, அரசாங்க தலைமை தமது கட்சி, தமது அமைப்பாளர்கள் என்ற வட்டத்திற்குள் நிற்காமல், அவர்கள் சொல்வதை மட்டுமே கேட்காமல் மக்களோடு தனது நேரடியான உறவுகளை ஏற்படுத்த வேண்டும்.

ஏனைய கட்சிகளின் கருத்துக் கேட்டே உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்தது உண்மையானால் சகல பிரச்சனைகளிலும் அந்த அணுகுமுறை தொடர வேண்டும் என்றே அனைவரும் விரும்புகின்றனர்.

தலைநகர அரசியலின் சுவாரசியமின்மையும், சோம்பலும் இனப்பிரச்சனை விடயத்திலும் பிரதிபலிக்கிறது.

தலை ஆடாமல் வால் ஆடுவது முறையல்ல. தலைநகரில் அரசியல் அரங்கம் களை கட்டட்டும். துரித முடிவுகள், துணிச்சலான செயற்பாடுகள், நம்பிக்கையூட்டும் அணுகுமுறைகள் என்பவைதான் தேவை. அவற்றையே இன்று நாடு வேண்டி நிற்கிறது.

### அந்த நாள் ஞாபகம்



22.2.92 அன்று கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்ட படம் இது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் பேச்சுக்கு வந்தனர் புலிகள். அதில் பிரதான பாத்திரம் வகித்தவர் அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீத்.

புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், திரு. யோகி போன்றவர்களோடு தனிப்பட்ட நட்பும் ஏற்பட்டது. ஆயினும் என்ன? யாழ் சென்ற அமைச்சரை பலாலியில் வந்து விழுந்த புலிகளின் ஷெல்லே பின்னர் வரவேற்றது. வந்திறங்கி விட்டார் என்று தெரிந்தே தாக்கினார்கள்.

அரசியலில் நிரந்தர நண்பரும் கிடையாது, எதிரியும் கிடையாது என்பார்கள். இது,போர். கொடூர யுத்தம். வெல்வதே குறி. மற்றவை அனைத்தையும் குழியிலே போடு.



## அதிரடி அய்யாத்துரை

**தே**ர்தல் நடத்தும் முடிவு பவர் கட்சிக்குள்கூட விவாதிக்கப்படவில்லையாம். படையினர்தான் விரும்பியிருக்கிறார்கள் போல கிடக்கு. தமிழ் கட்சியள் தேர்தல் வேண்டாமென்று சொன்னாலும் மறைமுகமாய் களத்தில் குதிக்க ஆயத்தங்கள் செய்தவையாம். தள்ளி வைச்சதால சுயேச்சையா நிற்க இச்சை கொண்டவை பாடுதான் வருத்தமான நிலமை.

**அ**கதியள் திரும்பி வரவேணும் எண்டு சொன்னாப் போதுமோ? கேட்டாக் கையில காசு இல்லை எண்டு சொல்லுகினம். காசு இல்லாட்டி அகதிகள் வரமுன்னரே அதைப்பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். அதை விட்டுப்போட்டு முகாமில கொண்டுவந்து காயப்போட்டு வாட வைக்கிறது என்ன நியாயம்? உதாலதானே வெறுப்பு வாறது.

**இ**டைக்கால நிர்வாக விசயத்தில நீலக்கட்சிக்கும் சற்றுச் சம்மதம்தானாம். ஆனால் பாருங்கோ அதில ஒரு பிரச்சனை. வடக்கு-கிழக்குக்கு என்று ஒரு நிர்வாகத்தைப் பற்றி ஆதரித்துப் பேசப்போக, வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொண்டது மாதிரிப் போயிடுமாம். அடடா பார்த்தியளோ எவ்வளவு கவனமாப் பிரச்சனையளைப் பார்க்கினம் எண்டு. உந்த லெவலில போய்த்தானே நாடு வெல வெலத்துக் கொண்டிருக்குது.

**யா**ழ்ப்பாணத்தில இரண்டு எழுத்துக்காரர் கோட்ஸ் நடத்துகினமல்லோ- வாதாடப் போற சட்டத்தரணியள் பயத்தில ஆடுகினமாம். குற்றம் செய்தவையை தப்பவைக்கவும் முயலக்கூடாது. நிரபராதிகளை குற்றவாளியள் ஆக்கவும் முயலக்கூடாது. இன்னொரு விசயம்: குறிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலே ஒரு சதம் வாங்கக்கூடாது. இப்படி எக்கச்சக்கமான கண்டிசன்கள். மீறினால் ஆளுன்ர கொண்டிசனே மாறும். அப்ப உதறத்தானே செய்யும்.

**த**லையிடவோ வேண்டாமோ என்று வெளிநாட்டு ஆக்கள் கேட்கிற விசயம் ஆளும் தரப்பில கொஞ்சம் அதிர்வுகளை ஏற்படுத்தித்தான் இருக்குது. வெளிவிவகார விசயத்தில மாற்றம் செய்ததுக்கு அதுவும் ஒரு முக்கிய காரணம் எண்டு ஒரு கதை.

**கொ**ழும்பில சில தமிழ் ஆட்களே தமிழ் ஆட்களோட சிங்களத்திலதான் கதைக்கிறவை. ஒண்டில் பயம் அல்லது பாசன். அது கிடக்க, ரூபவாஹினியில வந்த சிவாஜியும், ஸ்ரீதேவியும் சிங்களத்தில் பேசினார்கள். சிவாஜிக்காக குரல் கொடுத்தவர் யாரோ? சிம்மக்குரலை சீவி எறிஞ்சு போட்டாருங்கோ. கம்பீரக் குரல் கொடுக்க ஒரு கலைஞர் கூட அகப்படவில்லையோ? தமிழ்படத்தை சிங்களத்தில் மொழிமாற்றிக் கொடுத்தது முற்போக்கான விசயம்தான். அது போல சிறந்த சிங்களப் படங்களையும் தமிழில் மொழி மாற்றித் தந்தால் என்ன? யோசித்துப் பார்க்கட்டும். (எப்பவோ எழுதினது. இப்பதான் இடம் கிடைச்சது)

**பா**ரதியார் கவிதைகளை எத்தனை தரம் படிச்சாலும் சூடு குறையாது பாருங்கோ. சொக்கவைக்கும் காதல் கவிதைகளும் இருக்கு.

இப்ப சூடாக ஒரு பாடல்.

உடன் பிறந்தவர்களைப் போல-இவ்<br>
வுலகினில் மனிதரெல்லோரும்:<br>
திடங்கொண்டவர் மெலிந் தோரை-இங்கு<br>
தின்று பிழைத்திட லாமோ?

சகோதரச் சண்டையில் எல்லாத்தையும் மறந்த எங்கட பொடியளுக்கும் ஏற்ற பாட்டுத்தானே. என்ன சொல்லுறியள்!

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## உலக ரவுண்டப்

# அட..... இதைப் பாருங்கள்.....!
# ..........கட்டிய வீட்டை கட்டி இழுத்தார்!!



உலக சாதனையில் எத்தனை ரகம்? பிரான்சில் உள்ள செயிண்ட் மார்டின்லா பிளேசில் வசிப்பவர் பென்சேஸ் வேவ்ஸ். சாகசம் புரியும் ஆசையுள்ளவர். வீடொன்றைக் கட்டி அந்தரத்தில் உள்ள கேபிள் வழியாக இழுத்துச் செல்லமுடிவெடுத்தார். அவரது மனைவி சகிதம் வீடு கேபிள் வழியாக இழுபட்டு வருகிறது. முன்னால் கேபிள் மீது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டு வீட்டோடு வரும் மனைவிக்கு கையசைக்கிறார். கீழே சிங்கம், புலி வாழும் மிருகக் காட்சிச்சாலை இருக்கிறது. விழுந்தால் விழுங்கல்தான். சாதனை வேகத்தில் அவருக்கு பயமும் இல்லை. அந்தக் கவலையும் இல்லை. எத்தனை மனிதர்கள்! எத்தனை ஆசைகள்!!

## வருகிறது மீண்டும் மரண தண்டனை!

பிலிப்பைன்சில் மீண்டும் மரண தண்டனை சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.

சர்வாதிகாரி மார்க்கோஸ் ஆட்சியில் மரண தண்டனை வழங்கும் முறை அமுலில் இருந்தது. மார்க்கோஸ் 1987ல் விரட்டப்பட்டதோடு மரணதண்டனைக்கும் முடிவு வந்தது.

தற்போது அங்கு குற்றங்கள் பெருகியுள்ளதால் மரண தண்டனையை திரும்பக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மார்க்கோஸ் ஆட்சியில் இருந்தபோது தனது சர்வாதிகாரத்தைப் பாதுகாக்க மரணதண்டனையைக் காட்டி மிரட்டி வந்தார். எனவே பதவிக்கு வந்தவுடன் மரணதண்டனையை விலக்கினார்கள் புதிய ஆட்சியாளர்கள். இப்போது குற்றங்களைக் குறைக்க மீண்டும் மார்கோஸ் காலகட்டம் தேவைப்படுகிறது.

## அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:**

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



**இலக்கம்-06**
**சுப்பர் ஸ்டார் சந்திப்பு**

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................
படத்தின் இயக்குநர் பெயர்:-..............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................
இப்படம் வெளியான ஆண்டு:-..............................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

# அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி அரசியலில் மூக்கை நுளைப்பதால் அதிருப்தி!

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் மனைவி ஹில்லாரி கிளின்ரன் அரசியல் விவகாரங் களிலும் ஆர்வம் காட்டுகிறார்.



ஜனாதிபதி பில் கிளின்ரன் தனது மனைவியின் சொற்படி நடப்பதாக சில விமர்சகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தன் குடும்பத்தின் மீது அளவற்ற பாசம் கொண்டவர் ஜனாதிபதி பில் கிளின்ரன். அதனை அவர் வெளிப்படையாக கூறியும் வருகிறார்.

அதனைப் பயன்படுத்தி பில் கிளின்ரனுக்கு அரசியல் ரீதியில் அபகீர்த்தி ஏற்படுத்த அவரது எதிரிகள் முற்படுவதாக கிளின்ரனின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

தனது கணவரின் தனிப்பட்ட நலன்களில் ஹில்லாரி ஈடுபாடு கொண்டுள்ளார். ஆனால் அரச விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகள் செய்வதில்லை என்பது அவர்களின் வாதம்.

ஆனால் ஹில்லாரி கிளின்ரன் அரசியல் விவகாரங்களில் தலையிடுவதாக பேசப்படுவதை அமெரிக்க மக்களில் ஒரு சாரார் நம்புகின்றனர்.

கிளின்ரனின் செல்வாக்கு வீழ்ச்சியடைய அதுவும் ஒரு காரணமாக அமையலாம்.

## நகர ரவுண்டப்

# திரும்பி வந்த அகதிகள் சொன்ன கதைகள்! திகைக்க வைக்கும் தகவல்கள்!!

**-திருமலை நிருபரோடு ஒற்றன்-**

நமது தகவல் வங்கியாளரைச் சந்திக்கப் போன போது பத்து நிமிடம் தாமதமாகிவிட்டது. ஒரு காகிதத் துண்டு (பயங்கர சிக்கனம்) எழுதி தன் மனைவியிடம் கொடுத்துவிட்டு வெளியே பறந்துவிட்டார்.

ஆவலாக துண்டைப் பிரித்து மேய்ந்தோம்.

கொழும்பின் இரவு விடுதிகளில் இளம் வட்டங்களின் கொட்டங்கள், டிஸ்கோ மோகத்தின் உச்சக்கட்டங்கள் பற்றிய ஜில் ஜில் தகவல்கள் உண்டு. காத்திருந்தேன்: நீர் வரவில்லை. வேலை உண்டு. போகிறேன். இருநாள் கழித்து வாரும். வணக்கம்"

என்று எழுதியிருந்ததைப் பார்க்க வெறுப்பாக இருந்தது. ஆவல் பறந்தது.

என்றாலும் ஒரு பேச்சுக்காக "பரவாயில்லை பின் வருகிறோம். சொல்லுங்கள்"

என்று அவர் மனைவியிடம் சொல்லி விடை பெற்று, பஸ் ஏறி தம்பிடித்து மூச்சைக் காத்து அலுவலகம் வந்து சேர்ந்தோம்.

ஆசிரியர் அழைத்தார். "இம்முறை எங்கே நகர ரவுண்டப்" என்று கேட்க தலையைச் சொறிந்தோம்.

"திருமலையில்தான் இம் முறை ரவுண்டப். அங்குள்ள நமது நிருபர் அனைத்தையும் கவனித்துக் கொள்வார். கூட இருந்து நோட்டமிடும். இப்போதே புறப்படும்"

உத்தரவை நிறைவேற்றினோம்.

■

திருமலை நிருபர் வரவேற்றார். அவர் சுறுசுறுப்பான பேர்வழி.

"தர்ம அடி வாங்கும் ரவுண்டப்போ" என்று மெல்லீ வினவினோம்.

திருமலையில் வெள்ளை வான் ஒன்று நகர ரவுண்டப் செய்து விளாசும் விசயம் கேள்விப்பட்டதால் ஏற்கனவே நம் உள்ளே ஒரு உதறல்.

"இது அகதி முகாம் விசிட். வித்தியாசமாக இருக்கும். விவகாரமாக இருக்காது. பயப்பட வேண்டாம் வாரும்" என்றார் நிருபர்.

திருகோணமலை நகருக்கு வடக்கே உப்பு வெளி மூன்றாம் கட்டையில் நம்மைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டார்.

1990 ஜூனில் வெடித்த இனக்கலவரத்தை மூன்றாண்டுகள் போன பின்னும் மறக்க முடியவில்லை.

உடமைகள் போயின. உயிர்கள் அழிந்தன. சொந்த மண் அந்நியமானது.

பாதுகாப்புத் தேடி தமிழ் இன மனிதர்கள் கடல்தாண்டிப் போயினர்.

தமிழக மண்ணில் இங்கே முகவரி இழந்தவர்களுக்கு முகாம்கள் எழுந்தன. அகதி முகாம்கள்!

நட்புக்கரம் நீட்டியது தமிழகம். நன்றாகக் கவனித்தது தமிழகம். கடல்தாண்டிப் போனோரை உடன்பிறந்தாராக நேசித்து கட்டித்தழுவியது தமிழகம்.

வாழும் நிலம் வேறானாலும் பேசும் மொழி ஒன்றல்லோ என்று பொங்கும் பாசம் காட்டியது தமிழகம்.

தமிழக மண்ணில் ராஜீவ் கொலையும் நம்மவர்கள் சிலரின் வரம்பு மீறல்களும் கசப்பை விதைத்ததும் உண்மை.

அதனால் அகதிகள் சில பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டதும் உண்மை.

அகதிகளை திருப்பி அனுப்பும் முடிவினை இந்திய அரசு விரைவாக செய்தமைக்கு ராஜீவ் கொலை ஒரு முக்கியகாரணி.

இந்திய அமைதிப்படையும் இங்கே அத்துமீறல்களில் ஈடுபட்டதென்பதை மறுத்தல் இயலாது.

கற்பழிப்புக்கள், புலிகளின் மீதான ஆத்திரத்தை பொதுஜனம் மீது பிரயோகித்தமைகள் என்று சாட்டப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மை இல்லாமல் இல்லை.

எனினும் தமிழ் பேசும் மக்களிடையே தெளிந்த அரசியல் தலைமைத்துவம் அதிகாரப் போட்டிகளில் தொலைந்ததின் விளைவுதான் இந்தியாவை இந்தளவுக்கு வெறுத்தொதுங்க வைக்கவும் விரோதிக்கவும் காரணம் என்பதையும் மறுக்க முடியாது.

இப்போது தமிழ் நாட்டிலிருந்து அகதிகள் தாயகம் திரும்பத் தொடங்கியிருக்கிறார்கள்.

திருமலையில் கப்பலில் வந்து இறங்கிய அகதிகளில் ஒரு பகுதியினர்தான் உப்பு வெளியில் தற்காலிக முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

சுற்றிலும் ஆளுயரமதில்கள். அகதி முகாமுக்கு பாதுகாப்பு அரண்போல் தெரிந்தன.

வெப்பநிலையும் இனப்பிரச்சனைபோல் தகித்துக்கொண்டிருந்தது. குடியேற்றப் பிரச்சனை போல திருமலையை வாட்டிக் கொண்டிருந்தது.

சுட்டெரிக்கும் மதியம் பதினொரு மணியிலும் நாடு திரும்பிய தம் உறவுகளைக் காண்பதற்கு பலர் மதில் ஓரத்தில் காத்து நின்றனர்.

முகாமுக்கு உள்ளே இருந்து வெளிப்படும்



முகங்களில் தமக்குத் தெரிந்த முகங்கள் தென்படுகிறதா என்று விழி வாசலைத் திறந்து வைத்து ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

இனிய உறவுகளைப் பிரிதல் எத்தனை பெரிய சோகம். பிரிந்தவர்களுக்கு மட்டுமே நெஞ்சாரத் தெரிந்த கனத்த சோகம் அது.

மூன்றாண்டுகள் இடையே எத்தனை மாற்றங்கள். சொந்த மண் பிரிந்து போய் அங்கு முகாமில் அகதி வாழ்விலும் சிறிய சந்தோசமாய் குடும்ப உறவு காத்ததில் புதிய வரவுகள், புதிய உறவுகள். நிரந்தரமற்ற வாழ்க்கையில் புதிய வாரிசுகள்.

அந்தக் கைக்குழந்தைகளை, அகதி வாழ்வில் மலர்ந்த செல்வங்களை தம் உறவுகளிடம் உச்சி முகரக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

மதில் தடைக்கு மேலாக மழலைகளை வாங்கிஉச்சி முகர்ந்து விழி கலங்கியவர்களைக் கண்ட போது நெஞ்சு கனத்தது.

கூட்டம் வெளியே அதிகரித்த போது பள்ளிக்கூட வாத்தியார் பாணியில் வந்து சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் பிரம்பை ஆட்டியபடி விலகிச் செல்லும்படி கூறிக்கொண்டிருந்தார்.

சிலர் நட்டகல்லாய் நிற்கவே பிரம்புக்கு சற்று வேலை கொடுத்தார்.

நமது நிருபர் நம் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு முகாம் வாசலில் போய் நின்றார்.

காவலுக்கு நின்ற பொலிஸ்காரர் நம்மை மேலும் கீழும் ஒரு பார்வையால் தடவினார்.

நம் நிருபர் எங்கே எப்படி பேச வேண்டும் என்ற வித்தை தெரிந்தவர்.

மெல்லப் பேச்சுக் கொடுத்தார். உள்ளே சென்று பார்க்கும் விருப்பத்தையும் நைசாக வெளியே தட்டிவிட்டார்.

பொலிஸ்காரர் மசியவில்லை. என்றாலும் நம்மீது ஒரு பிடிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். எல்லாம் நம் நிருபரின் பேச்சின் உபயம். அதனால் ஒரு சின்ன அட்வைஸ் தந்தார் பொலிஸ்காரர்.

"முகாம் உத்தியோகத்தர்களைத் தவிர வேறு யாரும் உள்ளே போக முடியாது. உள்ளே யாராவது தெரிந்த அதிகாரி இருந்தால் அவரைப் பிடித்து தொங்கிக் கொண்டு போக வேண்டியதுதான்."

அவர் சொல்லி முடிக்கும் முன்னரே செயலில் இறங்கினார் நமது நிருபர்.

அவருக்குத் தெரிந்தவர் ஒருவர் உள்ளே பணியில் ஈடுபட்டிருந்ததையும் கண்டுவிட்டார். அதிஷ்டம்தான். கையை உயர்த்திக் காட்டி, கண்ணைச் சிமிட்டிக்காட்டி அந்த உத்தியோகத்தரை அழைத்து, அவர் உதவிக்கரம் நீட்டி "உள்ளே வாருங்கள்" என்று அழைக்க, அப்பாடா... புகுந்து விட்டோம் ஐயா.

'நம்ம செல்வாக்கு எப்படி' என்பது போல ஒரு பார்வையை வீசினார் நமது நிருபர். கட்டை விரலை உயர்த்திக்காட்டி அவரை முகம் மலர வைத்தோம்.

உள்ளே கட்டடங்கள், தற்காலிகமாய் முளைத்த கூடாரங்கள், மர நிழல்களின் கீழே என்று குடும்பம் குடும்பமாக அகதிகள் குழுமியிருந்தனர்.

தாய் மண்ணை மிதித்த சந்தோசம் பாதி. இனி என்ன? எப்படி பழைய நிலைக்கு திரும்புதல் என்ற ஏக்கம் பாதியாக தெரிந்த முகங்கள்.

கொஞ்சம் வயதானவராகப் பார்த்து அருகே போனார் நமது நிருபர். நாமும் அவர் பின் சென்று காதைக் கொடுத்துவிட்டு நின்றோம்.

ஜே.ஆர், பெருமாள். வயது 59.பிள்ளைகள் ஆறு பேர். வவுனியா இரண்டாம் கட்டையைச் சேர்ந்தவர். பேச்சோடு பேச்சாக வெளிவந்த விபரங்கள் போதும் என்றநிலையில் கேள்வியைத் தொடுத்தார் நமது நிருபர்.

"நீங்கள் எப்படி இந்தியா போனீர்கள்?"

அந்தக் கதையை யாரிடமாவது சொல்லியே ஆகவேண்டும் என்று காத்திருந்தவராக பெருமாள் படபடவென்று சொன்னார்.

"நான் இந்தியா போகவேணும் எண்டு நினைக்கவேயில்லை. என்ன செய்யிறது வானத்தாலையும், ஆமியாலையும் அடி நடக்கேக்க எப்படி வீட்ல இருக்கமுடியும்? உயிர் மிஞ்சினால் போதும் எண்டு ஓடத் துவங்கினோம்."

என்று சொன்னவர் திடீரென்று கவலையான குரலில் உயிர் தப்பி ஓடலில் இடையிலே மனைவியைப் பிரிந்ததையும் சொன்னார்.

இப்போது மனைவி மன்னாரில் உயிரோடிருப்பது அறிந்ததில் பிரிந்தவர் மீண்டும் கூடும் சந்தோசமும், எதிர்பார்ப்பும் அவர் பேச்சில் தெரிந்தது.

"இந்தியாவில் அகதி முகாம் வாழ்க்கை எப்படி இருந்தது?" என்று நமது நிருபர் விடாப்பிடியாக வினா தொடுத்து விபரம் அறியும் வேகம் காட்டினார்.

அதற்குப் பதில் சொன்னார் பெருமாள். பெருமாள் மட்டுமல்ல வேறு சிலரும் சொன்னார்கள்.

வழிதவறல்கள், அகதிகள் பெயரால் நம்மவர் சிலரின் பணம் தேடும் வியாபாரங்கள் அதில் ஒரு முக்கிய பிரபலமும் உண்டு; சோகவாழ்விலும் பேதம் பார்த்து நடந்த மோதல்கள் என்று பல தகவல்கள் கிடைத்தன. பெரிய மனிதப் போர்வைகள் சிலவும் கிழிந்தன. திகைப்பும் உண்டு. கசப்பும் உண்டு. வறுமையால் வழிதவறிய கதைகளும் உண்டு. அவை அடுத்தவாரம்.

(மறுவாரம் தொடர்வோம்)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

கடந்த ஜுலை 25ந் திகதியன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மணலாறுப் (வெலிஓயா) பகுதியிலுள்ள ஜனகபுர இராணுவ முகாம்மீது நடத்திய தாக்குதல், இராணுவத் தரப்பில் பலத்த இழப்பை மட்டுமல்லாமல், இராணுவ களின் நன்மதிப்பை பெற்றிருந்ததுடன் சாதாரண சிப்பாய்களின் நல்லபிமானத் துக்குரியவர்களாகவும் இவர்கள் விளங்கி யிருந்தனர்.

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ இலங்கையிலிருந்து அரச படையினருக்குமிடையிலான மோதல்கள் பெயரளவில் மட்டுமே ஓர் உள்நாட்டு யுத்தமாக இருக்கின்றதே தவிர அம்மோதல் உண்மையில் இரு நாடுகளின் படையினருக்கிடையே இடம் பெறும் ஒரு பாரிய யுத்தத்தை ஒத்த

அலசுவது–இராஜதந்திரி

# அரைவேக்காடான அரசியலுக்கு வழிவகுக்கும் தேர்தல் முஸ்தீபு

உயர் மட்டத்தில் பெரும் சர்ச்சையையும் உருவாக்கிவிட்டுள்ளது.

யுத்தப் பிரதேசங்களில் பணியாற்றும் அதிகாரிகள், சிப்பாய்களின் உயிரே பறிபோகும் அபாயம் இதுவரைகாலமும் இருந்து வந்தது. ஆனால் ஜனகபுரத் தாக்குதலையடுத்து யுத்தப் பிரதே சங்களில் ப்ணியாற்றும் உயரதிகாரிகளின் பதவிகளும் பறிபோகக் கூடிய சூழ்நிலை தற்போது இராணுவ வட்டாரங்களில் தோன்றியுள்ளது.

ஜனகபுரத்தாக்குதல் புலிகளினால் வெற்றிகரமான முறையில் நடத்தப்பட்டி ருந்தது. இத்தாக்குதலுக்கு புலிகள் 'ஒப்பரேஷன் இதய பூமி' என்று பெயரிட்டிருந்தனர்.

இராணுவத் தரப்பில் சுமார் 50 பேர் வரையிலான சிப்பாய்கள் ஜனகபுரத் தாக்குதலின் போது கொல்லப்பட்டி ருந்தனர். மற்றும் பல கோடி ரூபாய்கள் பெறுமதியான இராணுவ உபகரணங் கள், ஆயுதங்கள் என்பவற்றையும் புலிகள் ஜனகபுர தாக்குதலின் போது தம்வச மாக்கியிருந்தனர்.

ஜனகபுரத்தில் உயிர் இழப்புக்கள் மட்டுமல்லாது, ஆயுத–உபகரண இழப்புக்களும் பாரிய அளவில் காணப் பட்டதையடுத்தே இராணுவத்தலைமைப் பீடம், ஜனகபுரத்தாக்குதல் குறித்து விசாரணையொன்றை மேற்கொண்டி ருந்தது.

இராணுவத் தலைமைப்பீடத்தின் சிரேஷ்ட அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா, இந்த இராணுவ விசாரணை மன்றுக்குத் தலைமை தாங்கியிருந்தார்.

விசாரணை மன்று தனது விசாரணை யின் முடிவில், வடக்கே குறிப்பாக வெலிஓயாப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த உயரதிகாரிகளின் அசமந்தப் போக்கே ஜனகபுரத்தில் பாரிய இழப்பை ஏற்படுத் தியிருந்தது என்று அறிவித்துள்ளது.

இதனையடுத்து வெலிஓயாப் பகுதியின் இராணுவப் பொறுப்பதிகாரி யாகவிருந்த பிரிகேடியர் ஆர்.பி. லியனகே அங்கிருந்தும் இடமாற்றஞ் செய்யப்பட் டுள்ளார்.

இதுதவிர வடபிராந்திய இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் மேஜர் ஜெனரல் ரொஹான் தலுவத்த, வெலிஓயாப் பகுதியின் இராணுவ நிர்வாகம் குறித்து திருப்தி கரமான முறையில் இயங்கவில்லை என்றும் விசாரணை மன்று அறிவித் துள்ளது.

கடந்த ஆண்டு வடபிராந்திய இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, மற்றும் அவரது துணை அதிகாரி பிரிகேடியர் விஜய விமலரத்ன ஆகியோர் உட்பட ஒன்பது சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் புலிகளின் கண்ணி வெடியில் சிக்குண்டு உயிரிழந்தனர்.

இந்த முக்கிய இழப்புக்களையடுத்தே வடபிராந்தியத்தின் இராணுவப் பொறுப் புக்களில் மாற்றங்கள் கொண்டுவரப் பட்டிருந்தன.

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் மரணத்தையடுத்து வடபகுதியின் பிரதம தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா நியமிக்கப்பட்டி ருந்தார்.

மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா வடக்கு- கிழக்கு இராணுவ நடவடிக்கை கள் குறித்த விடயங்களில் மிகுந்த அனுபவம் மிக்கவராகவே காணப்படு கின்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தினருக்கெதிராக அரச படைகள் 1987ம் ஆண்டு மேற்கொண்ட 'வடமாராட்சி ஒப்பரேஷன்' நடவடிக்கைகளின் போது, டென்ஸில் கொப்பேகடுவ, ஜெரி சில்வா ஆகியோர் நேரடியாகவே மோதல்களில் குதித்திருந்தனர்.

அப்போது அவர்கள் இருவரும் இராணுவத்தில் பிரிகேடியர் தரத்தில் இருந்தனர்.

அத்துடன் இந்த இருவரும் யுத்தப் பிரதேசங்களில் தமது கடமைகளை மிகவும் பொறுப்பான முறையிலேயே மேற்கொண்டிருந்தனர். உயரதிகாரி



தமிழ் அகதிகள்

இந்திய இராணுவம் வெளியேறிய தையடுத்து வட பிராந்தியத்தின் பிரதான தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா கிழக்கு மாகாணத்தின் பொறுப்பை ஏற்றிருந்தார்.

தொடர்ந்து வடபிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பே கடுவவின் மரணத்தையடுத்து, மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா வடபகுதியின் இராணுவத் தலைமையை ஏற்றிருந்தார்.

ஆயினும் இராணுவ சேவையில் பிரதம தளபதிக்கு அடுத்தபடியாக சிரேஷ்ட அதிகாரியின் தரத்தில் அவர் இருந்ததனால் இராணுவத் தலைமைப் பீடத்தின் பொறுப்புக்களை ஏற்க வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டிருந்தது. இதனையடுத்தே மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா கொழும்புக்கு உப தளபதியாக (Chief of Staff) பதவி உயர்வுடன் இடமாற்றஞ் செய்யப்பட் டிருந்தார். இந்த மாற்றத்தையடுத்தே வடபிராந்தியத்தின் தளபதியாக மேஜர் ஜெனரல் ரொஹான் தலுவத்த நியமிக்கப் பட்டிருந்தார்.

மேஜர் ஜெனரல் ரொஹான் தலுவத்த ஒரு சிரேஷ்ட அதிகாரியின் தரத்தில் இருக்கின்ற போதிலும் மிகவும் மென்மை யான சுபாவம் கொண்டவராகவே தாகவே காணப்படுகின்றது.

உயிர், உடமை இழப்புக்கள் மட்டு மல்லாது லட்சக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டும் வெளியேறி அகதிகளாகப் பரிதவிக்கும் நிலையையும் இந்தக் கொடிய யுத்தம் உருவாக்கி விட்டுள்ளது.

அரசியல்• ரீதியாக அணுகப்பட வேண்டியவிடயங்கள், இராணுவக் கெடு பிடிகளுக்குள்ளானவையாகக் காணப் படுகின்றன.

இராணுவ ரீதியிலான நடவடிக் கைகளை நோக்குமிடத்து யுத்தப் பிரதேசங்களில் நன்கு திட்டமிட்ட தாக்குதல்களை முன்னெடுக்கக்கூடிய தளபதிகளுக்குத் தட்டுப்பாடு நிலவும் தன்மையே தற்போது காணப்படுகின்றது.

அத்துடன் சாதாரண சிப்பாய்களின் தரத்திலுள்ளவர்களும் பாரிய அளவிலான திடீர் தாக்குதல்களை எதிர்கொள்ளும் வல்லமையற்றவர்களாகவே காணப் படுகின்றனர்.

வெலிஓயாவில் இடம் பெற்ற ஜனகபுரத்தாக்குதல், இராணுவத்தில் நிலவும் பலவீனத்தை வெளிப்படுத்து வதாகக் காணப்பட்டது.

வடபிராந்தியத்தின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் டென்ஸில்

நிராகரித்ததுடன், இன்றைய சந்ததி யிடமிருந்து அடுத்த சந்ததிக்கும் இப் போர் கைமாறிவிடக்கூடாது என்றும் தெரிவித்திருந்தார்.

எனவே இராணுவத் தளபதிகள் இலங்கை இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்துகின்ற போதிலும், ஜனநாயகவாதிகள் என்று கூறிக் கொள்ளும் ஆட்சியாளர்கள் இனப்பிரச்னைத் தீர்வுக்கு இராணுவ நடவடிக்கையை முன்னெடுப்பதிலேயே ஆர்வங் கொண்டுள்ளனர்.

இராணுவத்தில் ஆட்பலத்தை அதிகரிக்கும் வகையில் நாட்டின் பல்வேறு இடங்களிலும் கடந்த வாரம் இராணுவ ஆட்சேர்ப்புக்கான நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டிருந்தன.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு ஐந்தாம் வகுப்பு வரையிலான கல்வியே குறைந்த பட்சத் தராதரமாகவும் அறிவிக்கப்பட் டிருந்தது.

எனவே இராணுவத்தை மேலும் பலமடையச் செய்வதுடன் அப்பாவித் தென்னிலங்கை இளைஞர்கள் பலரை யுத்த முனையில் கொண்டு சென்று நிறுத்துவதே அரசின் நோக்கமாக இருக்கின்றது.

இதேவேளை அரசியல் ரீதியிலான தீர்வு ஒன்று சாத்தியப்படாத நிலையில் வடக்கே வுவுனியாவிலும், மற்றும் கிழக்கு மாகாணத்திலும் உள்ளூராட்ச்சித் தேர்தல் களை நடத்துவது பற்றியும் அரசாங்கம் அறிவித்திருந்தது.

வடக்கு-கிழக்கின் தற்போதைய நிலவரம் எத்தகைய கோணத்தில் இருக்கின்றதென்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

கிழக்கில் அமைதி ஏற்பட்டுள்ள தாகவும், அங்கு அரச நிர்வாகம் வழமைக் குத் திரும்பியுள்ளதாகவும், கிழக்கின் இராணுவத் தலைமையகம் அறிவித் திருந்தது. ஆனால் அங்கு அண்மையில் இடம்பெற்ற நடமாடும் ஜனாதிபதி சேவைகள் குறித்த நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி டி..பி. விஜேதுங்க நேரில் பங்குகொள்ள முடியாத சூழ்நிலை காணப்பட்டது. கிழக்கில் பாதுகாப்பு நிலைமை திருப்திகரமாக இல்லாத தனாலேயே ஜனாதிபதி அங்கு செல்லும் எண்ணத்தைக் கைவிட்டிருந்தார்.

வடக்கு-கிழக்கில் பாதுகாப்பு நிலவரம் திருப்திகரமாக இல்லாதிருக்கும் அதேவேளை, தென்னிந்தியாவிலிருந்தும் இலங்கைத்தமிழ் அகதிகள் தற்போது



நிலையிலேயே அவர்கள் மத்தியில் தேர்தலை நடத்துவது பற்றி அரசு அறிவித்திருந்தது.

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பும் அகதிமக்கள் தவிர வடக்கு- கிழக்குப் பகுதிகளில் வாழுகின்ற மக்களில் அநேகர்கூட, யுத்த நிலைமை காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளி யேறியுள்ளனர்.

இந்த வெளியேற்றம் காரணமாக வடக்கு-கிழக்கில் உள்ள வாக்காளர்களின் விபரமும் தகுந்த முறையில் சேகரிக்கப் பட்டிராத சூழ்நிலை காணப்படுகின்றது.

எனவே அகதி மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த் தப்பட முடியாத நிலை, பாதுகாப்பு நிலபரத்தில் திருப்தியற்ற போக்கு, வாக்காளர் பட்டியலில் சீரற்ற நிலை போன்றவற்றின் மத்தியில் அரசு வவுனியாவிலும், கிழக்கிலும் உள்ளூ ராட்சித் தேர்தலை நடத்துவது எந்த வகையிலும் சாத்தியப்படமாட்டாது.

தேர்தல் ஒன்று நடத்தப்படும் பட்சத்தில் வேட்பாளர்கள் மக்கள் முன் தோன்ற வேண்டியது தவிர்க்க முடியாத தாகவே இருக்கும். இந்நிலையில் பல்வேறு வகையிலும் பாதிப்புக்குள்ளாகி யுள்ள வடக்கு-கிழக்கு மக்களிடம், இனப்பிரச்னைக்கான ஒரு தகுந்த சமரசத்திட்டத்தையும் முன்வைக்கத் தவறிய நிலையில் அரசியல் கட்சி களோ, வேட்பாளர்களோ தோன்றுவது, ஓர் 'அரைவேக்காடான' அரசியல்

## 'சைவ உணவுத் தளபதி' ரொஹான் தலுவத்த!

காணப்படுகின்றார்.

இவர் மாமிச உணவு எதனையும் அறவே உட்கொள்ளாத சைவ உணவுக் காரராக விளங்குகின்றார். பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா மீது மிகுந்த விசுவாசம் கொண்டவராக இருப்பதுடன் சாயிபாபாவின் படம் பொறிக்கப்பட்ட மோதிரமொன்றையும் விரலில் அணிந் துள்ளார்.

வடபிராந்திய இராணுவத் தளபதி யாகப் பொறுப்பேற்றுக் கொண்டபின்னர் தமக்கு நெருங்கியவர்களுடன் பேசிய போது வடக்கு-கிழக்கு யுத்தம் தேவை யற்றது. வீண் உயிர்ச் சேதத்துக்கே இந்த யுத்தம் வழிவகுக்கின்றது, என்று மேஜர் ஜெனரல் ரொஹான் தலுவத்த குறிப்பிட்டிருந்தார்.

எனவே கடமையின் நிமித்தமே அவர் யுத்த முனையில் நிற்கின்றாரே தவிர தனிப்பட்ட ரீதியில் அவர் ஒரு சமாதானப் பிரியராக இருப்பதையே அவர் கூறியி ருப்பவை வெளிப்படுத்துகின்றன.

1983ம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு- கிழக்கு யுத்தம் விரிவடைந்ததையடுத்து பொதுமக்கள் மட்டுமல்லாது, படையி னரும் பெருமளவில் கொல்லப்பட் டுள்ளனர். அத்துடன் மேலும் பலர் அங்கவீனர்களாகி, தமது வாழ்க்கை யையே முடமாக்கிக் கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்,



கொப்பேகடுவ இலங்கையின் இனப் பிரச்னை அரசியல் ரீதியாக, பேச்சு வார்த்தையின் மூலமாகவே தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்பதில் விருப் பங்கொண்டிருந்தார். இந்த விருப்பத்தை தம்மைச் சந்தித்த பத்திரிகையாளர் களிடமும் அவர் வெளியிட்டிருந்தார்.

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பே கடுவவையடுத்து வடபிராந்தியத் தளபதியாகப் பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா கூட பேட்டி யொன்றின் போது போர் நீடிப்பதை

மீண்டும் தாயகம் திரும்ப ஆரம்பித் துள்ளனர்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தோன்றிய யுத்த நிலைமைகளுக்குத் தாக்குப்பிடிக்க முடியாதவர்களாகவே இந்த அகதி மக்கள் தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்தனர்.

ஆனால் தமிழ் நாட்டிலும் தற்போது தொடர்ந்திருக்க முடியாதிருக்கும் சூழ்நிலைகள் உருவாகி வருவதையடுத்து இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளா கியுள்ளனர்.

தாயகம் திரும்பும் அகதிகளை தகுந்த வகையில் பொறுப்பேற்று, அவர்களின் அடிப்படைத் தேவையான உணவு, இருப்பிட, மருத்துவ வசதிகளை திருப்தி கரமான முறையில் அரசு வழங்கும் அறிகுறிகள் காணப்படுவதாக இல்லை.

உணவு, மருத்துவ வசதியின்றியே தாம் உயிரிழக்கும் அபாயம் தோன்றி யிருப்பதாக தாயகம் திரும்பியுள்ள அகதிமக்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் இன்றைய வடக்கு- கிழக்கு நெருக்கடியில் எதுவுமறியாத அப்பாவிப் பொது மக்கள் பாரதூரமான இழப்புக்களுக்கு முகங்கொடுக்க வேண் டியவர்களாகக் காணப்படுகின்றனர்.

இத்தகைய அப்பாவிப் பொது மக்களைப் பாதுகாக்க முடியாத

நடவடிக்கையாகவே அமையும் எனக் கொள்ளலாம்.

இத்தகைய தாறுமாறான சூழ்நிலை யிலேயே மறைந்த வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ மக்கள் நலனில் அக்கறை காட்டிக்கூறியவை ஞாபகத் துக்கு வருகின்றன.

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உயிர் வாழ்ந்த நாட்களில் வவுனியாவில் இடம் பெற்ற கூட்ட மொன்றில் பேசிய போது, "இராணுவ ரீதியாக நான் இயங்குகின்ற போதிலும் வடக்கு-கிழக்கு மக்களின் மனங்களை வெற்றி கொள்வதிலேயே பெரும் ஆர்வங் கொண்டுள்ளேன்" என்று குறிப்பிட் டிருந்தார்.

ஆனால் ஜனநாயகம் பற்றிப் பேசும் ஆட்சியாளர்களோ மக்களின் மனதில் இடம் பிடிப்பதைவிட, மக்களிடமிருந்தும் தம்மை அந்நியப்படுத்தும் வகையில் இராணுவ நடவடிக்கைகளை தூண்டுப வர்களாகவே காணப்படுகின்றனர்.

காத்திரமான அரசியல் நடவடிக்கை மூலம் இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வைக்காண முன்வராதிருப்பதுடன், தீர்வை எட்டும் வகையில் உதவிக்கரம் நீட்டுவோரையும் தட்டிக்கழிக்கும் அரசின் போக்கு விநோதமானதாகவும், விசனத்துக் குரியதாகவும் இருக்கின்றது. ■

# ராட்சத கழுகு குழந்தையைக் கவர்ந்தது! பிணம் தின்னும் கழுகு மனம் மாறியது ஏன்?

ஆர்ஜென்டினா நாட்டிலுள்ள எல் ஹவேக்கு மலைப்பிரதேசம்.

மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்தது கழுகு.

கீழே தவழ்ந்து கொண்டிருந்தது குழந்தை.

அது ஆடு மேய்ப்பவர்கள் வாழும் பூமி. ஆங்கங்கே முகாம்கள் அமைத்து ஆடு மேய்ப்பவர்கள் தங்கியிருந்தனர்.

இயற்கை அழகியின் செழுமையான பிரதேசங்களை தன் கமராக்கண்களால் வாங்கிக் கொண்டிருந்தார் டி வராஸ் என்ற பெயருடைய புகைப்படப் பிடிப்பாளர்.

திடீரென்று ஒரு குரல் கேட்டது. அது குழந்தையின் வீல் என்ற அலறல் ஓசை.

குரல் வந்த திசை நோக்கி திரும்பிப் பார்த்தார் டி. வாரஸ்.

ராட்சதக் கழுகொன்று தனது கால்களுக்குள் குழந்தையொன்றை இடுக்கிக் கொண்டு மேல் எழுந்து கொண்டிருந்தது.

## அதிசய போட்டோ





அச்சத்தால் உறைந்து போன டி வாரஸ் அக்காட்சியை தெளிவாகப் பார்ப்பதற்காக தன் கமராவின் தூரநோக்கி கண்ணாடியை பயன்படுத்தினார். கமராவை இயக்கினார்.

எந்தத் திசை நோக்கி கழுகு பறந்து செல்கிறது என்பதை அறிய தொடர்ந்து பல படங்களை எடுத்தார். படங்களை எடுத்துக் கொண்டு உடனடியாக ஆடு மேய்ப்பவர்களின் உதவியோடு கழுகு பறந்த திசையில் டி. வாரஸ் சென்றார்.

இதற்கிடையே செய்தியறிந்த 2 வயதுக் குழந்தையின் தாய் அழுது புரண்டாள். கழுகு பறந்த திசையில் போனவர்கள் அந்தக் காட்சியைக் கண்டனர். ஒரு கற்குவியலின் மீது குழந்தையிருந்தது. குழந்தைக்கு எந்தத் தீங்கும் செய்யாமல் கழுகு விட்டுச் சென்று விட்டது. சிறு சிறு காயங்கள் மட்டுமே குழந்தையின் உடலில் காணப்பட்டன. பயத்தில் கலங்கிப் போன குழந்தை அழுது கொண்டிருந்தது. மற்றவர்களோ ஆச்சரியத்தில் சிக்கிப் போனார்கள். பெரிய மிருகங்களைக் கூட காலில் கவ்விச் சென்று இரையாக்கும் கழுகு குழந்தையை எப்படி விட்டுச் சென்றது? அதுதான் ஆச்சரியம். குழந்தையின் உடலில் இருந்த உடைகள் கழுகுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும். அதன் வாடை பிடிக்காமலிருந்திருக்கக்கூடும் என்று செய்தியறிந்த விஞ்ஞானிகள் சிலர் விளக்கமளிக்கின்றனர்.

எப்படியோ குழந்தை தப்பியது கழுகின் புண்ணியம். உலக அதிசயப் படம்கிடைத்ததும் கழுகின் உபயத்தில்-டி. வாரஸ் பெற்ற மாபெரும் அதிஷ்டம். ■



## அன்புள்ள அம்மா இந்தா ஒரு முத்தம்!

தித்திக்கும் முத்தத்தால் பாசம் சிந்தும் தாய் இவள். பாசம் என்ற மூன்றெழுத்து மனிதருக்கு மட்டுமே உரிய சொத்தா என்ன? பாசம் மறந்து வாழும் மனிதர்களும் உண்டல்லவோ நம்மத்தியில்! இங்கு பாருங்கள். பாலி என்ற ஏப் குரங்குக்கு அதன் குழந்தை பரிவோடு நெற்றியில் முத்தம் கொடுக்கிறது. மிருகபாசத்துக்கு முத்திரை பதித்த காட்சி இது. சன்னல் தீவு மிருகக் காட்சிச் சாலையில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

## தகவல் பெட்டி


### நெற்றிக் கண் முயல்

அக்கரைப்பற்று பத்ர் நகரிலே ஓர் அதிசயம். லுக்மான் ஹகீம் என்பவர் ஒரு முயல் வளர்த்தார்.

ஆத்தா ஆடு வளர்த்தா - கோழி வளர்த்தா முயல் வளர்க்கக்கூடாதா?-வளர்த்தார்.

முயல் போட்டது எட்டுக்குட்டிகள்.

அதிலே ஒரு குட்டியைப் பார்த்தவருக்கு ஆ..... ஆச்சரியமோ அச்சரியம்.




அதற்கு நெற்றியின் நடுவிலே கண் இருந்தது. வழக்கமாக இருக்க வேண்டிய இடத்தில் மட்டும் கண்கள் இல்லை. அது மட்டுமோ யானைக்கு இருக்குமே தும்பிக்கை அது போல சின்னதாக ஒரு தும்பிக்கையும் இருந்தது.

துரதிஷ்டம் - பிறந்த சில மணித்தியாலங்களில் அந்த ஆச்சரிய முயல் இறந்துவிட்டது.

தகவலும்-படமும்
நிலாம் இஸ்மாயில்
அக்கரைப்பற்று.

### குட்டி ஆடு - குரங்கின் சாயல்

மனிதக் குரங்கின் முகம் போல் ஒரு ஆட்டுக்குட்டி. திருகோணமலையில் கண்டவர் வியந்த காட்சி அது. இப்போது அது உயிரோடு இல்லை. எடுக்கப்பட்ட படம் மட்டும் இங்கே.



# பயிற்சி செய்தார் இளைத்துப் போனார்!

திருமணத்தன்று எடுத்த புகைப்படங்களை பார்த்துக் கொண்டிருந்த அமண்டா அழத் தொடங்கிவிட்டாள்.

ஆனந்தக்கண்ணீர் அல்ல. ஆதங்கத்தில் வந்த கண்ணீர்.

என்ன ஆதங்கம்?

திருமணத்தின் முன் கட்டுடல் கொண்டவளாக இருந்தேன். இப்போது குண்டுடல் கொண்ட வளாக கொழுத்துவிட்டேனே என்பதுதான் அமண்டாவின் ஆதங்கம்.

அமண்டாவின் கணவனோ அவள் பருமனாக இருப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. என்றாலும் அமண்டா கவலையை விடுவதாக இல்லை.

அமண்டாவின் நிரந்தர சோகத்தைக் கண்ட கணவன் சைமன் ஒரு யோசனை கூறினார்.

"உன் உடலின் அளவைக் குறைக்க நீ ஏன் முயற்சிக்கக் கூடாது? அதற்கென்று ஒரு காலக் கெடுவை குறிப்பிட்டுக் கொள்."

சைமன் கூறிய யோசனை அமண்டாவுக்குப் பிடித்துக் கொண்டது.

என்றாலும் ஒரு நிபந்தனை போட்டாள்.

"என் உடல் மெலிந்த பின் மீண்டும் நமது திருமணம் தேவாலயத்தில் நடத்தப்பட வேண்டும்."

நிபந்தனைக்கு சைமன் ஒப்புக்கொண்டார்.

அமண்டா பயிற்சியை ஆரம்பித்தாள். அமண்டா நீச்சலடித்தாள்.

மீன், மாமிசம் எதையும் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.

1500 கலோரி காய்கறி உணவை மட்டுமே. உட்கொண்டாள்.

ஒரு வருடம் கடினமான பயிற்சிகள்.

228 இறாத்தல் எடையாக இருந்தவள் 130 றாத்தல் எடை கொண்டவளாக மாறினாள்.

அமண்டாவின் திருமணத்தின் போது அவளது அளவுகள் 44-37-50. தற்போது 34-25-36.

இப்போது முன்பை விட முகமும் வசீகரம் அடைந்துவிட்டது. புதிய அளவுக்கான திருமண ஆடைகளும் தயாராகி விட்டன.

அழகான, அள்வான துணைவி கிடைத்ததில் சைமனுக்கும் மகிழ்ச்சி தான்.



சைமனுக்கு இருபுறமும் நிற்பது அமண்டாவேதான். பயிற்சி செய்வதற்கு முன் பருத்த தோற்றம். பின்னர் இளைத்த தோற்றம்.

## அழகாக இருக்கக் கத்துக்கணும்



சின்னவயதில்கூட சிலருக்கு தொப்பை விழுகிறது. தொப்பைக்கு குட்பை சொல்ல இதோ ஓர் எளிய பயிற்சி.

இரண்டு கைகளாலும், முழங் காலை மடக்காமல் குனிந்து தரையைத் தொடும் பயிற்சியை வெறும் வயிற்றில் செய்யலாம். 50 தடவை இப்பயிற்சியைச் செய்யலாம். (எடுத்தவுடன் 50 முறை செய்யக்கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும்.)

அடுத்து வயிறு தரையில் படும்படி படுத்து கொஞ்சமாக காலை எவ்வளவு தூக்க முடியுமோ அவ்வளவு தூக்க வேண்டும். தலையையும் தூக்க வேண்டும். இப்போது வயிறு மட்டும் தரையோடு தொடர்புடையதாக இருக்கும். இதை இருபத்தைந்து முறை செய்யவும். (வயதானவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், அறுவைச்சிகிச்சை செய்தவர்கள் இதைத்தவிர்க்கவும்)

லோ-ஹிப் கட்டுவதால் மேல் வயிறு கூடும் வாய்ப்பு உண்டு. இதைத் தவிர்க்க அடிக்கடி லோ-ஹிப் கட்டுவதைத் தவிர்ப்பது நல்லது.

## டை பாவிப்பவர்கள், பாவிக்க நினைப்பவர்கள் இதைப் படியுங்கள்



தலைமுடிக்கு தொடர்ந்து கெமிகல் டை போட்டால், நரம்பைப் பாதித்து ஒருவேளை கண்பிரச்சனை வரலாம். 40 அல்லது 50 வயதிற்குப் பிறகுதான் டை செய்து கொள்கிறார்கள்.

பாதி நரை, பாதி கறுப்பு முடி இருப்பவர்கள் டை செய்து கொண்டு, வெய்யிலில் போகும் போது, இரசாயன மாற்றத்தால் சில இடம் பழுப்பாக மாற வாய்ப்புண்டு.

ஹெர்பல் ஷம்பு பயன்படுத்தலாம். கருவேப்பிலை, வேப்பிலை, பொன்னாங்கன்னி ஆகியவற்றை எண்ணையாகக் காய்ச்சிப் பயன் படுத்தினால் நரை முடியைத் தவிர்க்கலாம். வேப்பிலை பொடுகைப் போக்கும்.

## லேடீஸ் ஸ்பெசல்

### அழுகிறதா குழந்தை அதுவும் நல்லதுதான்!

பெற்ற குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதால் தாயின் உடல் ஆரோக்கியம் பெறுகிறது. குழந்தைக்கும் மிகச் சிறந்த நன்மை பயக்கிறது. குழந்தைக்கு ஒரு வயது ஆகிவிட்ட பிறகும் தாய்ப்பால் கொடுத்து வந்தால் இருவருடைய உடல் நலமும் கெட்டுவிடும்.

அழுகை அதன் குரல்வளையை வளர்ச்சி பெறச் செய்கிறது. வாய் விட்டுச் சிரிக்க செய்வது சுவாச கோசத்தைக் காற்றால் நிரப்பிச் சுத்தப்படுத்துகிறது. குழந்தையைச் சிரிக்கச் செய்யவேண்டியது தான் நம்முடைய வேலை. அழுவதை அதுவே கவனித்துக் கொள்ளும்.

## சமையல் குறிப்புக்கள்

1. பச்சை மிளகாய் அடிக்கடி உலர்ந்துவிடும். அவ்வாறு காய்ந்து வாடிவிடாமல் இருக்க வேண்டுமானால் காம்புகளைக் கிள்ளி எடுத்துவிட்டால் அவை வாடாமல் இருக்கும்.
2. கத்திகளைக் கூர்மையாக்க உப்புத் தூளைப் போட்டுக் கவனமாக நுனியைத் தேயுங்கள். துருப்பிடித்த கத்திகளின் துருவை அகற்றுவதற்கு அவற்றை ஒரு வெங்காயத் துண்டினால் நன்றாக தேய்த்தபின் சிறிது நேரம் கழித்து துடைத்து விட்டால் துரு நீங்கிவிடும்.
3. கருவேப்பிலை அடிக்கடி காய்ந்து விடுகிறதல்லவா-இவ்வாறு வாடாமல் காயாமல் இருக்க ஓர் அலுமினியப் பாத்திரத்தில் போட்டுத் தலைகீழாகக் கவிழ்த்து வைத்துவிடுங்கள். ஈரத்துணியில் சுற்றி வைப்பதும் இன்னொரு முறை.
4. தேங்காய்ப் பாதியை தண்ணீரில் போட்டு வைத்தால் இரண்டு, மூன்று நாட்கள் கெடாமல் இருக்கும். நாளாந்தம் நீரை மாற்றி, உபயோகப்படுத்துமுன் நன்நீரில் கழுவவும்.
5. தோசைக்கல்லில் ஒரு மேசைக்கரண்டி அள்வு எண்ணெய், அரை மேசைக்கரண்டி உப்பு இவற்றை கொண்டு தேய்த்துவிட்டால் தோசை சுருங்காமல் எடுக்க இலகுவாய் இருக்கும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

## நீங்களும் தைக்கலாம்

### குழந்தைச் சட்டை

**தேவையான அளவுகள்:**

| | |
|---|---|
| நீளம் | - 20" |
| முன்பக்க கழுத்தாழம் | - 1 3/4" |
| கழுத்தகலம் | - 1 1/2" |
| பின்பக்க கழுத்தாழம் | - 3/4" |
| தோள் அளவு | - 1 3/4" |
| தையல் விடுவெளி | - 1/2" |

**வரையும் முறை:**


20" அகலமும் 20" நீளமும் கொண்ட சதுரத்தினை வரைந்து A,B,C,D எனப் பெயரிடுக. இச்சதுரத்தினை முக்கோண வடிவாக மடிப்பதைக் குறிப்பதற்காக A, Cயை இணைக்கவும். Aயில் இருந்து 9 1/2" முக்கோணத்தின் கீழ் நோக்கி அளந்து அவ் அளவுகளை ஒரு வளைவான கோட்டின் மூலம் இணைத்து அவற்றுக்கு E, F எனப் பெயரிடுக. Eயில் இருந்து கழுத்தகலத்திற்காக 1 1/2"அளந்து Gஎனப் பெயரிடுக. அதே போல் கழுத்தாழத்திற்காக Eயில் இருந்து கீழ் நோக்கி 1 3/4"அளந்து தோள் அகலத்திற்காக புள்ளியிட்டு இப்புள்ளிக்கு I எனப் பெயரிடுக. இப்புள்ளியிலிருந்து படத்தில் காட்டியவாறு 3/4"அளந்து Jஎனப் பெயரிட்டுக் கொள்க. I, J புள்ளிகளுக்கிடையில் சம அளவில் ஒரு புள்ளியிட்டு Kஎனவும் பெயரிட்டுக் கொள்க. K புள்ளியிலிருந்து கீழ் நோக்கி 3 1/2" அளந்து L எனப் பெயரிடுக. Iயில் இருந்து Lற்கும் Jயில் இருந்து Lற்கும் வளைவான கோட்டினை வரைந்து முன், பின் கையினைக் கீறவும். Jயில் இருந்து 1 3/4" பக்கமாக அளந்து பின்பக்கத் தோளிற்கான புள்ளியினை இட்டு Mஎனப் பெயரிடுக. Mஇல் இருந்து முன் பக்கத்திற்குப் போன்றே 1 1/2"அளந்து Nஎனப் பெயரிடுக. Nஇல் இருந்து பின்பக்க கழுத்தாழத்திற்காக 3/4" கீழ்நோக்கி எடுத்து Oஎனப் பெயரிடுக.

M,Oவினை வளைகோட்டினால் இணைத்து பின் கழுத்தினைக் கீறவும். பின்கழுத்திலிருந்து திறப்பிற்காக 1/2"கூட்டி விடுக. பின்பக்க தோள் அகலத்தின் (J,M)நடுப்புள்ளியை எடுத்து அதில் இருந்து 1 3/4"மேல் நோக்கி வரைந்து Pஎனப் பெயரிடுக. J, P, M புள்ளிகளை வளைகோட்டின் மூலம் இணைத்து பட்டியினைக் கீறவும்.

Fஇல் இருந்து Bஇற்கு இடையில் உள்ள தூரத்தினை அளந்து அதே அளவினை E இல் இருந்து கீழ் நோக்கி அளந்து புள்ளியிட்டு அப்புள்ளியையும் B யையும் வளைவான கோட்டின் மூலம் இணைத்து குழந்தைச் சட்டையின் மாதிரி உருவை வரைந்து கொள்க.

(விரும்பினால் சட்டையின் கழுத்து கை, பட்டி, சட்டையின் கீழ்பகுதி ஆகியவற்றிற்கு ஸ்கலப் செய்தால் மிகவும் அழகாக இருக்கும்.

தையல் விடுவெளிக்காக எல்லாப் பகுதிகளுக்கும் 1/2" விடுவெளி விடுக. கீழ் பகுதிக்கு மட்டும் 1 1/2" விடு வெளி விடுக.)




**திருமதி உமா மனோகரன்**
**(பாரிஸ் ஈழநாடு)**

## வீட்டுக் குறிப்புக்கள்



கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி போன்றவற்றை மொறு மொறு என்று வறுக்க வேண்டுமா? முதலில் இறைச்சியைச் சுத்தப்படுத்தி உப்புப் போட்டு வேக வைத்துக் கொள்ளுங்கள். பிறகு வேகவைக்கப்பட்ட இறைச்சியில் தேவையான மசாலா சேர்த்துச் சிறிது நேரம் ஊற வையுங்கள். மசாலா நன்கு இறைச்சியில் ஊறியதும், இறைச்சித் துண்டுகளை ஒரு கம்பியில் கோர்த்துத் தணலில் காட்டி மெதுவாக வறுக்க வேண்டும். நன்றாகச் சிவந்து வந்ததும் எடுத்துச் சாப்பிட்டுப் பாருங்கள். மொறு மொறுவென்று இருக்கும்.



சர்பத் செய்வதாக இருந்தால் ஐஸ் கட்டிகளைப் பெரிது பெரிதாக அப்படியே போடுவதற்குப் பதிலாக, சிறிது சிறிதாக உடைத்தோ அல்லது துருவிய ஐஸ் துண்டுகளையோ போட்டுச் செய்து பாருங்கள். எளிதாக ஐஸ் கட்டிகள் கரைந்து உடனே சாப்பிடுவதற்கு ஏற்ற வகையில் இருக்கும். பெரிது பெரிதாகப் போடுவதால், உடனடியாக ஐஸ் கட்டிகள் சரிவர உருகாமல் அப்படியே இருக்கும். உடனடியாகக் குடிப்பதற்கு இயலாது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ரசிகைகளின் கடிதங்களே அதிகம்

## புதிய நாயகனை மலர்கள் வாழ்த்துகின்றன!


விக்னேஷ்

வளர்ந்து வரும் புது நடிகர் விக்னேஷ். பாரதிராஜாவின் படமான 'கிழக்கு சீமையிலே' தனக்கு ஒரு திருப்பமாக அமையும் என்று நம்புகிறார்.

உழவன் படத்தில் பிரபுவின் தம்பியாக தோன்றுகிறார்.

சின்னத்தாயி, அம்மையப்பன், அம்மாபொண்ணு போன்ற படங்களில் தோன்றியிருக்கிறார். தன்னம்பிக்கையோடு வளர்ந்துவரும் விக்னேஷ் தினமுரசு வாசகர்களுக்காக பேட்டி என்றதும் உடனடியாக ஓ.கே. சொன்னார். நமது தமிழ் சினிமா நிருபர் அவரை பேட்டி கண்டார்.

கேள்வி: உங்கள் சினிமா வரவுக்கு யார் காரணம்? எப்படி நடிகர் ஆனீர்கள்?

ப: என்னோட சொந்த ஊர் ஈரோடு நடிப்பு ஆர்வம் சின்ன வயதில் இருந்தே எனக்கு உண்டு. அதனால் வீட்டை விட்டு சென்னைக்கு வந்தேன் பலகம்பனிகள் ஏறி இறங்கினேன். பலரது நட்பு கிடைத்தது. பாலுமகேந்திரா அவர்களிடம் சென்றேன். என்னைப்பார்த்து வண்ண வண்ணப்பூக்களில் சந்தர்ப்பம் கொடுத்தார். ஆனால் சுகவீனம் காரணமாக படப்பிடிப்புக்கு போக முடியவில்லை. பிரசாந் நடித்தார். பின்னர் சில மாதத்தில் கஸ்தூரிராஜா சார் வீதியில் வைத்துப் பார்த்து விட்டு என்னை அழைத்தார். நீ தான் எனது படத்தின் நாயகன் என்றார் எனக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. ராஜன் என்ற எனது பெயரை விக்னேஷ் ஆக்கினார்.

கே: எதிர்காலத்திட்டம் என்ன?

பதில்: விக்னேஷ் என்றால் வித்தியாசம் என்ற அளவுக்கு வித்தியாசமாக நடிக்க வேண்டும்.

கேள்வி: ரசிகர் கடிதங்கள் பற்றி

பதில்: எனக்கு ரசிகைகளின் கடிதம் தான் அதிகமாக வருகிறது. கோயம்புத்தூரில் இருந்து ஒரு ரசிகையின் கடிதம் வரும் நானும் பதில் போடுவேன். இதுவே சிலமாதம் தொடர்ந்தது. அவர் என்னை காதலிப்பதாக எழுதினார் நான் அவருக்கு அறிவுரைக் கடிதம் ஒன்றை எழுதினேன். நான் திருந்திவிட்டேன் என்னை மன்னிக்கவும் என்று கடிதம் எழுதியிருந்தார் எனக்கு ரொம்ப சந்தோஷம்.

கே: இலங்கை ரசிகர்கள் பற்றிய கருத்தென்ன?

ப: எனக்கு இலங்கை ரசிகர்கள் பற்றி தெரியாது. ஆனால் அவர்களின் கலாசாரம், வீரம் வாழ்க்கை முறைகள் நன்கு தெரியும். சந்தர்ப்பம் கிடைக்கும் போது கண்டிப்பாக அங்கு வருவேன். அவர்களுக்கு நல்லதொரு தீர்வு விரைவில் கிடைக்க வேண்டும் என்று கடவுளை வேண்டுகிறேன்.

விக்னேசின் ஆசை நிறைவேறட்டும். வாழ்த்தினோம். விடைபெற்றோம்.




## காதோடு சொல்லுகிறோம்



★ இசைராஜா சர்வதேசப் பிரபலம் பெற்றது சிலருக்குப் பிடிக்கவில்லையாம். இயக்குநர் சிகரம், மணி இயக்குநரின் சகோதரர் போன்றோர்கூட குத்தலாகப் பேசுகிறார்களாம். கிராமத்து ஆள், வறிய தாழ்த்தப்பட்ட குடும்பத்து மனிதன் என்ற எண்ணத்தில் அவர்கள் அப்படிப் பேசுகிறார்கள் என்று ஒரு கதை அடிபடுகிறது. சே... இப்படியொரு நினைப்போ! உருப்பட்டது போலத்தான்.

★ பூச்சூடவா நாயகி புருசன் வீட்டிலிருந்து திரையுலகுக்கு மீண்டும் திரும்பியிருக்கிறார். கவர்ச்சியால் ஒரு கலக்கு கலக்கும் திட்டம் உண்டாம். இது பற்றி சில சினிமாப் புள்ளிகள் சொன்னதாவது. இருந்தால்தானே கலக்குவதற்கு! அட விசயம் அப்படியோ?

★ தாடி இயக்குநர் கவர்ச்சியை நம்பி கைப்பணத்தைப் போட்டிருக்கிறார். ஒன்றுக்கு மூன்றாக கவர்ச்சி நாயகிகளை பிடித்து உரித்தெடுக்கிறாராம். வசூலை வாரியெடுக்கலாம் என்ற ஆசைதான். கேட்டால் நான் பாடியை நம்பிப்படமெடுப்பவனல்ல. கோடியை விரும்பிமடம் கட்டுபவனுமல்ல. தாடியை நம்பி திரையுலக ஜாடியின் மூடியைத் திறந்தவன் என்று அடுக்கித்தள்ளிவிடுவார். கேட்பானேன், அவர் அடுக்குவானேன்.

★ நடிகைகள் பலர் குளோசப்பில் நிமிர்ந்த அழகுகளோடு தோன்றுவது செயற்கை உபயத்தில்தானாம். அது பற்றிய விலாவாரியான விபரமொன்றையே தமிழக சஞ்சிகை ஒன்று வெளியிட்டிருக்கிறது. பட்டியலப்படி அதிக செயற்கை அழகு உபயம் மான் நடிகைக்குத்தானாம். ஆக எல்லாமே வேசம்தானாக்கும்.

★ அதிரடி நடிகை பெரிய அபிலாசைகளோடு எடுத்தபடம் எதிர்பார்த்தபடி அமையவில்லையாம். பார்த்தவர்கள் விநியோகஸ்தர்களுக்கு விசேசகாட்சியொன்று போட்டுக் காட்டினாராம். பார்த்தவர்கள் வெறுத்துப்போனார்கள். அந்த மாதிரிக் காட்சியில்லையே என்று நடுங்கவின் காதுபடவே பேசினார்களாம். பதறிப்போன நடிகை அடுத்த முறை வந்துபாருங்கள் எல்லாம் இருக்கும் என்று சூளுரைத்தாராம்.

★ ஃப்ரெண்ட்ஸ் என்பதை தமிழில் மாற்றிப்பாருங்கள். அப்படிவரும் படத்தில் நடித்த நாயகி மார்க்கட் இல்லாமல் காணாமல் போனார் அல்லவோ. இப்போது மீண்டும் வந்து புகுந்துவிட்டார். மார்க்கட் பிடிக்க வழக்கமான முயற்சிகளோடு வஞ்சகம் இல்லாமல் நெஞ்சங்கள் போலும் காட்சிகளில் அசரவைத்துக்கொண்டிருக்கிறாராம். இயக்குநரும் சந்தர்ப்பத்தை தவறவிடாமல் மழைக்காட்சியை மனம் கோணாமல் படமாக்கியுள்ளாராம்.

★ செண்பகமானவர் மூட்டை முடிச்சுகளுடன் புறப்படத் தயாராகிவிட்டாராம். தமிழ் திரையுலகை நம்பிப் பயனில்லை. சான்ஸ் தருவதாகச் சொல்லி கூப்பிடுகிறார்கள். காரியம் முடிந்தபின் கைவிடுகிறார்கள் நம்பிப்பயனில்லை என்கிறார்.

## ஒரு தம்-ஒரு கிக்


அனு அகர்வால்

திருடா-திருடா படத்தில் நடிக்க பம்பாயில் இருந்து மணிரத்தினத்தால் இறக்குமதி செய்யப்பட்ட நடிகை அனு அகர்வால்.

படப்பிடிப்பு தளத்தில் வெகு சுதந்திரமாக சிகரெட் பிடித்துக்கொண்டிருப்பார். அதைக் கண்ட பத்திரிகையாளர் ஒருவர் பெண்கள் புகைப்பது நல்லதா? என்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டிருக்கிறார். அவ்வளவுதான் அனுவுக்கு வந்தது பாருங்கள் மூக்குநுனியில் ஒரு கோபம். ஒரு பிடி பிடித்துவிட்டார். அவர் சொன்னதைக் கேளுங்கள்.

"யார் தான் சொன்னது அப்படி? ஏனாம் ஆண்கள் சிகரெட் பிடிப்பது நல்லது என்கிறீர்களா? நான் புகைக்கும் இந்தச் சிகரெட் பெண்களுக்கென்று பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டது." என்று சொன்ன அனு அத்தோடு விடவில்லை. புகைபிடிக்கும் இந்தி நடிகைகளின் பட்டியலையும் படபடவென்று சொல்லியிருக்கிறார்.

தீப்தி, கஜோல், டிம்பிள் கபாடியா என்று ஒரு பட்டாளமே வைத்திருக்கிறார். இன்னொரு தத்துவத்தையும் அனு அகர்வால உதிர்த்திருக்கிறார். மது பாவித்தால ஒரு விதமான 'கிக்' கிடைக்கிறது. அது போலத்தான் சிகரெட்டும். இப்படி இருக்கையில் பெண்கள் சிகரெட் புகைக்கலாமா என்று கேட்பது அபத்தமானது.

அனு அகர்வால ஊர் நாட்டுப்புறமல்ல போலவும் தெரிந்த நடிகைதான். பிழைத்துக் கொள்வார்.


ஓ பாப்பா படத்தில் ஒரு காட்சி

புரசின் முகப்பில் இருப்பது யார்? புதுமணமகள்! அதுதான் [illegible]


அதர்மம் படத்தில் முரளி - தலைவாசல் விஜய்



### சரத்தின் பொலிசி!

என்னைப் போன்ற நட்சத்திரங்கள் மிக அதிகமாகச் சம்பாதிக்கிறோம். இப்படியெல்லாம் சம்பாதிக்கப் போகிறோம் என்று சின்ன வயதில் எதிர்பார்க்கவில்லை. இது கடவுள் நம்மீது காட்டிய கருணை. அதே கருணையை நாம் மற்றவர்களிடமும் காட்டுவதுதான் மரியாதை. சம்பாதித்து சேர்த்து வைத்து என்ன செய்வது. அதனால் முடிந்தவரைக்கும் ஏழைகளுக்கு உதவுகிறேன் என்கிறார் சரத்குமார். தனது தந்தையின் பெயரில் அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி அடுத்தவருக்கு உதவும் யோசனையும் உண்டு என்றும் சொல்லியிருக்கிறார் சரத்.

போலீஸ் லாக்கப் படத்தில் விஜயசாந்தி-வினோத்


அக்கரை சீமையிலே படத்தில் அழகின் உச்சத்தில் நிற்பவர் தேவகி

www.padippakam.com

# இந்த நாயகன் ஆடும் காதலன்!

இதயம், சூரியன், வால்டர் வெற்றிவேல் போன்ற படங்களில் பிரபுதேவாவின் நடனம் சுற்றுது கவனிக்க வைத்தது.

இப்போது 'ஜென்டில்மேன்' படத்தில் பிரபு தேவாவின் நடனம் படத்தின் வெற்றிக்கே ஒரு முக்கிய காரணமாகப் பேசப்படுகிறது.

ஜென்டில்மேன் படத்தை தயாரித்துள்ள குஞ்சுமோன் புத்திசாலி. புளியங்கொம்பை கெட்டியாகப் பிடிக்கத் தெரிந்தவர். ஜென்டில்மேன் வெற்றிபெற்ற சூட்டோடு பிரபு தேவாவை கதாநாயகனாகப் போட்டு ஒரு படம் தயாரிக்கப் போகிறார். பெரும் செலவில் உருவாகும் படத்திற்கு இடப்பட்டுள்ள பெயர் "காதலன்" தற்போது 'இந்து' படத்தில் கதாநாயகனாகத் தோன்றும் பிரபு தேவா காதலன் படத்தைப் பற்றிய பலத்த எதிர்பார்ப்போடு பேசுகிறார். காதலன் ஆடுவான். வெற்றியும் சூடுவானோ? பார்க்கலாம்.




## சிவரஞ்சனி ரெடி

மனசார வாழ்த்துங்களேன் படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் சிவரஞ்சனி. முதற் படம் தோல்விப் படமாக அமைந்திருந்த போதிலும் முன்னணி கதாநாயகர்களோடு நடித்து விட்டார்.

சின்ன மாப்ளேயில் பிரபுவுடனும், கலைஞனில் கமலுடனும் இரண்டாவது நாயகியாக நடித்தார். தற்போது காத்திருக்க நேரமில்லை படத்தில் கார்த்திக்குடனும், ராஜதுரையில் விஜயகாந்துடனும் நடித்து வருகிறார்.

இரண்டு கதாநாயகிகள் படத்தில் அவர் நடிப்பதற்கு மறுப்பதில்லை. இதற்கு இவர் கூறும் காரணம் என்ன தெரியுமோ? கூட நடிக்கும் நடிகையிடமிருந்து நடிப்பிலே சில விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம். போட்டி போட்டு நடிக்கலாம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக நான் இரண்டாவது கதாநாயகியாக நடித்த படங்கள் அனைத்துமே வெற்றிப் படங்கள். அதனால் தான் இரண்டு கதாநாயகிகள் உள்ள படத்தில் நடிக்க மறுப்பதில்லை என்கிறார்.

வலைவீசும் விழியால்
எழில் கொஞ்சும் மயிலாள்
தேடுவது யாரையாம்?
ராஜதுரையை!

## குறுக்கே ஓடியது பூனை! முன்னாலே விதவை!! நேரமோ எமகண்டம்!!! படப்பிடிப்பு ஆரம்பம்!!!!

மன்சூர் அலிகான் ஏதாவது செய்து பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டே இருப்பார் போலிருக்கிறது. இராவணன் படத்துவக்கவிழாவன்று சினிமா உலக நடைமுறையையே மாற்றியமைத்தார் மன்சூர் அலிகான்.

எப்படி என்கிறீர்களா? இதோ இப்படித்தான்.

பஞ்சாங்கம் பார்த்து உள்ளதில் மோசமான எமகண்ட நேரத்தில் நிகழ்ச்சியை ஆரம்பிக்க முடிவு செய்தார்.

எல்லோரும் குத்துவிளக்கேற்றி ஆரம்பிப்பார்கள். அலிகான் குத்துவிளக்கை அணைக்கவைத்து நிகழ்ச்சியை ஆரம்பித்தார். குத்துவிளக்கை யார் அணைத்தவர் ஒரு விதவை. அது மட்டுமோ, பூனையை குறுக்கே ஓடவும் வைத்தார். சீக்கிரமா துவக்க விழா நடக்கட்டும். நல்ல நேரம் வந்து தொலைக்கப் போகுது என்று அவர் அவசரப்படுத்திக் கொண்டிருந்தது வித்தியாசமாக இருந்தது.

மன்சூர் அலிகான் துணிச்சல்காரர்தான். வித்தியாசமான ஆசாமியுந்தான்.

## ரஜனியின் தானம்!

ரஜனியின் சொந்தப்படமான வள்ளியின் படப்பிடிப்பு ஊட்டியில் 18 நாட்கள் தொடர்ந்து நடந்தது. விஷயமறிந்த ரஜனி படப்பிடிப்பில் சம்பந்தப்பட்ட அனைவரையும் அழைத்து கண்டித்தாராம். "ஓய்வு இல்லாமல் ஏன் கஷ்டப்படுகிறீர்கள். இரண்டு நாள் ஓய்வு எடுங்கள்" என்று சொன்னதோடு நிறுத்தவில்லை. குழுவில் இருந்த 60 பேருக்கு ஆளுக்கு 500 ரூபாய் வீதம் செலவுக்கும் கொடுத்திருக்கிறார். வள்ளி இப்போது திரையில் வந்துவிட்டாள்.

## போனால் கிடைக்காதே!

பாவம் ராம்கி. பாஸ்மார்க் படமும் படுத்துவிட்டது. இது போன்ற படங்களில் ஏன் நடிக்கிறீர்கள் என்று கேட்டால், கிடைப்பதே ஒரு சில படங்கள்தான் இதையும் விட்டால் எப்படி என்று கேட்கிறார்.

## சினிமா விமர்சனம்

படம் - உடன் பிறப்பு.
நடிப்பு - சத்யராஜ், சுகன்யா, ரகுமான், கஸ்தூரி, கே.ஆர்.விஜயா, கவுண்டமணி, நாசர், திலகன், ராதாரவி மற்றும் பலர்.
இயக்கம் - பி.வாசு
இசை - இளையராஜா.

கிட்டத்தட்ட சத்யராஜின் சொந்தப்படம் மாதிரி. அவரது மேனேஜர் ராமநாதன் தயாரித்திருக்கிறார். பணச் செழிப்பு காட்சிகளில் தெரிகிறது.


வால்டர் வெற்றிவேலுக்குப் பின் பி.வாசு சத்யராஜ் கூட்டணி தரும் படம் என்பதால் பெரிதாக எதிர்பார்க்கப்பட்டது. ஏமாற்றி விட்டார்கள்.

சத்யராஜ் கொடுத்த பாத்திரத்தை குறைவில்லாமல் செய்துவிட்டு கடைசிக்காட்சியில் உயிரைவிடுகிறார். ரகுமானும் பாத்திரத்தோடு ஒன்றியிருக்கிறார். என்றாலும் ஒரு தொய்வு தெரியத்தான் செய்கிறது.

சத்யராஜ் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை.

சுகன்யா, கஸ்தூரி இருவரும் இருக்கிறார்கள். கஸ்தூரிக்குத்தான் வாய்ப்பு அதிகம். கவர்ச்சி காட்டவும் கஷ்டப்பட்டிருக்கிறார். சுகன்யாவும் குறைவைக்கவில்லை. 'நன்றி சொல்ல வேண்டும்' பாடலில் சத்யராஜ்க்கு நெஞ்சார (நெஞ்சுசார) நன்றி சொல்லுகிறார்.

நட்பின் மகத்துவத்தை சொல்லும் கதை. என்றாலும் கதையின் வலு போதாது. சத்யராஜ் பாணிப் படமென்று பெரிதாக சொல்லிவிட முடியாத படம். என்றாலும் பார்க்கலாம்.






## மினி சினி

★ திருடா திருடாவை அடுத்து முற்றிலும் புதுமுகங்களை வைத்து மணிரத்தினம் ஒரு படத்தை இயக்கவிருக்கிறார். இப்படத்தை சீன் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

★ ஏழாவது மனிதன் படத்தின் மூலமாக அறிமுகமாகி, வில்லன் வேடங்களில் நடித்துப் புகழ் பெற்றவர் ரகுவரன். நீண்ட இடைவெளிக்குப்பிறகு முற்றிலும் மாறுபட்ட கதாநாயகனாக தூள் பறக்குது என்னும் படத்தில் நடிக்கிறார்.

★ வெள்ளையத்தேவன், சாமுண்டி போன்ற படங்களில் தங்கை வேடமேற்று நடித்த மீரா, சர்திஷ் என்னும் ஹிந்திப்படத்தில் ஜாக்கி ஷெராப்பிற்குத் தங்கையாக நடிக்கிறார்.

★ வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் தர்மசீலன் படத்தின் இயக்குநர் செல்வாறு ரவி, டாக்டர் ராஜசேகர் நடிக்கும் ஒரு தெலுங்குப்படத்தையும் இரண்டு தமிழ்ப்படங்களையும் இயக்கவுள்ளார்.

★ பொண்டாட்டி ராஜ்யம் படத்தில் இரண்டாவது நாயகனாக நடித்தவர் ராஜா ரவீந்தர். இவர் தற்போது புருஷலட்சணம் படத்தில் வில்லனாக நடித்துக் கொண்டு, உங்கள் அன்பு தங்கச்சி என்னும் படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார்.

★ அமரம், தேவர்மகன் போன்ற படங்களை இயக்கிய மலையாள இயக்குநர் பரதன், புதுமுகங்களை வைத்து மீண்டும் ஒரு தமிழ்ப்படத்தை இயக்கவிருக்கிறார்.

★ ரவிச்சந்திரன், ஜெயலலிதா நடித்த மகராசி படம் மூலம் அறிமுகமாகிய சங்கர் கணேஷ் இரட்டையர்கள், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி என்று ஆயிரம் படங்களுக்கு மேல் இசையமைத்துள்ளார்கள்.

★ மணிவண்ணனின் அமைதிப்படையில் இரட்டை வேடத்தில் நடிக்கும் சத்யராஜுக்கு மேக்-அப் செய்வதற்கென்று வெளிநாட்டிலிருந்து பிரத்தியேகமாக ஒருவர் வரவழைக்கப்பட்டுள்ளார்.

★ தமிழ்த் திரையுலகின் பிரபல கதை வசனகர்த்தாவான அன்னக்கிளி ஆர்.செல்வராஜ், குயில்தோப்பு என்னும் படத்திற்கு கதை வசனம் எழுதி இயக்குகிறார். இப்படத்தில் இடம் பெற இருக்கும் பாடல்களையும் இவரே எழுதுகிறார்.

★ ஆலயமணி, குடியிருந்த கோயில் போன்ற வெற்றிப்படங்களை இயக்கிய கே.சங்கர் விரைவில் சதம் போடவுள்ளார். தற்போது சரத்பாபு-ஜெயப்பிரதா நடிக்கும் வருவான் மணிகண்டன் என்னும் படத்தை இயக்குகிறார். இது இவரின் 99வது படம். சதம் போடும் படம் எதுவோ?

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# பாப்பா முரசு

## அவசர புத்தி

சென்னிவனம் வளம் மிகுந்த ஓர் ஊர். அந்த ஊரின் ஜீவநாடியே விவசாயம்தான்.

அங்கு மக்கள் அனைவருக்கும் நிலங்கள் இருந்தன. அவர்கள் காலையில் தங்கள் நிலங்களுக்குக் கிளம்பிச் செல்வார்கள். அங்கு பகல் முழுக்க உழைத்து விட்டு மாலையில் வீடு திரும்புவார்கள். அவர்களின் உழைப்பை ஊக்குவிக்கும் வகையில் இயற்கையும் அவர்களுக்கு மழையைத் தந்து உதவியது. இதனால் சென்னிவனத்தில் மூன்று போக விளைச்சல் பெருகியது. இதனால் அவர்கள் எதற்கும் குறைவில்லாமல் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.



ஆனால், வாழ்க்கையில் மகிழ்ச்சியே நிரந்தரமாகி விடுமா? துன்பத்தைச் சந்திக்கும் ஒரு நிலையும் மக்களுக்கு இருக்கிறதே.

அந்த வருடம் மழையே இல்லை. பருவ மழை கூடத் தவறி விட்டது. இதனால் நீர் நிலைகள் எல்லாம் வற்றிவிட்டன. பூமி வரண்டு வெடிப்பு ஏற்பட்டது. பயிர்கள் காய்ந்து உதிர்ந்தன.

யார் செய்த தீவினையோ என்று சென்னிவனம் மக்கள் அழுது புலம்பினார்கள். இருக்கின்ற தானியங்களும் குறைந்து கொண்டு வந்தன. வெகு விரைவில் எல்லாரும் பட்டினி கிடப்பது உறுதி என்ற நிலைக்கு வந்து விட்டனர்.

ஒரு நாள் ஊர்மக்கள் அனைவரும் ஓர் இடத்தில் கூடி அடுத்து என்ன செய்யலாம் என்று பேசிக்கொண்டார்கள். யார், யாரோ என்னென்ன யோசனையெல்லாமோ சொன்னார்கள். ஆனால், எதுவுமே தங்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றாது என்பதை உணர்ந்து கொண்டனர்.

அவர்களில் அனுபவசாலியும், புத்திக்கூர்மையும் உடைய ஒரு முதியவர் ஒரு யோசனை சொன்னார்.

"நம் ஊருக்கு அருகிலுள்ள மலையில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. நாம் மலையை வெட்டி இரண்டு, மூன்று சிற்றருவிகளை உண்டாக்கலாம். அவற்றில் வரும் நீரை வாய்க்கால்கள் மூலமாகக் கொண்டு வந்து நம் நிலங்களுக்குப் பாய்ச்சலாம். தண்ணீர் தேவையற்ற போது வழியை அடைத்து நீரைத் தடுத்துத் தேக்கி வைத்துக் கொள்ளலாம். மிகவும் கவனமாக மலையை வெட்ட வேண்டும்," என்று கூறினார் அந்த முதியவர்.

"நல்ல யோசனை, உடனே செயற்பட வேண்டும்," என்று ஊரார் அனைவரும் அந்த யோசனையை ஏற்றுக் கொண்டார்கள்.

மறுநாளே சென்னிவனத்தில் உள்ள இளைஞர்கள் அனைவரும் அலவாங்கு, மண்வெட்டி போன்ற கருவிகளை எடுத்துக் கொண்டு மலைக்குப் போனார்கள்.

முதியவர் சொன்ன யோசனைப்படி மலையை இரண்டு, மூன்று இடங்களில் வெட்டினால் எல்லா நிலங்களுக்கும் நீர் கிடைக்க நாளாகும். ஆகவே, மலையைச் சுற்றிலும் பல வழிகளை வெட்டிவிட்டால் அவற்றின் வழியே நிறைய நீர் வெளியேறி விரைவாக எல்லா நிலங்களுக்கும் பாய்ந்து விடும். நாமும் உடனே உழுது பயிர் செய்து விடலாம், என்ற புதிய யோசனையோடு இளைஞர்கள் மலையை வெட்டி ஏராளமான வழிகளை ஏற்படுத்தினார்கள்.

அன்று இரவுக்குள் ஏரி நீர் முழுவதும் மலையை உடைத்துக்கொண்டு எல்லா வழிகளிலும் இறங்கி ஊருக்குள் வரத் துவங்கியது.

இளைஞர்கள் தங்கள் யோசனை பதிலளித்துவிட்டது என்று அறிந்து ஒருவரை ஒருவர் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

ஆனால், அந்த மகிழ்ச்சி மறுநாள் காலையில் இல்லை. மலையின் பல பாகங்களை உடைத்து விட்டதால் நீர் கட்டுக்கடங்காமல் வெளியேறிப் பெரு வெள்ளமாக ஊருக்குள் புகுந்திருந்தது. நிலங்கள் எல்லாம் இருக்கும் இடமே தெரியாமல் நீரில் மூழ்கின. வீடுகளையும் வெள்ளம் சூழ்ந்து விட்டது.

இதனால் ஊர்மக்கள் பட்ட வேதனைக்கு அளவே இல்லை.

"முதியோர் சொற்படி சில வழிகளை மட்டுமே ஏற்படுத்தியிருந்தால் இத்தனை துன்பம் வந்திருக்காதே" என்று ஒரு சாரார் இளைஞர்களைத் திட்டித் தீர்த்தார்கள்.

"இளைஞர்கள் தங்களின் விவேகத்தை இதில் தானா காட்டுவது? அவ்வளவு தண்ணீரும் வீணானதோடு, ஒரு சொட்டு நீரைக்கூட உபயோகப்படுத்த முடியாதபடி செய்து விட்டார்களே" என்று இன்னொரு சாரார் இளைஞர்களைத் திட்டித் தீர்த்தார்கள்.

இளைஞர்கள் தங்கள் தவறை உணர்ந்து அந்த முதியவரிடம் மன்னிப்புக் கேட்டார்கள்.

அன்புக் குழந்தைகளே! அறிவாளிகள் பிறர் சொல்லை மதித்து, அதன்படி நடப்பார்கள். எதையும் திட்டமிட்டுச் செயலாற்றி அதில் வெற்றி காண்பார்கள். அறிவற்றவர்களோ யார் சொல்லையும் மதிக்காமல் தங்கள் இஷ்டத்திற்குச் செயற்பட்டு, இறுதியில் தோல்வியையே காண்பார்கள். அந்த முதியவர் சொற்கேட்டு அந்த இளைஞர்கள் நடந்திருந்தால் அவர்களுக்கு இத்தனை துன்பம் வந்திருக்குமா? யோசியுங்கள். நல்ல விதமாகச் செயற்பட்டு வெற்றி காணுங்கள்.

## வர்ணம் தீட்டும் போட்டி இல.3

**பரிசுக்குரியவர்–**
**கே.ஸ்ரீதினேஷ்குமார்**
**மகாஜன கல்லூரி**
**மட்டக்களப்பு.**

### பாராட்டுப் பெறுபவர்கள்

எச்.ஏ.ஜே.எம். ஜுமான்
வரக்காப்பொல.

எம்.எம். உவைஸ்
காத்தான்குடி-04.

எஸ் சாந்தகுமார்
தெபுவன.

சாஹிதா தாஹிர்
வெலிகம.

ஸ்ரீதேவி
ஹெந்தளை, வத்தளை.

ஏ.சிவகுமார்
ராஜவெல்ல தமிழ் மகா வித்தியாலயம்
கண்டி.

எஸ். சாந்தி சப்னா
புத்தளம்.

எம்.இசட்.எப்.சானாஸ்
ஹெம்மாதகம.

எஸ்.லீலா
கொழும்பு-05.

கே.புஸ்பலதா
வவுனியா.


கே.எஸ்.சஜனீதரன்
தலத்துஓயா.

செ.நகுலேந்திரன்
திருகோணமலை.

பாத்திமா பர்சானா சரிப்
கொழும்பு-13.

ஜே.டி.ஜெயசந்திரன்
சிலாபம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு சிறந்த வர்ணம் தீட்டி அனுப்புங்கள். சிறந்த படமொன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 11.09.93.

முகவரி:
வர்ணம் தீட்டும் போட்டி இல-05
தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி பிளேஸ்
கொழும்பு-05.

1. இரகசியம் எல்லாம் உன்னிடம் தான். நீ வருடமெல்லாம் என்னிடம் தான். அது என்ன?
2. ஓராயிரம் பேர் சேர்ந்து கட்டிய மாளிகை. ஆனால் உட்கார இடமில்லை. அது என்ன?
3. கன்று நிற்க கயிறு மேயும். அது என்ன?
4. மாப்பிள்ளையை சிறக்க வைக்கும், முத்துப்பல்லை ஆடவைக்கும், அது என்ன?
5. போகும் இடமெல்லாம் கோடு கிழித்து விடுவாள். அவள் யார்?
6. பின்புறத்தில் சாப்பிட்டு முன் புறத்தில்(வாய்) வெளியிடுவான் அவன் யார்?
7. வித்தகன் கண்ட பறவை, அத்தனை இடத்தையும் சுற்றிடும் பறவை. அது என்ன?
8. தாய் இனிப்பாள், மகள் புளிப்பாள், பேத்தி மணப்பாள், இவை என்ன?
9. தட்டுத் தட்டாய் மலர்ந் திருக்கும். சொட்டுத் தண்ணீர் ஒட்டாது அது என்ன?
10. அடிக்காமல் அழுவான் அவன் யார்?

விடைகள்
1. டயரி
2. தேன்கூடு
3. பூசனிக்காய்
4. முறுக்கு
5. நத்தை
6. சீவுளி
7. விமானம்
8. பால், தயிர், நெய்
9. தாமரை இலை
10. ஐஸ் பழம்.

நிர்மலன் சச்சிதானந்தன்
அரசினர் தமிழ் வித்தியாலயம்
வெள்ளவத்தை

## இது இப்படி!


1. இடத்திற்கேற்ற முறையில் நடந்து கொள்பவர்- **விவேகி.**
2. ஒன்றினை உபயோகிக்கு முன்னர் செய்து பார்க்கும் பரீட்சை- **ஒத்திகை.**
3. ஒன்றைத் தொடங்குவதற்குச் செய்யும் விழா- **வைபவம்.**
4. ஒரு பொருள் பற்றி பல கருத்துத் தெரிவிக்க ஒழுங்கு செய்யப்படும் கூட்டம்- **கருத்தரங்கு.**
5. தான் கற்ற கலையை மேடை ஏற்றி சபையோரை ஏற்றுக் கொள்ளச் செய்தல்- **அரங்கேற்றம்.**
6. அவையில் சொல்லத் தகாத சொல்லை மறைத்து வாய்ப் பாட்டாற் கூறுவது- **இடக்கரடக்கல்.**
7. ஒரு கூட்டத்தினர் ஒரு பொருளை அதற்குரிய சொல்லால் கூறாது வேறு சொல்லாற் கூறுவது- **குழுஉக்குறி.**
8. ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் உரை- **அணிந்துரை.**
9. ஒரு நூலை வெளியிடுவோர் அந் நூலைப் பற்றிக் கூறும் உரை- **பதிப்புரை.**
10. ஒரு நூலுக்கு நூலாசிரியர் வழங்கும் உரை- **முன்னுரை.**
11. இல்லது, இனியது, நல்லதை புனைந்து கூறுதல்- **புனைந்துரை.**
12. பல நிகழ்ச்சிகளின் கலவை-**கதம்பம்.**
13. வாங்கிய அளவே திருப்பிக் கொடுப்பது- **குறி எதிர்ப்பு.**
14. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன்- **சகபாடி.**
15. உலக முடிவின் காலம்- **ஊழி.**

**எஸ்.அப்துல் றகீம்**
**ஏறாவூர்-06.**

## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

இரு படங்களிலும் உள்ள மூன்று வித்தியாசங்களை மட்டும் கண்டுபிடித்தால் போதும். சரியான விடை எழுதும் அதிஷ்டசாலிகள் ஆறுபேரின் பெயர்கள் பிரசுரமாகும். தபாலட்டையில் மட்டும் எழுதுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.09.93.

முகவரி- கண்டுபிடியுங்கள்
தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி பிளேஸ்
கொழும்பு-05.



## விடுகதைகளும் விடைகளும்

1. வைத்தியர் வந்தார். ஊசி ஏற்றினார். பணம் வாங்காமல் சென்றுவிட்டார்?
2. கையால் செய்த பூ, தலையில் வைக்க முடியாதபூ. அது என்ன?
3. இலை இல்லை பூ இல்லை, கொடி உண்டு. அது என்ன?
4. கறுப்பு நிறச் சிங்காரிக்கு வெள்ளைக் கரைச்சேலை?
5. தாய்மடியில் மகள் சுற்றி சுற்றி வருகிறாள். அது என்ன?

விடைகள்
1. நுளம்பு
2. தேங்காய்ப் பூ
3. கைரேகை
4. சிலேற்று
5. ஆட்டுக்கல்

த. தங்கராஜேஸ்வரன்
ஈச்சிலம்பற்றை.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை



# காசே எல்லாமாகி விடுவதில்லை!

-முகில் வண்ணன்-

"அம்மா உங்களுக்கு வேற வேலை இல்லையா? அவங்கட்டப் போய் சாதகக் குறிப்பு கொடுக்கப் போறன் என்றீங்க?" என்று கேட்டான் அருணன்.

"அவங்கட சொந்தக்காரங்க தான் கேட்கிறாங்க. அவங்கட சம்மதமில்லாமல் வந்து கேட்டிருக்க முடியாது. எதுக்கும் கொடுத்துப் பார்ப்பம். ஏன் உனக்கு அந்தப் பிள்ளையில விருப்பம் இல்லையோ?" இது தாய் விசாலாட்சி.

"இல்லம்மா அதுக்கில்ல. அவங்க பெரிய இடம். நல்ல சொத்துப் பத்து இருக்கிறது. நல்ல கொளுத்த சீதனம் கொடுத்து அவளுக்கு இன்ஜினியர், டொக்டர் எடுப்பாங்க. சொந்தத்திலயும் மாப்பிள்ளை இருக்கிறது. யாரை யாரோ பேசி இருக்காங்களே. நமக்கும் அவங்களுக்கும் ஏணி வைச்சாலும் எட்டாதே அதுதான் சொன்னநான்".

ராதா பணக்கார வீட்டுப் பெண். ஊரில அரைவாசிப்பேர் அவர்கள் சொந்தம். மாமன் மச்சான் என்று நிறையப் பேர் இருக்க நம்மிடம் சாதகம் கேட்பது என்பது நடக்கக் கூடியதா என்று எண்ணித்தான் அருணன் சொன்னான். ராதாவின் தகப்பன் விரும்பினால் மாப்பிள்ளையை விலைக்கும் வாங்குவார் என்று அவனுக்குத் தெரியும். அப்படிப் பட்டவர்கள் சாதாரண கிளார்க் வேலை பார்க்கும் என்னுடைய சாதகத்தைக் கேட்டிருக்கிறார்கள் என்றால்......!

"என்ன பெரிய பணம் இருந்தாலும் எத்தனை சொந்த பந்தம் இருந்தாலும் பெண்ணுக்குப் பொருத்தமான மாப்பிள்ளையும் வேண்டுமே! எல்லாம் சரி வந்தாத்தானே கல்யாணம் முடிக்கலாம். கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். ஏன் உனக்கு என்ன குறை? தகப்பன் இல்லாவிட்டாலும் உன்னை நல்லாப் படிக்க வைச்சு உத்தியோகமும் பார்க்கிறாய். உன்னிடம் ஒரு கெட்ட பழக்கமும் இல்லை. எந்தப் பொண்ணையும் பெற்ற தகப்பனும் உன்னையும் ஒருமுறை நினைச்சுப் பார்க்கத்தான் செய்வான்." அவனுடைய தாய் மகனைப் பற்றிப் பெருமிதத்தோடு பேசினாள்.

அருண் தகப்பனை இழந்து இருந்தாலும் ஒழுக்கமாக வளர்ந்து இருந்தான். வாட்ட சாட்டமான ஆண்பிள்ளை. மேற்படிப்பு படிக்க வசதி இல்லாததால் இடையில் படிப்பை நிறுத்திக் கொண்டு 'கிளறிக்கல்' பரீட்சை எழுதி சித்தியடைந்து 'கிளார்க்கர்' வேலையும் கிடைத்து விட்டது. இப்போது கல்யாண வயதை எட்டிவிட்ட அவனுக்கு எல்லாப் புருஷலக்ஷ்ணங்களும் ஒருங்கே அமைந்திருந்தன.

அவர்கள் சொந்தக்காரர் ஒருவர் அருணின் சாதகக் குறிப்பைக் கேட்டு வந்ததும் மகனிடம் சொல்லிவிட்டுக் கொடுக்க என்று தாய் விசாலாட்சி கூறவே அருணன் இவ்வாறு சொல்ல பேச்சு விரிந்தது. அவரும் 'எதற்கும் தாங்க பொருத்தத்தை முதலில் பார்ப்பம். பொருந்தினால் பிறகு பேசுவம்' என்றுதான் கேட்டார். அவர் குறிப்பிட்டதில் இருந்து எத்தனை மாப்பிள்ளை சொந்தத்தில் இருந்தும் பொருத்தம் இல்லை என்றும் சிலருக்குச் சில காரணங்களால் கொடுக்க விரும்பவில்லை என்றும் கூறத் தன் மகனுக்குத் தான் அந்த அதிஷ்டம் இருக்கிறது என்று எண்ணி மகிழ்ந்தாள் விசாலாட்சி.

நல்லதொரு நாளைப் பார்த்து- பிள்ளையார் படத்துக்கு முன்னால் வைத்து "பிள்ளையாரே நீதான் இவனுக்கு இந்தக் கல்யாண சம்பந்தம் பொருந்தி வரச் செய். நான் ஒருகைம்பெண். என்னால் வேறு இடம் தேடிப் போக முடியவில்லை. உனக்குப் பட்டும் சாத்தி அபிசேகமும் செய்கிறேன்" என்று நேர்த்தி வைத்து விட்டுத்தான் குறிப்பை கொடுத்தாள்.

இரண்டு நாட்களில் சாதகம் நல்ல முறையில் பொருந்தி இருப்பதாகவும், ஆடி பிறக்க இருப்பதால் விரைவில் பேச்சு வார்த்தையை முடித்துக் கொண்டு ஆவணி பிறந்ததும் கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று வந்தவர் கூறினார். விசாலாட்சிக்கு உண்மையிலே தலைகால் புரியாத மகிழ்ச்சி. தன்னுடைய மகனுக்கு இப்படி ஒரு இடம் கிடைத்தால் எந்தத் தாய்தான் மகிழ மாட்டாள்.

"அண்ண எனக்கெண்டா ஒருதுணையும் இல்ல எப்படிச் சீதனம் பேசுறதெண்டும் தெரியல்ல. எதுக்கும் நீங்கதான் வந்து பேச்சுவார்த்தையையும் முடிச்சு வைக்க வேணும்".

"சரி சரி நீ ஏன் வீணாகக் கவலைப் படுகிறாய்? "மீன் கரைஞ்சால் ஆணத்துக் குள்ளதானே" நான் பேசி முடிக்கிறன். இரண்டு பெட்டைகளுக்கு கல்யாணம் முடிஞ்சு போயிட்டு. இனி இருக்கிறதெல்லாம் இவள் கடைசிப் பெட்ட ராதாவுக்குத் தானே. நீ கவலைப் படாதை எல்லாம் சரிவரும்".

அவர் சொன்னதுபோல் அவள் கேட்காமலே இரண்டு லட்சம் சீதனப் பணமும் 25 பவுண் நகையும், வீடுவளவும் 5 ஏக்கர் காணியும் அவளுக்குக் கொடுக்கப்பட்டு ஆவணி பிறந்ததும் முதல் முகூர்த்தத்திலே திருமணம் நடந்தேறியது.

'சுந்தரி நீயும் சுந்தரன் யானும்...' என்பது போல பொருத்தமான சோடியாக திருமண வாழ்வு நிறைவு பெற்று திருப்தியான காதல் வாழ்க்கையில் நிறைவான இன்பம் துய்த்தனர். அருணன் அவளைப் பற்றி எதிர்பார்த்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். தன்னுடன் அவள் எல்லாவற்றிற்கும் ஒத்துழைத்ததில் மகிழ்ந்து போனான்.

முதல் மாத சம்பளத்தை எடுத்து வந்து மனைவியின் கையில் கொடுத்தான். அவள் "இதையேன் என்னிடம் தருகிறீர்கள்? நீங்களே அலுமாரியில் வைப்பது தானே" என்று பெருந்தன்மையுடன் கூறிவிட்டாள்.

ஐந்தாறு மாதங்கள் கடந்தவிட்டது. அருணன் தன் தாய்க்கு கொடுப்பதைக் கொடுத்துவிட்டு மிகுதியை வழமைபோல் அலுமாரியில் சேர்த்து வைத்தான். மனைவியிடம் அம்மாவுக்கு இவ்வளவு கொடுத்தேன் மிகுதியை வைத்துவிட்டேன் என்பான். அவள் அதைப் பொருட்படுத்துவதே இல்லை. வீட்டில் சாப்பாட்டுக்கோ வேறு எதற்கோ அவன் காசு செலவழிக்க வேண்டிய தேவை இருக்கவில்லை.

அப்போது தான் தைப்பொங்கல் வந்தது. 'அத்தான் இம்முறை தைப்பொங்கலுக்கு அக்காமார் அப்பா அம்மாவுக்கு உடுப்பு எடுக்க முன்னர் நாம் எல்லாருக்கும் எடுத்து விட வேண்டும். அப்பாவுக்கு ஒரு பட்டு வேட்டி. அம்மாவுக்கு ஒரு பட்டுச்சாரி. மாமிக்கும் எனக்கும் உங்களுக்குமாக எடுக்க வேண்டும். இதை உங்கள் உழைப்பில் நீங்கள் சேர்த்து வைத்து இருப்பதிலேயே எடுத்துக் கொடுங்கள். அக்கா அப்பாவுக்கு விலை கூடிய பட்டுச் சரிகை வேட்டி எடுத்துக் கொடுப்பாள். இந்த முறை நாம் முந்த வேண்டும்" என்றாள்.

இருவருமாக கடைக்குச் சென்று சாமான்களை எல்லாம் எடுத்தனர். விலையுயர்ந்த உடுப்புகளைத் தேர்ந்து எடுத்தாள். இவற்றிற்கு எவ்வளவு வரும் என்று தெரியாது அவனும் கூடவே இருந்து எடுத்தான். இப்படியான உடுப்புக்களை அவன் இப்போதுதானே பார்க்கிறான்.

பில் போட்டதும் பணத்தைக் கொடுக்கச் சொல்ல அவன் கொண்டு வந்திருந்த முழுவதையும் எடுத்துப் பலமுறை எண்ணியும் ஒன்பதினாயிரமே வந்தது. பில்லோ பதினைந்தையும் தாண்டி இருந்தது.

தனது டம்பப் பையைத் திறந்து 'பில்'லைச் செலுத்தி விட்டு ஆட்டோவில வரும்போது கூறினாள்! "கடைக்கு வரும்போது கொஞ்சம் கூடக்குறைய காசு கொண்டுவரப் போடாதா? இப்படித்தானா மானம் போக வைக்கிறது? நல்லவேளை என்னிடம் காசு இருந்தது. இல்லையென்றால் மானம் போய் இருக்கும்" என்றாள்.

"என்ன ராதா பேசுகிறாய்? நீதானே சொன்னாய் சம்பளக்காசு முழுவதையும் எடுத்துக்கொண்டு வரச்சொல்லி. அதைத்தான் எடுத்துக் கொண்டு வந்தநான்".

ராதாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. என்ன சொல்கிறான்? ஐந்து மாதச் சம்பளம் இவ்வளவுதானா? ஒரு வருஷம் பெருநாளுக்கு உடுப்பு எடுக்க முடியாதா? அவளால் நம்பவே முடியவில்லை. கோபமாக வந்தது. ஆட்டோவுக்குள் எதுவும் பேசக்கூடாது. வீட்டுக்குப்போய் பார்ப்போம் என்று பொருமிக் கொண்டிருந்தாள்.

"ராதா ஐஸ்கிறீம் சாப்பிட்டு விட்டுப் போவமே. நீதானே ஆசைப் பட்டாய்" என்றான் அருணன்.

"எனக்கு இப்போது எதுவும் வேண்டாம். விரைவாக வீட்ட போனாப் போதும். தலையிடிக்குது" என்றாள்.

அவனுக் கெங்கே தெரியப் போகிறது வீட்டுக்குச் சென்றதும் ஒரு பூகம்பமே வெடிக்கப் போகிறது என்று.

வீட்டுக்கு வந்ததும் தாச்சியில் போட்ட சோளங்கொட்டைபோல் பொரிந்தாள் ராதா.

"இந்த பிச்சச் சம்பளத்தை வைச்சு எப்படிக் குடும்பம் நடத்தப் போறீங்க? வீட்டுச் செலவு இல்லாமலே ஐந்து மாதச் சம்பளம் ஒரு வருஷத்துக்கு உடுப்பு எடுக்கக் காணாது. அப்பாவும் என்னை நல்லா ஏமாற்றிப் போட்டார். இனி அடுத்த மாதத்தில இருந்து வீட்டுச் செலவு முழுவதும் உங்கட பொறுப்புதான். என்ன செய்வீங்களோ ஏதுசெய்வீங்களோ எனக்குத் தெரியாது. மாதம் ஆறு ஏழாயிரம் வீட்டுச் செலவுக்குத் தரவேணும்.....?"

அவன் சொன்ன சமாதானம் எதுவும் அவள் காதில் விழவில்லை. அவளை மறித்து அவனால எதுவும் பேச முடியவில்லை. தகுதிக்கு மீறிச் சம்பந்தம் வைத்துக் கொண்டதால் வந்த வினையை முதன் முதலாக உணர்ந்தான் அருணன். எதுவும் நமது சக்திக்கு உட்பட்டதாக இருக்க வேண்டுமே என்று எண்ணிக் கலங்கினான்.

தகப்பன் தலையிட்டபோது அவருக்கும் பேச்சே கிடைத்தது.

"உனக்கு ஒரு மாப்பிள்ளை வேண்டும். அதைத்தான் தேடித்தந்திருக்கிறேன். காசு பணம் தான் நம்மிடம் இருக்கிறதே. எல்லாவற்றையும் பார்த்தால் உனக்கு ஒழுங்கான மாப்பிள்ளை கிடைப்பானா? உனக்கு ஏழில் செவ்வாய். செவ்வாய் தோச மாப்பிள்ளையே தேட நான் பட்ட கஷ்டம் உனக்குத் தெரியுமா"?

"கோவில் மாடு போல ஒரு மாப்பிள்ளையா நான் கேட்டேன். என்னைக் காலம் பூரா காப்பாத்த வேண்டாமா? என்னுடைய காசை நம்பி வாழ்பவரை நான் எத்தனை நாள் நம்பி வாழ முடியும்? அக்காமாரிர கணவர்மார் எப்படி எல்லாம் வெளிநாட்டில் உழைக்கிறார்கள். என்னவெல்லாம் தேடி இருக்கிறார்கள். அது போல் நான் தேட எத்தனை வருடமாகும்.....?" சொல்லி சொல்லி அழுதாள் ராதா.

"ராதா மாப்பிள்ளையைக் கட்டிக் கொண்டாய். இனி உனக்கு வேண்டிய மாதிரி ஆக்கிக் கொள்வது உன் பொறுப்பு. இதற்கு இத்தனை ஆர்ப்பாட்டமா? இதெல்லாம் காதோடு காதாகச் செய்ய வேண்டியது." அப்பா கூறிவிட்டுச் சென்று விட்டார்.

அன்று இரவுச் சாப்பாடு ஒரே மேசையில் இல்லை. இரவுப் படுக்கையும் ஒரே கட்டிலில் இல்லை. நாட்கள் செல்லச் செல்ல பிரிவினை வளர்ந்தது. அருணன் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்துப் போனான்.

பொங்கல் அன்று வேண்டா வெறுப்பாக ஆடை உடுத்து கோயிலுக்குப் போய் வந்து ஒரே மேசையில் எல்லோருடனும் இருந்து சாப்பிட்டாள் ராதா. ஆனால் அருணனைக் கவனிக்கவில்லை.

சாப்பிடும் போது மாமா, "ஏன் அருணன்! நீங்க வெளிநாடு போய் உழைத்தால் என்ன?" என்று ஆரம்பித்து வைத்தார்.

"எனக்கு அரசாங்க உத்தியோகம். இதில இருந்தால் கை நிறையச் சம்பளம் கிடைக்காவிட்டாலும் கடைசிகாலம் வரை கஷ்டம் இல்லாமல் வாழலாம். பென்சனும் கிடைக்கும். சொகுசாக வாழவேணும் எண்டால் வெளிநாடு தான் செல்ல வேணும். அதில இருக்கிற கஷ்டத்தை உணர்ந்தாச் சரிதான். இனி அது ராதாவின் விருப்பம்" என்றான் அருணன்.

"ராதாவின் அத்தான்மார் வெளிநாட்டில் உழைத்து அக்காமார் இருவரும் சொகுசாக வாழ்கிறார்கள். அதுதான் ராதாவும் விரும்புகிறாள் போல....."

"ராதாவோட பேசி முடிவெடுக்கிறேனே!" என்று முடித்து விட்டு மேசையிலிருந்து எழும்பி விட்டான்.

தன்னைக் கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கிய தாயை கடைசி காலத்தில் கிட்ட இருந்து கவனிக்க முடியாதென்ற கவலை. தான் கஷ்டப்பட்டுப் படித்துத் தேடிய வேலையைக் கைவிட்டுப் போக வேண்டுமே என்ற ஆதங்கம். இப்போதுதான் ஆரம்பமாகி இருக்கும் குடும்ப வாழ்வை யாரோ தட்டிப் பறிப்பது போன்ற பிரமை. எல்லாம் சேர்ந்து அவன் கண்ணீரில் சுடுநீரை வரவழைத்துக் கொண்டிருந்தது. வெட்ட வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தான் அருணன்.

வீதியில் சில பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தது அவன் கண்ணில் பட்டது. அந்தப் பாக்கியம் நமக்குக் கிடைக்குமா என்று எண்ணி ஏங்கியது அவனது உள்ளம்.

அப்போது ராதா வந்து அவன் தோளில் கை வைத்தாள்.

"என்மீது கோபமா? மன்னித்து விடுங்கள். எனது விருப்பப்படி நடப்பதாகச் சொன்ன போதே எனது அத்தான் எவ்வளவு நல்லவர் என்று மகிழ்ந்து போனேன். நானே உங்களிடம் சொல்லி இருக்கலாம்" என்றாள்.

"ராதா என்ன இருந்தாலும் உனக்கு இத்தனை அகம்பாவம் கூடாது. அமைதியான இன்பமான குடும்ப வாழ்வு வேண்டுமா? இல்லை ஆடம்பரமான வாழ்வு வாழப் பணம் மட்டும் போதுமா? எது வேண்டும் என்று சிந்தித்து முடிவைச் சொல். உனக்கு

(மறுபக்கம் பார்க்க)

## இந்த வாரம் உங்கள் பலன்

(05.09.93 முதல் 11.9.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், புதன் |
| கன்னி | - வியாழன், செவ்வாய் |
| விருட்சிகம் | - இராகு |
| இடபம் | - கேது |
| கர்க்கடகம் | - வெள்ளி |
| மகரம் | - சனி |

மேடம், இடபம், மிதுனம், இராசிகளில் சந்திரன் சஞ்சரிப்பார்.

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | முயறச்சி மேன்மை, உயர்ந்த வாழ்க்கை. | காலை 11 மணி |
| புதன்- | ஆடம்பரச் செலவு, வீண் வாக்குவாதம். | காலை 10 மணி |
| வியாழன்- | எதிர்பார்த்த பண வரவு, எதிரிகள் தொல்லை. | காலை 9 மணி |
| வெள்ளி- | மறைமுக எதிர்ப்பு, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| சனி- | உறவினர் வருகை, வீண் செலவு. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்:

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பகைவர் வீழ்ச்சி, பல்துறை மேன்மை. | பி.ப 6 மணி |
| திங்கள்- | சுபகாரிய மகிழ்ச்சி, அந்நியர் சகவாசம். | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | காரிய மேன்மை, கடன் பயம் தீரும். | பி.ப 2 மணி |
| புதன்- | உறவினர் உதவி, பெரியோர் நட்பு. | காலை 10 மணி |
| வியாழன்- | வீண் கலகம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | நடைக்கஷ்டம், எண்ணிய கருமம் வெற்றி. | பி.ப 3 மணி |
| சனி- | தூரஇடப் பிரயாணம், வீண் செலவு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் -வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனஇலாபம், பிள்ளைகளால் மகிழ்ச்சி. | பி.ப 4 மணி |
| திங்கள்- | கண்டத்திற்கு மேற்பட்ட நோய், சஞ்சலம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், இடப்பிரிவு. | காலை 11 மணி |
| புதன்- | வீண் அலைச்சல், கோபமிகுதி. | பி.ப 2 மணி |
| வியாழன்- | காதல் பிரச்சனை, சுபகாரியத் தடை. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, குடும்ப சுகம். | காலை 9 மணி |
| சனி- | தீயோர் நட்பு, வீண் குறை கேட்டல். | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரிய அனுகூலம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | மறைமுக நோய், வாழ்க்கையில் திருப்பம். | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 10 மணி |
| புதன்- | புண்ணியத் தல யாத்திரை, எண்ணங்கள் வீழ்ச்சி. | காலை 9 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, உயர்ந்த வாழ்க்கை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | தெய்வ நம்பிக்கை, பிரயாணம். | பி.ப 1 மணி |
| சனி- | செலவு அதிகம், பணத்தட்டுப்பாடு. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பிரயாணம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | புண்ணியப் பேறு, புகழ், கீர்த்தி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | பணவரவு, காரிய சித்தி. | காலை 9 மணி |
| புதன்- | வீண் செலவு, தேவையில்லாக் கவலை. | காலை 11 மணி |
| வியாழன்- | பணத்தட்டுப்பாடு, பிரயாச மிகுதி. | காலை 10 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| சனி- | பணவரவு, மனமகிழ்ச்சி. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினரால் தொல்லை, குறை கேட்டல். | காலை 8 மணி |
| திங்கள்- | பயமிகுதி, தூர இடப்பிரயாணம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | பணப்புழக்கம், தருமசிந்தை. | காலை 11 மணி |
| புதன்- | காரியானுகூலம், பிரயாண மிகுதி. | காலை 10 மணி |
| வியாழன்- | உறவினர் நெருக்கம், கொடுக்கல் வாங்கல் பிரச்சனை. | காலை 8 மணி |
| வெள்ளி- | முன்னேற்றம், உயர்ச்சியுண்டு. | பி.ப 1 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, தந்தை வழிச் செல்வாக்கு. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | கவலைகள் நீங்கும், காரியம் கைகூடும். | பி.ப 3 மணி |
| திங்கள்- | அகால போசனம், அந்நியர் சகவாசம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | பெரியோர் ஆசி, தொழில் பலிதம். | காலை 10 மணி |
| புதன்- | எண்ணிய கருமம் வெற்றி, புகழ். | காலை 11 மணி |
| வியாழன்- | பூமியால் லாபம், கீர்த்தி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | உறவினர் கொண்டாட்டம், செலவு. | பகல் 1 மணி |
| சனி- | செய்தொழில் விருத்தி, மேன்மை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி:

(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | கடின உழைப்பு, கஷ்ட நிலை. | பகல் 12 மணி |
| திங்கள்- | மனக்கசப்பு, பணத்தட்டுப்பாடு. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 11 மணி |
| புதன்- | பயணம், பொருள் இழப்பு. | காலை 9 மணி |
| வியாழன்- | அந்நியரால் தொல்லை, அலைச்சல் மிகுதி. | காலை 11 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, மறைமுக எதிர்ப்பு. | காலை 10 மணி |
| சனி- | புகழ், கீர்த்தி, பணச் செலவு. | பகல் 1 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-6

### மகரம்:

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணத்தட்டுப்பாடு, குடும்பக் கலகம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | தீயோர் தொல்லை, வீண் கலகம். | காலை 11 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, பணச் செலவு. | காலை 9 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், வீணான தொல்லை. | காலை 11 மணி |
| வெள்ளி- | பகை நீங்கும், பாராட்டு. | பி.ப 3 மணி |
| சனி- | முன்னேற்றம், பணவரவு. | பி.ப 5 மணி |

அதிஷ்டநாள் - சனி, அதிஷ்ட இலக்கம்-7

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனதானிய விருத்தி, புகழ், மேன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | உறவினர் பகை, வீண் செலவு. | காலை 11 மணி |
| புதன்- | சுபகாரியத் தடை, தீராத நோய். | பி.ப 2 மணி |
| வியாழன்- | உயர்வு, எதிர்பாரா விபத்து. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | காணி பூமி பிரவேசம், செலவு மிகுதி. | பி.ப 5 மணி |
| சனி- | பலவித பேறு, பணத்தட்டுப்பாடு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணப்புழக்கம், உயர்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | கவலைகள் நீங்கும், நற்காரிய சித்தி. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | பணத்தட்டுப்பாடு, எதிர்ப்பு நிலை. | பி.ப 6 மணி |
| புதன்- | உயர்ந்த வாழ்க்கை, எதிரிகள் தொல்லை. | காலை 7 மணி |
| வியாழன்- | பெரியோர் சினம், மனஸ்தாபம். | காலை 11 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| சனி- | துயர் நீங்கும், நன்னிலை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ச்சி, முன்னேற்ற வாழ்க்கை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | நடைக்கஷ்டம், வீண் செலவு. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | அதிகார விருத்தி, பொருள் வரவு. | காலை 10 மணி |
| புதன்- | பெரியோர் சகவாசம், உயர்வு. | காலை 11 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், இன்ப வாழ்வு. | காலை 9 மணி |
| வெள்ளி- | தெய்வ அனுகூலம், தேகசுக மேன்மை. | காலை 10 மணி |
| சனி- | பாராட்டு, மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்

## பிணி அகற்றும் மணி மாலைகள்!

தீமை தரும் நுண்ணுயிர்க் கிருமிகளை அழிக்க வல்ல மூலிகைகளாலான மணிகளைத் தொகுத்து, கழுத்தில் மாலைகளாக அணிந்து கொள்வதன் மூலம் பல தொற்று நோய்களிலிருந்து தற்காத்துக் கொள்ள முடியும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். 'அன்ரிபயட்டிக்ஸ்' என்று கூறப்படும் நுண்ணுயிர்க் கொல்லி ஊசி மருந்துகள் மற்றும் மாத்திரைகள் சில நோயாளிகளுக்கு எதிர்பார்த்த பலனைத் தருவதில்லை. அத்துடன் இவை மாற்று விளைவுகளையும் சிலருக்கு ஏற்படுத்தவும் கூடும். இத்தகைய மருத்துவத் தன்மை கொண்ட மூலிகைகளாலான -அல்லது பல சேர்க்கைகளாலான மணிகளைக் கொண்ட மாலைகளை



அணிவதன் மூலம் எதிர்பார்த்த பலன் கிடைக்கிறது என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இடையின் கீழ் காயப்பட்டவர்களுக்கு இத்தகைய மாலைகளை அணிவித்து சிகிச்சை அளிக்கப்பட்ட போது, வேறு பல மருந்துகளாலும் ஆறாத புண்கள் ஆறியிருப்பதாக ஆய்வாளர்கள் கண்டுள்ளனர்.

லுயிஸ்வில்லி பல்கலைக்கழக மருத்துவத் துறையின் ஒரு மையத்துக்குப் பொறுப்பாகவிருக்கும் டாக்டர் ஸ்ரீஃபன் ஹென்றி இத்தகவலை வெளியிட்டுள்ளார். அங்கவீனர்களுக்கான சத்திர சிகிச்சை நிபுணரான டாக்டர் ஸ்ரீஃபன் மாட்டின் தன்னிடம் சிகிச்சைக்கு வரும் நோயாளர்களுக்கு உடலுக்குத் தீமை அளிக்கும் நுண்ணுயிர்க் கிருமிகளை அழிக்க ஊசி மருந்துகளையோ, உட்கொள்ளும் மருந்துகளையோ அதிகமாகப் பயன்படுத்தாமல் மருத்துவப் பொருள் பொதிந்த மணிகளைக் கொண்ட மாலைகளையே நோயாளிகளின் கழுத்துகளில் அணிய வைத்துள்ளார். மகத்தான பலன்கண்டுள்ளதாகவும் தெரிவிக்கிறார்.

வளைகுடா யுத்தத்தில் காயமடைந்த பல இராணுவ வீரர்களுக்கு இத்தகைய மாலைகளை அணிவித்தே நோயைக் குணமாக்குவதில் டாக்டர் ஹென்றி வெற்றிகண்டுள்ளார்.

படத்தில், வளைகுடாப் போரில் வெற்றி கண்ட ஜெனரல் நோர்மன் ஸ்குவாஸ்கொப்புக்கு, டாக்டர் ஸ்ரீஃப்ன் ஹென்றி மணிமாலையின் பெருமையை விளக்கிக் காட்டுகிறார்.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மிகப் பழங்காலத்திலிருந்தே உருத்திராட்சமாலை, துளசி மணிமாலை போன்ற மாலைகளை கழுத்தில் அணிவது வழக்கமாக இருந்து வருகிறது. இவை கெட்ட கிருமிகளை நெருங்கவிடாது எட்ட விரட்டியடித்து விடும் என்று நம்பப்படுகிறது. ■

## கர்ப்பவதிகளின் கவனத்திற்கு!



பல குழந்தைகள் பிறக்கும் போதே அவற்றின் முள்ளந்தண்டு (முதுகெலும்பு)களில் பலவிதமான குறைபாடுகளுடன் பிறக்கின்றன. இதனால் குழந்தைகள் வளர வளர இக்குறைபாடுகளினால் பலவிதமான பாரதூர விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

இத்தகைய முள்ளந்தண்டுக் குறைபாடுடைய குழந்தைகள் பிறப்பதற்கு தாய்மாரிடத்தில் காணப்படும் சில குறைபாடுகளே காரணம் என்று ஆய்வாளர்கள் கண்டுள்ளனர். கர்ப்பிணிகள் போதுமான அளவு விட்டமின் B சத்தினை உட்கொள்வதன் மூலம் பிறக்கும் குழந்தைகள் இத்தகைய குறைபாடுகள் எதுவுமின்றிப் பிறக்கும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

முதுகுத்தண்டின் ஒரு பகுதி ஒரு குழந்தையின் முதுகில் துருத்திக் கொண்டு காணப்பட்டால் அக்குழந்தை நடக்கும் சக்தியை இழந்து விடக்கூடும். பின்னர் வாழ் நாள் முழுவதும் அங்கவீனமான நிலையிலேயே இருக்க வேண்டி நேரிடும். ஆகவே கர்ப்பவதிகள் விட்டமின் ரு அல்லது ஃபொலிக் அமிலச் சத்து அதிகமுள்ள உணவுப் பண்டங்களை உட்கொண்டு வர வேண்டும். ஃபொலிக் அமிலம் சிறுகுழந்தைகளில் காணப்படும் பலவிதக் குறைபாடுகளைப் போக்க வல்லது. ●

## துரித வளர்ச்சிக்குத் தூண்டும் மாத்திரை

வயதுக்கேற்ற வளர்ச்சியில்லாத பிள்ளைகள் துரிதமாக வளர்வதற்கேற்ற புதிய மருந்து ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதுவரை வளர்ச்சி குன்றியோரின் வளர்ச்சியை அதிகப்படுத்துவதற்காக ஹோமோன் ஊசி மருந்துகள் பாய்ச்சப்பட்டு வந்தன. இது மிகவும் செலவு கூடிய மருத்துவமுறையாகும். ஆனால் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ள



ஹோமோன் ஒக்சாண்டிரின் என்ற புதிய மாத்திரை பிள்ளைகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது என்று தெரியவருகிறது. அத்துடன் இவை மிக மலிவான விலையில் கிடைக்கும்.

சிலர் பரம்பரைக் குறைபாடுகளினால் வளர முடியாதிருக்கின்றனர். இவர்களைக் கூட உயரமாக வளர்ப்பதற்கு இந்த .மாத்திரை உதவுகிறது. வளர்ச்சி குன்றுவதுடன் முகம் விகாரமடைந்து, கை கால்களும் குறண்டிப் போவதுமுண்டு. இத்தகைய குறைபாடுகளையும் இம்மருந்து தீர்த்து விடுகிறது. இத்தகையோருக்கு ஏற்படும் இருதய நோய்களும் இம்மருந்தினால் குணமடையலாம் என்றும் தெரிவிக்கப் படுகிறது. ■

(13ம் பக்கத் தொடர்)

## காசே எல்லாம்.....

எது முக்கியம் என்பதிலே உன் வாழ்க்கை தங்கி இருக்கிறது." என்று கூறிவிட்டு கட்டிலில் வந்து அமர்ந்தான் அருணன்.

"வாழ்க்கை எங்கே ஓடிப் போகப் போகிறது. காசு பணம் இல்லை என்றால் அதை அனுபவிக்க முடியாது. அப்பாவின் காசில அனுபவித்தால் அக்காமார் என்னை நக்கல் .பண்ண மாட்டார்களா? உங்கள் உழைப்பில் நான் தலை நிமிர்ந்து வாழ வேண்டாமா?"

"இதுதான் உன் முடிவா?"

"ஆமாம்" என்று தலையை ஆட்டினாள் ராதா"

"எனது தாயை கடைசி காலத்தில் கண் கலங்காமல் வைத்திருப்பேன் என்று சத்தியம் செய்து தா.... என்று கையை நீட்டினான்.

"சத்தியம் ஏன் என்னில் நம்பிக்கை இல்லையா?"

"எனக்கு என்னிலே நம்பிக்கை இல்லை" என்றான்.

அன்றிரவு அவள் படுக்கையை பகிர்ந்து கொண்டாள். ஆனால் அவன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளவில்லை. ஏன் வெளிநாடு செல்லும் வரையும் இல்லை.

"வெளிநாடு செல்லப் போகிறீர்களே" என்று சில நாட்களுக்கு முன்னர் அவனைப் படுக்கையில் ஆரத்தழுவினாள்.

காசு பணம் இல்லாமல் வாழ்க்கையை அனுபவிக்க முடியாது என்று வந்து விட்ட பிறகு இதெல்லாம் வெளிவேடம் என்று பட்டது அவனுக்கு. "வாழ்க்கை எங்கும் ஓடி விடாது காசு பணத்தைத் தேடி விட்டு அனுபவிக்கலாம்" என்று ஒதுக்கி விட்டான் அவன்.

அவள் சிணுங்கினாள். அவன் அசையவில்லை. நெஞ்சில் அத்தனை உரம் இருந்தது. எப்படியோ இரண்டு வருடங்களில் வந்துவிடுவார் என்று அனுப்பி வைத்தாள்.

★

அந்த இரண்டு வருடத்தில் தான் எத்தனை மாற்றங்கள்! தேனொழுகக் கடிதம் எழுதினாள் ராதா. எப்போது வருவீகள் என்று ஆவலோடு எதிர்பார்த்து இருக்கிறேன் என்றும் தனது விரக தாபங்களையும் அப்பட்டமாக எழுதிக் கொண்டிருந்தாள். இவை எவற்றையும் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளாமல் தடுத்தது அவனது தாயின் மறைவு.

அவனை வளர்த்த உயிருக்குயிரான தாயை எப்படி எல்லாம் வாழ வைக்க வேண்டும் என்று எண்ணியிருந்தான். எதுவும் கைகூடவில்லையே! அதுவும் ஒரே ஒரு மகனான தனது ஒரு கைப்பிடி மண் - தலைக்கோடு உடைக்காமல் அவளது உடல் மண்ணோடு மண்ணாகிவிட்டது அவனுக்கு எல்லாவற்றிலும் விரக்தியை ஏற்படுத்தி விட்டது.

எந்த இரண்டு வருடத்தைக் கணக்குப் பண்ணி ராதா அருணனின் வரவை எதிர்பார்த்து இருந்தாளோ அந்த இரண்டு வருடமும் முடிந்து விடுமுறையும் வந்தது.

தான் விடுமுறைக்குச் செல்லவில்லை என்று எழுதிக் கொடுத்துவிட்டு அடுத்த இரண்டு வருடத்துக்கான ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொண்டான் அருணன்.

ஏமாற்றம் அடைந்த ராதா தனது தாபத்தை தீர்க்க வடிகால் இன்றித் தவித்தாள். காசு பணமே பெரிசென்று எண்ணிய அவளுக்கு இதுவே தண்டனை என்று எண்ணினான் அருணன்.

ஆனால் தன்னை தவிக்க வைக்கும் அருணனை அவள் தண்டிக்க வேண்டும் என்று நினைத்தாளா? தனது தாபத்தை தீர்த்துக் கொள்ள நினைத்தாளா?

அவளது வீட்டிலே வேலை மாற்றலாகி வந்து அவளது முறை மச்சான் ஒருவன் தங்கி இருந்தான். அவளுக்கும் அவனுக்கும் ஒருவயது இளமை என்ற காரணத்தினால் திருமணம் தடைப்பட்டது. ஆனால் இப்போது...? அதுக்குத் தடையேது?

தனது தாகத்தைத் தீர்க்கத் தண்ணீர் ஆனான். அவளது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றி குளிர் காய்ந்தான். பெரிய இடத்து விஷயம் வெளிவரவில்லை. என்றாலும் எத்தனை நாளைக்கு? ராதா வாந்தி எடுக்கும் வரைதான்.

எல்லோரும் தலையில் அடித்துக் கொண்டனர். "ஏன் கத்துகிறீர்கள் அருணன் தான் அவளைக் கைவிட்டுச் சென்று விட்டானே. அவளுடைய இளமை அழகெல்லாம் இப்படியே அழிவதா? நான் அவளை இரண்டாம் தாரமாகக் கட்டிக் கொள்கிறேன்" என்றான் அவனுக்கு இளையவனான மச்சான். வயிற்றிலுள்ளதை முடி மறைக்க ஒரு மஞ்சள் கயிறு தேவைப்பட்டது.

மானம் மரியாதையையும் காப்பதற்காக உதவியது. 'நலன் விரும்பி' ஒருவர் மூலம் விஷயத்தை அறிந்து கொண்ட அருணன் மாதாமாதம் பணம் அனுப்புவதை நிறுத்திக் கொண்டான்.

எந்தப் பந்தமும் இல்லாத அவன் 'மிடில் ஈஸ்ற்'றில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு தனது வாழ்க்கை என்னும் நெடும் பயணத்துக்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறான்.

'மணி இஸ் நொட் எவிரிதிங்-'காசு எல்லாமாகி விடுவதில்லை' என்று எங்கோ படித்த ஞாபகம் வந்தது. அந்தப் பேதை ராதா காசுதான் எல்லாம் என்று எண்ணி என்னையும் தன்னையும் அல்லவா பாழ்படுத்திக் கொண்டாள் என்று ஏங்கியது அவன் பேதை நெஞ்சம். ●

(யாவும் கற்பனை)



## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—10




ஏ.கே. 47ஐ மாமிசமலையாய் நின்ற பாதுகாவலனிடம் கைமாற்றிவிட்டு இடக்கரத்தால் கூந்தலைச் சரி செய்துகொண்டு குலாம்ஷா மீது விழிகளை எறிந்தாள் மதுமிதா.

குலாம்ஷா அவள் கவனம் சிதறும் இனிய சந்தர்ப்பம் ஒன்றுக்காக காத்திருந்தார். சூழ நிற்கும் மாமிசமலைகள் விழிப்பைத் தளர்த்தும் ஒரு பொன்னான நேரத்துக்காக காத்திருந்தார் குலாம்ஷா.

தாக்கும் திசை எது..... குறி எது...அனைத்தையும் மனதில் குறித்து தயாராக இருந்தார் குலாம்ஷா.

'தரையில் கிடந்தாள் ரம்யா. அழகான ரம்யா. சொர்க்கத்தை காட்டும் பெண் இயந்திரமாய் பயன்பட்டவள். பயன்படுத்தப்பட்டவள். அழகு பாதி, அறிவு பாதியாகி இரகசிய உலகின் அத்தனை வித்தைகளிலும் சித்திபெற்றவள் செத்துக்கிடக்கிறாள். இரத்தம் சிந்திக் கிடக்கிறாள். வளர்த்தவர்களே அழித்து விட்டார்கள். சே....நன்றி கெட்ட கூட்டம்..'

குலாம்ஷாவுக்கு வெறுப்பாக இருந்தது. வாடிய பூங்கொடியாய் தரையில் இரத்த வெள்ளத்தில் சுருண்டு கிடந்த ரம்யாவைப் பார்த்து பெருமூச்சொன்று குலாம்ஷாவின் அனுமதியின்றியே வெளியே வந்தது.

பெருமூச்சு புரிந்து, கொல் என்று சிரித்தாள் மதுமிதா.

"என்ன ஷா, அனுபவிக்கக் கிடைக்கவில்லையே. அழகான உடலில் இனிதான நாட்டியத்திற்கு வாய்ப்பு வந்தபோது கூடவே சாவும் வந்து காவு வெண்டுவிட்டதே என்று கவலைப்படுகிறீர்களா?"

"இவள் ஒரு பெண்தானா? இல்லை பிரமிப்பான் அழகுக்குள் மறைந்து நிற்கும் பேயா?"

குலாம்ஷாவுக்கு கோபமாக இருந்தது. கைக்கெட்டும் தூரத்தில் அவள் கழுத்திருந்தால் நெரித்து விடலாம் போலிருந்தது.

'குலாம்ஷா பொறு. குதித்தாய் எனில் வெளிப்படையாய் உன் கோபம் காட்டினாய் எனில் எதிரிகள் விழித்துக் கொள்வார்கள். கோபம் மறை. உள்ளே பத்திரப்படுத்தி உரிய தருணத்தில் எடுத்து வீசு. உபயோகம் அருமையாக இருக்கும்.'

குலாம்ஷாவுக்குள் இன்னொரு குலாம்ஷா புத்தி சொல்ல, எட்டிப்பார்த்து இடறிப்பாய இருந்த கோபம் உள்ளே போனது. ஒரு கொரில்லாபோல தருணம் கணக்கிட்டுக் காத்திருந்தது.

தருணத்திற்கான நல்ல சகுனம் தெரிந்தது. சகுனத்தைக் காட்டியவள் மதுமிதா. மாமிச மலையாய் நின்றவர்களில் ஒருவனை நோக்கி சுட்டுவிரல் நீட்டி.....

"பிணத்தை தூக்கிப் போ. வழக்கம் போல் செய்துவிடு. செத்துப்போனாள் என்று ஒரு சுவடு கூடத் தெரியக்கூடாது. தொழிலில் ஒரு சுத்தம் வேண்டும் பார்."

சொல்லிவிட்டு சிரித்தாள். அது வேல் விழியாள் வீசிய புன்னகையல்ல. வெறிகொண்ட கொல்லவிழியாள், கொலை வெறியோடு கொட்டிய எக்காளம்.

திடீரென்று குலாம்ஷா சிரித்தார். உரத்துச் சிரித்தார்.

மதுமிதா புரியாமல் குழம்பினாள். குலாம்ஷாவை ஒரு புதிர் போல நோக்கினாள்.

"என்ன கிரைம்புலியே. விரக்தியா? அல்லது சாவதற்கு முன் சிரிக்க வேண்டும் என்ற நோக்கமா? ஆயுளைக் கூட்டத்தானே சிரிக்கச் சொல்வார்கள். நீர் ஆயுளைப் போக்குவதற்கு சிரிக்கிறீர்."

"பெண்ணே போகப் போவது என் ஆயுளல்ல. உன் ஆயுள். உன் கூட்டத்தின் ஆயுள். வஞ்சகமில்லாமல் உடம்பை வளர்த்து வைத்திருக்கிறார்கள் பார். இந்த மாமிச மலைகளின் ஆயுள்."

மீண்டும் சிரிப்புக் குதிரையை தட்டிவிட்டார் குலாம்ஷா.

எரிச்சலானாள் மதுமிதா.

"என்ன விளையாடுகிறீர்களா குலாம்ஷா? மதுமிதா ரம்யா அல்ல, நீங்கள் விளையாடும் மைதானம் ஆவதற்கு. நினைவில் வையுங்கள். இப்போது நினைத்தால் கூட இந்த இடத்தில் ரம்யாவுக்கு துணையாக உங்களை அனுப்ப முடியும்."

மதுமிதா சீறினாள். அதை ஆமோதித்து நிருபராஜ் வாய்விட்டுச் சிரித்தான். சிரிப்பின் ஊடே சொன்னான்.

"மன்மதக்கலைகளைத்தான் பகிரமுடியவில்லை. மயானத்தரையிலாவது ஒன்று சேருங்கள் என்று ஷாவையும் அனுப்பி வைப்போமா மது?"

நிருபராஜ் சொல்ல குலாம்ஷாவைப் பார்த்து விரல் சுண்டி, நெஞ்சு நோக்கி சுட்டுவிரல் நீட்டி தலையை இடது புறமாய்ச் சாய்த்து சிரித்துக் கேட்டாள் மதுமிதா

"என்ன குலாம்ஷா, நிருபராஜ் விடுக்கும் வேண்டுகோளை நிறைவேற்றலாமா?"

பதிலாக அலட்சியமாய் சிரித்தார் குலாம்ஷா.

"முயன்று பார். ஷா சாவுக்குப் பயந்தவனல்ல. ஆனால் ஒன்று, சுலபமாய் சாகவைக்கப்படக் கூடியவனுமல்ல."

"ஏன் குலாம்ஷா, தோட்டா உங்கள் தேகத்தை தீண்டக் கூசும் என்கிறீர்களா?"

நிருபராஜ் கேட்டான். திரும்பி அவன் முகம் நோக்கி பார்த்து,

"தோட்டாவும் உன்னைமாதிரித்தான் நிருபராஜ். அதற்கும் புத்தி கிடையாது. சொன்னதைச் செய்யும்."

என்றபடி மதுமிதாவின் பக்கம் பார்த்து சொன்னார்,

"குலாம்ஷா புத்தியுள்ளவன். விதியை மதியால் வெல்ல முடியும் என்று கேள்விப்பட்டதுண்டா....? என்ன பெயர்.... ஆ..... மதுமிதா?"

புத்தியற்றவன் என்று குலாம்ஷா சொன்னதால் நிருபராஜ் துள்ளினான்.

"என்ன மது, இவனிடம் என்ன பேச்சு. நிறுத்திவிட வேண்டியதுதானே மூச்சை. காவல்துறை கண்ணீர் அஞ்சலி செய்யட்டும். ஏன் தாமதம் மது?"

இடது கரம் உயர்த்தி பொறு என்று சைகை காட்டிக் கொண்டு குலாம்ஷாவை நோக்கி அருகில் வந்தாள் மதுமிதா.

அவள் தன்னை நோக்கி முதல் அடி எடுத்து வைக்கும் போதே குலாம்ஷாவின் உடலின் சகல பாகங்களும் தயாராகிக் கொண்டன.

'வா பெண்ணே வலை இங்கே - விலையாக வா. இரையாக வா. இந்த ஆட்டத்தில் முதல் பலி நீயாகவே இருக்கலாம். குலாம்ஷாவை சுலபமான எதிரியாக நினைத்தது பெரும் தவறு. அதை முதலில் நினைவூட்டுகிறேன். வா பெண்ணே.'

குலாம்ஷாவின் உள்ளே ஒளித்திருந்த கோபம் சோம்பல் முறித்து, நெட்டி முறித்து எழுந்து கொண்டது.

குலாம்ஷா அருகில் சென்ற மதுமிதா தன் வாழ்க்கையில் ஒரு மாபெரும் தவறாய் அவர் சட்டையில் பிடித்தாள். இடது கரம் உயர்த்தி சட்டைக் காலரின் இரு முனையையும் கழுத்தோடு சேர்த்து இறுக்கினாள்.

"கைதியாக இருந்தும் உன் தலைக்கனம் போகவில்லையே ஷா. என்ன சொன்னாய்...... எமது ஆயுளை முடிக்கப்போகிறாயா நீ"

மரியாதை காணாமல் போன வார்த்தைகள். ஆத்திரப்படுகிறாள். ஆத்திரம் கண்ணை மறைக்கும். மதுமிதாவுக்கும் மறைத்தது.

சட்டைக் கொலரில் பதித்த கரம் பார்த்து, பின் மதுமிதா முகம் பார்த்து, அதற்குப்பின் சுற்றிலும் உள்ள மாமிச மலைகளின் மேல் ஒரு பார்வை வீசி மின்னல் வேகத்தில் உயர்ந்தது குலாம்ஷாவின் இடது கரம்.

சட்டைக் கொலரில் பதிந்த மதுமிதாவின் கரம் பிடித்து மடக்கியது குலாம்ஷாவின் கரம்.

ரம்யாவிடம் இருந்து எடுத்த பிஸ்டல் இதுவரை குலாம்ஷாவின் இடுப்பில் அமர்ந்திருந்தது. உள்ளே தோட்டா இல்லை. அது இவர்களுக்குத் தெரிய நியாயமில்லை.

மதுமிதாவின் கரத்தை பின்புறமாய் மடக்கியபடி இடுப்பில் இருந்த பிஸ்டல் உருவினார் குலாம்ஷா.

எதிர்பாராத திருப்பத்தில் திகைத்து சுதாகரித்த நிருபராஜ் தன் பிஸ்டலை வேகமாய் வெளியே எடுத்து குலாம்ஷாவை நோக்கி குறிவைத்தான். விசையை தட்டினான்.

டுமீல்.....

பிஸ்டல் குலைத்தது.

■

கட்டிலில் கிடந்த மதுமிதா மயக்கம் விலகி மெல்லக் கண்திறந்தாள்.

நேர் எதிரே டி.ஐ.ஜி டென்சில் தரை நோக்கிக் குனிந்து கொண்டிருப்பதைக் கண்டாள். ஜன்னல் புறம் பார்த்தவள் அதிர்ந்தாள்.

துப்பாக்கிமுனை தெளிவாகத் தெரிந்தது. "டி.ஐ.ஜி" என்று கூப்பிட வாய் திறந்தாள். சத்தம் வெளியே வரவில்லை. மீண்டும் வாய்திறந்தாள்.....முடியவில்லை. சத்தம் உதட்டுக்கு வருமுன்னரே உள்ளே மடிந்து போனது.

"கொல்லப்போகிறான். கொல்லப் போகிறான்" மதுமிதா உள்ளே அபாய மணி ஒலித்தது.

"டி.ஐ.ஜி..." இம்முறை பலம் கொண்ட மட்டும் முயன்றதில் பலன் கிடைத்தது. உதடு ஒத்துழைத்தது. சத்தம் வெளியே வந்தது.

தரையில் கிடந்த அந்தப் பொருளை தொட்டுத் தூக்கிய டி.ஐ.ஜி டென்சில் மதுமிதாவின் குரல் கேட்டு அதிர்ந்து நிமிர்ந்தார். நகர்ந்தார்.

அதே நேரத்தில் ஜன்னல் புறமிருந்து நீண்ட துப்பாக்கியும் வெடித்தது.

மதுமிதா நோக்கி டென்சில் நகர்ந்ததால் குறி தவறியது.

வெடியோசை கேட்டு விபரீதம் உணர்ந்து தரையில் விழுந்து படுத்து தன் பிஸ்டலை அதிவேகத்தில் உருவி சத்தம் வந்த திசை நோக்கி குறிவைத்தார் டென்சில்.

"டுமீல், டுமீல்"

வெடித்தது டி.ஐ.ஜி டென்சிலின் பிஸ்டல் அல்ல. ஜன்னலில் இருந்து நீண்டிருந்த துப்பாக்கி உள்ளே நழுவி தரையில் விழுந்தது. ஜன்னலின் மறுபுறம் 'தொம்' என்று ஒரு சத்தம் கேட்டது.

தரையில் இருந்து எழுந்த டென்சில் பிஸ்டலை நீட்டியபடியே ஜன்னல் நோக்கிப் பாய்ந்தார்.

ஜன்னலுக்கு வெளியே பார்வையை வீசினார். அங்கே கொன்ஸ்டபிள்கள் இருவர் பதட்டமாய் நின்று, டி.ஐ.ஜி முகம் கண்டு விறைப்பாய் சல்யூட் அடித்து,

'இவன்தான் சேர்' என்றனர் ஒரே குரலில்.

நிலத்தில் குள்ளமாய் ஆனால் காட்டமான உடம்போடு விழுந்து கிடந்தான் அவன்.

'கொன்ஸ்டபிள் ஒருவர்தான் துப்பாக்கிக்கு வேலை கொடுத்திருக்கிறார். விழிப்பாயிருந்தது போதாது, என்றாலும் தாமதமாக, எனினும் சரியான வேலை செய்துவிட்டார்கள்.'

மனதுக்குள் சின்னதாகப் பாராட்டிக் கொண்டார். கொன்ஸ்டபிள் குருமூர்த்தியிடம் கேட்டார்.

"உயிர் இருக்கிறதா குரு?"

தரையில் மடங்கி அமர்ந்து கீழே கிடந்தவனிடமிருந்து உயிர் இருப்பதற்கான அத்தாட்சி இருக்கிறதா என்று பரிசோதித்தார் குருமூர்த்தி.

தலையில் இருந்த தொப்பியை கழற்றிக் கொண்டே டி.ஐ.ஜியை நிமிர்ந்து பார்த்தார்.

ஆள் முடிந்தான் என்று புரிந்து....

"அப்படியே இருக்கட்டும் வருகிறேன். எதையும் தொட வேண்டாம்."

உத்தரவிட்டு, ஜன்னல் விட்டு விலகி மதுமிதாவின் கட்டில் நோக்கிச் சென்றார்.

கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்திருந்தாள் மதுமிதா. எழுந்திருந்தது அவள் மட்டுமல்ல. விருந்துக்கு வா என்று அழைக்கும் அழகுகளும்தான். செழுமைகள், வதைக்கும் செழுமைகள். உள்ளே நெருப்பை மூட்டி, உலக நினைப்பையே மறக்கடித்துவிடும் இளமையின் நாட்டிய அரங்கம்.

கட்டுப்பாட்டை மீறும் விழிகளை கட்டுப்படுத்திக் கொண்டே.....

"நன்றி மிஸ் மதுமிதா."

மெல்லிய சிவந்த உதடு பிரித்து மதுமிதா கேட்டாள்,

"எதற்கு தாங்ஸ் டி.ஐ.ஜி? நான் அல்லவா உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்?"

"நான் கடமையைத்தான் செய்தேன். பொலிஸ் அதிகாரிக்கு பிரஜைகளைக் காப்பாற்றும் வேலையைத்தவிர வேறென்ன இருக்கிறது?"

"எங்களைக் காப்பாற்றும் உங்களை நாங்களும் காப்பாற்ற வேண்டாமா டி.ஐ.ஜி? சோ....... நானும் என் கடமையைத்தான் செய்தேன். எனவே நன்றிகள் நமக்குள் அவசியமா மிஸ்டர் டி.ஐ.ஜி?"

'மயக்கம் விலகி, அசதி மறைந்து மதுமிதா இயல்பான நிலைக்கு திரும்பிவிட்டாள். இனிக் கேள்விகளை கேட்கலாம்.' டி.ஐ.ஜி நினைத்தார்.

டி.ஐ.ஜி நினைத்த நொடியில் வெளியே வெடித்தன துப்பாக்கிகள்.

உஷாரானார் டி.ஐ.ஜி டென்சில். அதே சமயம் கட்டிலை விட்டு விருட்டென்று எழுந்த மதுமிதா டி.ஐ.ஜி டென்ஸிலின் நெஞ்சின் மையத்தில் கரம் வைத்துத் தள்ளினாள்.

**(இன்னும் வரும்)**

---

## சிந்தியா பதில்கள்

அன்பின் சிந்தியா, உங்களுக்கு பிடித்த கேள்விகள் சிந்திக்க வைப்பவையா? அல்லது சிரிக்க வைப்பவையா?

**செல்வி.ரம்லியா- புத்தளம்.**

வெறுமனே சிரித்துக் கொண்டிருக்க மட்டுமே விரும்பினால் உலகம் நம்மைப் பார்த்து சிரிக்கத் தொடங்கிவிடும் ரம்லியா.

■

என் காதலி படிப்பின் காரணமாக காதலை மூன்று மாதம் ஒத்தி வைத்துவிட்டாள். என்னால் முடியவில்லை. இதற்கு என்ன வழி?

**ஆர் யோஹசுரேஷ்- அவிசாவெல்ல.**

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் போல உமது உள்ளம் கவர்ந்த காதலும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. மறு பரிசீலனை செய்யுமாறு மனு ஒன்று போட்டுப்பாரும்.

■

டியர் சிந்தியா, பாரதியார் செல்லம்மாவைப் புகழக் காரணம் என்ன?

**எச்.சகீர்டின்- உடத்த [illegible]**

செல்லம்மாவிடம் இருந்த தெவிட்டாத அன்பு.

■

காதல் கடிதங்கள் சுவைப்பதற்குக் காரணம் என்ன?

**செ.சந்திரகாந்தன்- உடபுஸ்ஸல்லாவ.**

எதிர் பால், இதயக்கலப்பால், எழுதியவையல்லவா. அதுதான். (ஆணுக்கு பெண்ணும் பெண்ணுக்கு ஆணும்தானே எதிர் பால்)

■

சினிமாக் காதல் நிலையானதா? அல்லது முறிந்து போகக் கூடியதா?

**பரானா சூபியான்- கம்மல்துறை.**

காட்சி முடியும் வரைதான் அந்தக் காதலின் ஆட்சி.

■

நெஞ்சில் ஆறாத ரணம் எது?

**ஆர்.ராம் பண்டாரவளை.**

துரோகத்தால் பட்ட காயம்.

■

சிங்கள நாடகங்களை விட தமிழ் நாடகங்கள் தரம் குறைந்திருப்பது எதனால்?

**எம்.பர்ஸான் பொலன்னறுவை.**

ஊக்குவிப்பின்மை. அதனால் உற்சாகமின்மை. புகுந்து விளையாட உரிய களமின்மை. கொஞ்சம் போட்டி, பொறாமை, அமுக்கல்கள், திறமை மறைப்புக்கள்.

■

வணக்கஸ்தலங்களிலும் குண்டுகளின் பிரவேசம் பற்றி?

**எம்.சுகந்தினி- புத்தளம்.**

வரம்பு மீறுகிறது வன்முறை.

■

காதலித்துவிட்டு திருமணம் என்றவுடன் சீதனம் கேட்கும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**செல்வி. எஸ்.விஜி- கொழும்பு-14.**

வியாபாரம் தெரிந்தவர்கள்.

■

சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்த் அரசியலில் புகுந்து முதல் அமைச்சராக வந்தால்?

**என்.ஐ.ஹிப்பால்- கல்பிட்டி.**

அவரது ரசிகர்களில் பலர் அரசியல் வாதிகளாகி விடுவார்கள்.

■

நீங்கள் எதுவரை படித்துள்ளீர்கள்? இப்போது என்ன செய்கிறீர்கள்?

**ஜெ.சுதர்ஷன்- அக்கரைப்பற்று.**

கற்றது கையளவு. உங்கள் கேள்விக்கு பதில் எழுதிக்கொண்டிருக்கிறேன்.

■

புலிகளை ஒழித்துவிட்டால் அரசு தமிழர் பிரச்சனையை தீர்த்துவிடுமா?

**கே.கே. நாதன்- கல்முனை.**

புலிகளை ஒழித்துவிட்டுத்தான் பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டும் என்றில்லையே. அதைச் செய்யலாமே என்பது தான் தமிழ் பேசுவோரின் அபிப்பிராயம்.

■

இலங்கையின் அரசியல் நிலை?

**செல்வி.சில்மியா நிசார் தெலியாகொன்ன.**

பாராட்டும்படியாக இல்லை.

■

உயிரியல் விஞ்ஞானி ரிச்சாட்டை விழுங்கிய டைனோசர் பற்றி?

**பூ.கணேஸ் புத்தளம்.**

மனிதனே மனிதனை விழுங்கும் காலம் இது. விலங்கு விழுங்குவதோ ஆச்சரியம்?

■

இரு பெண்களை காதலிப்பவர்கள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

**எஸ் சிவயோகம் அக்கரப்பத்தன.**

தங்களை வேலவன் என்று நினைத்துக் கொள்கிறார்களாக்கும்.

■

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.பற்றி சில வரிகள்?

**எஸ்.அப்துல்கரீம் கல்ஹின்னை.**

போர் என்றால் போர் என்றவரும் அவர்தான். பின்னர் இனவாத சல சலப்புக்களை புறங்கையால் அலட்சியப்படுத்தி ஒப்பந்தத்தை செய்து முடித்தவரும் அவர்தான். அந்தத் துணிச்சலை வரவேற்கலாம். அப்படியொரு துணிச்சலாவது இன்றைய தலைவர்களுக்கு வரவேண்டுமே.

■

---

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ்.ரி. மனோகரன்
வயது: 23
முகவரி: இல.60, புத்தளம் வீதி குருநாகல்.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



பெயர்: எம். நிர்மலா தேவி.
வயது: 25
முகவரி: 24, CAMERON ROAD, THE PEAK, HONG KONG.
பொழுதுபோக்கு: ரீ.வி. பார்த்தல், புத்தகம் வாசித்தல்.



பெயர்: இப்திகார் நளீம்
வயது: 25
முகவரி: 331/34, செர்ப்பின்டிங் வீதி, பொரள்ள, கொழும்பு-8.
பொழுதுபோக்கு: சினிமா பார்த்தல்.



பெயர்: முஜிப் ரகுமான்
வயது: 22
முகவரி: B முகாம், திகழி, ஏத்தாலை.

பெயர்: கே. யோகா.
முகவரி: இல. 187, தம்புள்ள வீதி, கலேவலை.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், விளையாட்டு, கவிதை, நாவல்.

பெயர்: த. பாஸ்கரன்
வயது: 25
முகவரி: சேனைக் குடியிருப்பு-02, கல்முனை.
பொழுதுபோக்கு: நாவல், சினிமா, ஓவியம்.

பெயர்: ஏ. ஜே. மூ.ஆத்
வயது: 17
முகவரி: பேக்கரி வீதி, தோப்பூர்-3.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: பாத்திமா ஷியானா உஸ்மான்
வயது: 20
முகவரி: 218, கண்டி வீதி, சாய்ந்தமருது-01.
பொழுதுபோக்கு: கடிதம் எழுதுதல், நாவல் வாசித்தல், சித்திரம் வரைதல், கைப்பணி வேலைகள் செய்தல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

*இனவாதிகள் விதைக்கும் மனித நேய விரோதங்களையும் தாண்டி மனிதனை மனிதன் நேசித்தல் இப்போதும் இருக்கத்தான் செய்கிறது. இனவாதத்தால் ஒரு சாதாரண மனிதனின் மன ஆழத்தில் பட்ட காயத்தையும், கோபத்தையும் அதனை இனவாதமற்ற மனிதன் இதமாக ஆற்றுவதையும் சொல்லும் கதை இது. வித்தியாசமான கரு- வித்தியாசமான நடை.*

*கையைக் கொடுங்கள் அஸ்வதி.*

*வாழ்த்துக்கள் - வளருங்கள்!*

*(ஆ.ர்)*




நெஞ்சுக்கு நெருக்கமான முகங்கள்...... பிள்ளையார் கோயில் தெருமணல்...... சிவியான் வெட்டை.... மைதானத்தின் தெற்கு மதிலுக்கும் வடக்கு மதிலுக்கும் இடையில் பறந்து கொண்டிருக்கும் பூவரசமிலைச் சருகுகள்.... குளிப்பியாவத்தை மாமரம்....... எல்லாவற்றிற்கும் மேலாக என் இனியவளின் சிணுங்கல்......

"சொறி போர் டிஸ்ரேபன்ஸ் சேர்" இனிமையான அந்தக் குரலும் மென் பஞ்சு விரல்களின் ஸ்பரிசமும் எனது கனவைக் கலைத்தன. அப்போது தான் நான் அந்த இரும்புப் பறவையின் வயிற்றில் கண்ணயர்ந்தது புரிந்தது.

"நாங்கள் இன்னும் ஐந்து நிமிடங்களில் 'றியாத்'தில் தரையிறங்கப் போகிறோம். தயவு செய்து உங்கள் பாதுகாப்புப் பட்டியைக் கட்டிக் கொள்ளுங்கள்" இங்கிலீசித்தாள் அந்த அழகிய பணிப்பெண், தானாகவே பட்டியையும் கட்டிவிட்டாள். அந்தக் கிளுகிளுப்பிலிருந்து விடுபட மூன்பாகவே.... கனவில் சிணுங்கிய என் இனியவள்! மன்னிக்க.... விமானம் தரையிறங்கியது. குறா காப்டன் அஸ்லி டிவோஸ் ஆண்டவனுக்கு நன்றி சொன்னார்.

கடும் குளிர் காதை ஊடுருவிச் சென்றது. விரல்கள் மணிக்கட்டை விட்டு வெகுதூரம் சென்றது போன்ற பிரமை. இந்தக் குளிர், நெஞ்சுக்கு நெருக்கமான முகங்கள்..... பிள்ளையார் கோயில் தெரு மணல்..... சிவியான் வெட்டை..... எல்லாவற்றையும் விசுவாசத்துடன் நினைக்கத் தூண்டியது.

சுங்கப் பரிசோதனை முடிந்த போது எனது தோளில் சிலுவையாகக் கனத்த பயணப்பை லேசாகியிருந்தது. பருத்தித்துறை வடை.... நல்லெண்ணை.... எள்ளுப் பாகு.... யாவும் குப்பைத் தொட்டிக்குத் தீனியாக்கப்பட்டதே காரணம். நான் ஒருவன் மட்டும் தான் வந்திருந்தேன். உள்ளூர் ஏஜண்ட்டின் அறிவுறுத்தலின்படி விமான நிலையத்திலிருந்து கம்பனி விடுதிக்கு வாடகைக்காரில் வந்து சேர்ந்தேன். விடுதி வாசலில், எண்ணை வைத்துப் படிய வார்ந்த தலைகள்.....உடம்பில் அழகிய குளிர்ச்சட்டைகள்..... கையுறைகள்.... அசல் யாழ்ப்பாணத்து முகங்கள் நாலு. அறிமுகமில்லாதவர்களைக் கண்டால் அவர்களுக்கு நானே பெயர் சூட்டுவது வழக்கம். நான்கு பெயர்களைச் சூட்டினேன். நானே முதலில் புன்னகைத்து வைத்தேன். என்னைக் கண்டதும் யாழ்ப்பாணத்தையே கண்டது போல வாயெல்லாம் பல்லானார்கள். கையிலிருந்த சிவன் கோயில் நூல் காட்டிக் கொடுத்திருக்கும்.

"தம்பி இண்டையில் பிளைட்டிலை வந்தனீங்களோ" வயதிற் கொஞ்சம் மூத்தவர் கேட்டார்.

"ஓமோம், எயார் போட்டிலிருந்து நானே டாக்ஸியும் பிடித்து வந்து சேர்ந்துவிட்டேன்"

"என்ன வேலைக்கு எண்டு எடுத்தவை?"

"அஸிஸ்டன்ட் ஆர்க்கிடெக்ட்" எதுவும் விளங்காதது போல் ஆளை ஆள் பார்த்துக் கொண்டனர். எனக்கு கைகால்கள் எல்லாம் குளிரில் வெடவெடத்தன. அம்மா தோசை சுடும் போது அடுப்புப் பக்கமாக இருந்து வரும் வெப்பம் கட்டாயம் தேவைபோல இருந்தது.

"யாழ்ப்பாணத்திலை நீங்கள் எவடம்?" எதிர்பார்த்த கேள்விகள் இப்போதுதான் ஆரம்பித்தன.

"நெல்லியடி."

"நெல்லியடியோ, அப்பிடி எண்டால் போஸ்ட் மாஸ்டர் சுந்தரத்தைத் தெரியுமே?"

"இல்லை தெரியாது."

"அப்ப அச்சுக் கந்தோர் மணியத்தார்"

"தெரியாது." மாறி மாறிக் கேள்விகளைக் கேட்டனர். நான் படித்த பெரிய பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் எங்கள் ஆட்கள் கேட்காத கேள்விகளையா இவர்கள் கேட்டுவிடப் போகிறார்கள்?

"நெல்லியடியிலை சரியான இடம் எது?"

இவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு என்னால் நேரடியான பதிலைத் தர முடியும். இருந்தாலும் நான் புதிர் போட்டேன்.

"நெல்லியடிச் சந்தியிலையிருந்து வடக்குப் பக்கமா திக்கம் றோட்டிலை ஒரு உபதபால் கந்தோர் இருக்கு. அதுக்கு அங்காலை கொஞ்சத்தூரம் போனால் ஒரு பெரிய பள்ளிக் கூடம். அதுக்கு முன்னாலை போற ஊரி றோட்டிலை போனால் கொஞ்சத்தூரத்திலை எங்கட வீடு வரும்." கேள்வி கேட்டவரின் முகத்தில், அமெரிக்காவைக் கண்டு பிடித்தபோது கிறிஸ்டோபர் கொலம்பஸ்சுக்குக் கூடத் தோன்றியிராத மகிழ்ச்சி இளைகள். "யூரேக்கா" என்று கத்துவார் போல இருந்தது. குளிரில் உடம்பு சுருங்கி விட்டது. பாம்பு தீண்டினாற் கூட உணரமுடியாத நிலை எனக்கு. அவர்கள் மட்டும் குளிர்ச்சட்டைகளுடன் தெம்பாக நின்றார்கள்.

"ஆறுமுகம் 'வாத்தி'யைத் தெரியுமே?"

"மாமா தான்"

மேலும் பல கேள்விகள் தொடர்ந்தன.

"நீ மட்டுந்தானே இந்த 'பிளைட்டிலை' வந்தனி?"

"ஓம்"

முடிவு கிடைத்தபின் நீங்கள் நீயகியது. அதிலும் சிறிது அழுத்தமாகியது. என்னுடனேயே கூடப் பிறந்த முற்கோபம் தலை தூக்கப் பார்த்தது. ஆனால், 'நாய் குலைத்தால் நீ திருப்பிக் குலையாதை......' என்று மாமா அடிக்கடி சொல்லவதுதான் நினைவுக்கு வந்தது. அடங்கிக் கொண்டு மனதிற்குள் சிரித்தேன்.

"இப்ப போய் 'கொம்பவுண்ட் மனேஜரை'ச் சந்திச்சுக் கொண்டு வா. பிறகு மிச்சம் கதைப்பம்"

என்னைக் காய் வெட்டி விட்டார்கள்.

சங்கிலியாய் நீண்டிருந்த அறைகளைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தேன்.

"மல்லி! கொய்த இந்தலா ஆவே?" பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது. 'டேய்....' மனதிற்குள் தூஷணித்தேன். 'எண்பத்தி மூன்றிலை அண்ணாவையும் அண்ணியையும் பிள்ளையளையும் துடிக்கத் துடிக்க வெட்டியவங்கள்.... உவங்களோடை வேலை செய்யக் கூடாது எண்டு தானே இந்தப் பாலைவனத்துக்கு ஓடி வந்தனான். அவங்கள் இங்கையும் வந்திட்டான்கள்". திரும்பிப் பார்த்தேன். நன்கு சவரம் செய்யப்பட்ட சிரித்த முகத்துடன் ஒரு கெமுணுவோ.... பண்டாரவோ அறைவாசலில் நின்று கொண்டிருந்தான்.

மீண்டும் அதே கேள்வி.

முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டேன்.

"ஸ்ரீலங்கா"

"ஸ்ரீலங்கா.... அதிலும் யாழ்ப்பாணம் எண்டு தெரியும்...... அங்கை எவடம்?" சிரித்தான். இவனுக்குத் தெரிந்த இடம் எதுவாக இருக்கும்? ஓம்... இவை சன்னதமாடிய வடமராட்சி.

"வடமராட்சி"

அவனுடைய முகத்தில் சோகம் குடியேறியது தெளிவாகத் தெரிந்தது.

"வடமராட்சியிலை நடந்த பிரச்சனையாலை உங்கட குடும்பத்துக்கு ஒண்டும் நடக்கவில்லையோ?"

"இல்லை. ஆனால் அநியாயமாகக் கனபேரை இழந்து போனம்."

"சமாவெண்ட மல்லி! எல்லாரையும் மன்னிச்சுக் கொள்ளுங்கோ. இந்தப் பிரச்சனையாலை நாங்களும் நிறைய இழப்புக்களைச் சந்திச்சுப் போட்டம்"...... எனக்கு நல்ல சந்தோசமாக இருந்தது.

"இன்னும் ஒரு தடவை மன்னிக்க வேணும். உள்ளுக்குக் கூப்பிடாமல் வெளியிலை வைச்சுக் கதைச்சுக் கொண்டிருக்கிறன்" அந்த நேரத்தில் உள்ளே செல்ல வேண்டிய கட்டாயம் இருந்ததால் உள்ளே சென்று அவனது கட்டிலில் அமர்ந்து கொண்டேன்.

பத்துக்குப் பத்து விஸ்தீரணமுள்ள அழகான அறை. ஒரு மேசையும் கதிரையும் அதற்குப் பக்கத்தில் ஒரு 'ஸ்டீல் பீரோ'வும் இரண்டுக்கும் மத்தியில் 'ரின்ரட்' கண்ணாடி பொருத்திய யன்னல்.... அதன் கீழ் ஏ.சீ....எதிர்ச்சுவருடன் கட்டில்.... கட்டிலின் பக்கத்திலுள்ள சிறிய மேசையில் மெனிக்கா.... அவனுடைய காதலியோ மனைவியோ தெரியாது.... கண்டியன் உடையுடன் சிரித்துக் கொண்டிருந்தாள். அறை வெப்பநிலை அம்மாவின் மடிபோல இதமாக இருந்தது.

"எனக்குப் பெயர் நிஹால் நாணயக்கார. இங்கை 'எலைக் ரீசியனா' இருக்கிறன்"

"நான் அருள் 'ஆக்கிடெக்டாக' வந்திருக்கிறன். மொறட்டுவவிலை படிச்சனான்" அறிமுகம் இடையில் தான் நடந்தது.

"ஆகஸ்ட்டிலையிருந்து டிசம்பர் முடியுமட்டும், சிலவேளை ஜனவரி முடியுமட்டும் இப்பிடித்தான் குளிர் இருக்கும். குளிருக்குப் போடுகிற கம்பளி உடுப்புக்கள் ஏதும் கொண்டு வந்தனீங்களோ?"

"இல்லை. சவூதியை ஒரு பாலைவனம் எண்டுதான் சொல்லுவினம். ஆனால் இப்பிடி ஒரு மரணக்குளிர் இருக்குமெண்டு எனக்குத் தெரியாது."

கதைத்தபடியே கோப்பி போட்டுத் தந்தான்.

'நஞ்சு கலந்திருப்பானோ.....?'

சீச்சி.... அப்பிடிச் செய்ய மாட்டான்.

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லையெண்டால் நான் பாவிக்கிற ஒரு உடுப்பைத் தருவன். நீங்கள் புதிசு வாங்கினாப் போலை திருப்பித்தரலாம். அல்லது நீங்களே வைச்சிருக்கலாம்."

பீரோவிலிருந்து எடுத்துத் தந்தான்.

வெட்கத்துடன் பெற்றுக் கொண்டேன்.

★

"......அருள்...... அருள்........ 'ரெண்டர் புரொசீச்சரிலை' ஒரு சின்ன சந்தேகம்...... சொல்லித் தாங்களேன் ப்ளீஸ்......" என்று 'டவுட்ஸ்' கேட்கவரும் அருணி?, அஞ்சலா பீரிஸ்..... நிரோமி....." சும்மா போங்கடி சிங்....."

★

....கொங்கிறீட் கல்லு காலில் விழுந்து கால் உடைஞ்சு போன டில்ராஜ் மெண்டிசை எனது மோட்டார் சைக்கிளில் ஆசுப்பத்திரிக்குக் கொண்டுபோக கேட்க.... ஆயிரம் சாட்டுக்கள். மறுப்புகள்..... யூனிவேர் சிட்டி நிகழ்வுகள் மனதில் தாறுமாறாகத் தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்தன. அடிக்கடி அவை என்னை வேதனைப்படுத்துமோ?

"மல்லி! மொணவத கல்பனா கறன்ன? என்ன யோசிக்கிறியள்? வீட்டிலை எல்லாரும் சுகமா இருப்பினம். 'கணெதெய்யோ ஒருத்தரையும் கைவிடமாட்டார்."

"இல்லை நான் அதைப்பற்றி யோசிக்கேல்லை......"

அவனைப்பற்றி.... இல்லையில்லை.... அவரைப்பற்றிய எனது கணிப்புகள் யாவும் தவறாயிருந்தன.

.....எண்ணை வைத்துப் படிய வார்ந்த தலைகள்.... அழகிய குளிர்ச் சட்டைகள்.... கையுறைகள்.... யாழ்ப்பாணத்து முகங்கள்..... ஏனோ நினைவிற் குறுக்கிட்டன.

"தம்பி வாங்கோ, நான் 'கொம்பவுண்ட் மனேஜரிடம்' கூட்டிக் கொண்டு போறன்"

அவரைத் தொடர்ந்தேன். இவர்......

'உடுக்கை இழந்தவன் கையை' நினைவூட்டுகிறாரா?......

அல்லது.......

'இன்னா செய்தாரை.... நினைவூட்டுகிறாரா?

வீட்டிற்குக் கடிதம் போட்டேன். சகலதும் எழுதினேன். வீட்டிலிருந்தும் கடிதம் வந்தது.

ப்ரியமுள்ள மகனுக்கு!

".....உனக்கு ஆடை தந்த 'பேகனு'க்கு எங்கள் நன்றியையும் அன்பையும் தெரிவிக்கவும்....." என்று ஒரு வரியிருந்தது.

---

## லவ் லெட்டராக ஒரு கதை

# வசந்தம் வரும்....

-திருமதி. சாந்தினி சந்திரன்-

*என் பிரியமானவளே....*

உன்னை ஆரம்பத்தில் நான் கண்டு கொண்ட நாளை நினைக்கின்றேன்.... வரட்டு கௌரவங்கள் கலைந்து போக, பிடிவாதம் பொடியாக கருத்துக்கள் சேர்ந்ததால் இருவரும் இடைவெளியின்றி இணைந்தோம். அந்தப் புதிய உறவின் பிறந்த தினத்தில் நம் புதிய எண்ணங்களை பரிமாறிக் கொண்டோம். வசந்தமும் வரட்சியும் வித்தியாசமின்றி வந்து போனது..... எமக்கோ வருவதெல்லாம் வசந்தமாகவே இருந்தது. எல்லோரும் இரவு இருளானது பகல் ஒளியானது என்று படித்தார்கள். நாங்கள் இரவையும் பகலாக வடித்துக் கொண்டோம்.

எம் பரிமாற்றத்தில் காதல் இருக்கும் கவர்ச்சி இருக்கும் என்று காண வந்தவர்கள், எம் பேச்சின் திசை அறிந்து வியர்க்க மறைந்தார்கள். பருவக் கவர்ச்சியும், பகல்கனவும் அளிக்கும் 18 வயது தான் அன்று எமக்கு....நானும் நீயும் கதைத்தோம். "எங்கள் தேசத்தை எரிக்கும் நெருப்பை அணைக்க வேண்டும்!" இன்னும் பேசினோம், "இங்கு மனித நேயம் மரணிப்பதை தடுப்பது எப்படி?" என்று. "துப்பாக்கி முனையில் மனிதம் சாகும் துர்ப்பாக்கிய நிலை"யை விவாதித்தோம் "இங்கும் விடியுமா?" என்ற சோக முகங்களைத் தேற்ற முனைந்தோம்!

அப்போதெல்லாம் ஊர் உறங்கிக் கொண்டிருக்கும். "டொப்" என்று திடீர்சத்தங்கள் கேட்கும், நீ சொல்லுவாய்..... ஒரு காலத்தில் சத்தம் இப்படி கேட்டால் பனம்பழம் எடுக்க ஓடிய சனங்கள் இன்று பதுங்கு குழிக்குள் ஓடும் அவலத்தை பார்" என்று. வெடிச்சத்தங்கள் நிற்காது. திடீர் என்று மரண ஓலங்கள் எழும். ஒரு கணம்தான்...சிலிர்க்கும் உன் மனதில் திடமான உறுதி தெரியும். உன் கரத்தை என் கரத்தில் சேர்த்து உன் திடத்தை எனக்குள் வடித்துக் கொண்டிருப்பேன். "என்ன பயமா?" என்று கேட்பாய். "இல்லை....இது...இந்த ஊர் இவை.... எல்லாம் பிடிக்கவில்லை...." என்ற என் பதில் உனக்குள் ஓர் உணர்வற்ற சிரிப்பை உருவாக்கும் "அமைதியையும், ஆனந்தத்தையும் உனக்கு மறுபடி பார்க்க ஆசையில்லையா?" "எனக்கு மட்டுமல்ல. என் குடும்பம்...என் ஊர்...என் நாட்டிற்கே அது வேண்டும்" என்பேன். உனக்குள் சிந்திப்பாய்.... "என்ன முடியுமா?" என்றேன். "பின்பு வரும். இன்னும் பின்பு வரும்....அப்போது நானிருப்பேனோ..... நீ இருப்பாயோ.....ஆனால் அமைதி இருக்கும்" என்றபடி எழுந்தாய்.

மரணத்தில் ஓடும் மற்றப் பொழுது விடிந்தது. மரணக்குருவி அலறியது. மரணத்தை விதிதான் நிர்ணயித்தது தோழி... இங்கு விமானங்கள் தீர்மானித்தது. வேட்டுக்கள் கூறியது. காதைக் கிழிக்கும் முழக்கங்கள்... ஓலங்கள்... ஒப்பாரிகள்... ஆங்காங்கே குலதெய்வ முணுமுணுப்புக்கள்! சில நிமிடங்கள்தான் அமைதி. மயான அமைதி? தப்பிய உயிர்கள் தடுமாறி எழுந்து தேடின. நானும் ஓடினேன். பல வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு இருந்தன. ஆங்காங்கு கூட்டங்களும் ஒப்பாரிகளும் - நீ எங்கே.... உன் வீட்டை அடைந்த போது.... கற்குவியல் மேடு மட்டும் தெரிந்தது.." ஓ... இல்லை... இது பொய்......நீ எங்கே?" இடிபாடுகள் மத்தியில் தேடின விழிகள்..... அங்கு அந்த உடல் நீயாக இருக்கக்கூடாது! நீ... இல்லை... முகம் சிதைந்து இது யார்? ஓ... உன் முகத்தை உலகுக்கு காட்டியவள் முகம் சிதைந்து கிடந்தாள். உன் குடும்பத்தில் இந்த போர் விட்டு வைத்த ஒரே உயிரும் சிதைந்து கிடந்தது. இடிந்து போனேன். நீ எங்கே என் தோழி... என் தோள்பட்டையில் அழுத்தம் உணர்ந்து அண்ணாந்து பார்க்கையில், விழிகள் வெறிக்க நீ நின்றாய். "ரதீ..."அலறினேன். "இந்தியின் குடும்பம் வீட்டுடன் இடிந்து மறைந்தபோது அழுதியா? செல்வியின் அண்ணா சுடப்பட்ட போது அழுதியா.... இந்த மண் மரணசாசனம் எழுதப்பட்டது.... இன்று மட்டும் ஏன் அழுகை?" நீண்ட நேரம் கதைத்தாய். இழப்புக்களால் இறந்த உன் இதயத்தை தேற்றும் வழி தெரியவில்லை என் கண்ணீரை துடைக்கவும் முடியவில்லை!

அன்று மட்டும் ஊரில் இருபது சடலங்கள் எரிக்கப்பட்டன. இயற்கைக்கு தெரியுமா இன்ப துன்பம்? பொழுது விடிந்தது.

"ரதியைக் காணவில்லை"

"பெட்டைக்கு எல்லாரும் இழந்து தனிச்சனாய் தற்கொலை செய்தாளோ" விடியலில் விதவிதமான குரல்களில் விழித்தேன். ஓடினேன். எங்கும் தேடினேன் உன்னைக் காணவில்லை தான்! நீ இறக்கவில்லை என்று மட்டும் தெரிகிறது. உன்னை காணவில்லை!

அதனால் காலம் நிற்கவில்லை! நான்கு வருடங்களாகிவிட்டன இன்றுடன்.

உன்னைக் காணவில்லை என்றதும் தனிமையாய் வானத்தை, நிலத்தை, சுவரை என்று வெறித்த என்னை ஊரைவிட்டே வீட்டார் அனுப்பி விட்டார்கள்! இன்று ஊரைவிட்டு வந்துவிட்டேன். பாடம் படிக்கவில்லை! பல்கலைக்கூடம் செல்லவில்லை, இங்கு "அகதிப்பட்டம்" கொடுத்தார்கள். எனக்கு மட்டுமல்ல!

சொந்த மண்ணில் அகதி என்ற சோகம் தாங்கி.... உன் நினைவு பாரம் தாங்கி.....எப்படி கழிந்ததோ இத்தனை வருடம் எனக்குப் புரியவில்லை. இடையே ஊர் நினைவு எட்டிப் பார்த்தாலும், வீட்டில் இருந்து வரும் கடிதங்கள் என்னை ஊரை அணுகாமல் மறித்தன.

மரணங்கள் தொடர்ந்தன. மங்களங்கள் நின்றுவிடவில்லை. மாரியம்மன் பொங்கல் என்று மடல் கிடைத்தது. ஊரில் இருந்து!... நீண்டகால ஆசை! பிறந்த மண்ணைப் பார்க்கப் புறப்படும் மகிழ்வு. சென்றேன்!

பல மாற்றங்கள் - மயான அமைதி ஒன்று. இந்த அமைதி நீயும் நானும் எதிர்பார்த்த அமைதியல்ல... விரிந்து செல்லப்போகும் இழப்புக்களை சொல்லும் அமைதி!

இடிபாடுகள் இடை கொடுத்து..... புதிய பாதைகள் ஆங்காங்கே பிறந்து கிடந்தன. நடந்தேன்... அது அந்த ஒற்றை சுவர்மட்டும் உன் நினைவாய் உன் வீட்டில் மீந்திருந்தது.

கண்களில் நீர் பெருக... தடவிப் பார்த்தேன்... இதென்ன சுவரொட்டி, மறைத்த கண்நீரை வழித்தெறிந்து கூர்ந்து பார்த்தேன்... இது நீ... ஓ...ரதீ... என் ரதியின் படமல்லவா? என்னை பார்த்து சிரிக்கிறாயா? அன்றி வெறிக்கிறாயா? புரியவில்லை. சிரி. இந்தக் கோழையைப் பார்த்து நன்றாகச் சிரி! தொட்டுத் தொட்டுப் பார்த்தேன். 'விடியலுக்காய் விதையானவர்கள்' உன் படம்! விழி அழுதது. அதுக்கு அழ தெரியும்.....அழ மட்டுமா... மீண்டும் பார்த்தது உன்னை. அதுக்கு அழத் தெரியும் அழுதது...!

"என்ன எப்ப வந்தனி?" திடுக்கிட்டு திரும்பினேன் அது உன் சினேகிதப் பெட்டை நான்கு வருடம் முன்பு காணாமல் போனாள் அவள்!

ஓ....இன்று கிடைத்துவிட்டாள்! கிடைத்து காணாமல் போய்விட்டாள்! உன் நினைவு நெஞ்சில்! "அமைதி வேண்டுமில்லயா?. புது உலகம் வேண்டும்.... ஆடுவோமே.... பள்ளுப்பாடுவோமே..... ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று; ஆனந்தம் வேண்டுமில்லையா?"

பயங்கர இரைச்சல் உன் நினைவை மறைத்தது!

"உதுதான்பிள்ளை சுப்பர்சொனிக் விமானம் வருகிறது. குண்டுபோடுகிறது. மனிதம் மரணித்ததுதான்! மீண்டும் பிறக்காது...! கட்டிட இடிபாடுகள்! குண்டுச் சத்தங்கள் அப்படியே எல்லாம்! நீ மறைந்துவிட்டாய். உன்னை மீண்டும் பார்க்கிறேன். இதென்ன வாசகம்.

"எனக்குப் பிறகு
அமைதி வரும்
இன்னும் பின்பு
வரும்!
அப்போது.....,
நீயும் இருப்பாயோ
தெரியாது தோழா,
அமைதி இருக்கும்!

(யாவும் நிஜம்!)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# பரீட்சைக்கு நேரமாச்சு

ஏறாவூர்–மீராகேணி, எம்.எச்.முஹம்மது ஹமீம்

நியாஸ் நானாவுக்கு நாற்பது வயதில் வந்த ஆசை வித்தியாசமானது. அதுதான் இம்முறை க.பொ.த (சா/த) பரீட்சை எழுத வேண்டுமென்பது. ஐந்தாம் வகுப்பு வரையும் படித்து ஒவ்வொரு வகுப்பிலும் பல வருடாந்த விழாக்களைக் கொண்டாடியவர் தான் நியாஸ் நானா. நான்காம் வகுப்பில் நான்கு வருடங்களைக் கழிக்க, நியாஸ் நானாவை மீண்டும் ஒரு முறை அதே வகுப்பில் வைத்தால் அந்த நான்காம் வகுப்பறையைச் சொந்தம் கொண டாடத் தொடங்கி விடுவார் என்ற அச்சத்தினால்தான் ஐந்தாம் வகுப்புக்கு வகுப்பேற்றப்பட்டார். ஐந்தாம் வகுப்பிலும் பல வருடங்களைக் கழித்தவர். என்ன நினைத்தாரோ தெரியாது படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு வியாபாரத்தில் நாட்டம் கொண்டார்.



இப்போது 40 வயதில் சா/த பரீட்ஸ்ச எழுதும் ஆசை வந்ததற்கும் காரணம் இல்லாமலில்லை. நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்த போது "என்ன நானா வியாபாரம் எல்லாம் எப்படி...?" என்று நண்பர் கேட்டார். நியாஸ் நானா "வியாபாரம் ரொம்ப சவுப்பு தம்பி நல்லபடியாக நடக்கவில்லை" என்று கூறவே நண்பரோ "நீங்கள் படித்திருந் தீர்களானால் ஒரு அரசாங்க வேலையாவது எடுத்திருக்கலாம்" என்று கூறினார். உடனே நியாஸ் நானா தான் ஐந்தாம் வகுப்பு வரையும் படித்திருப்பதாகக் கூறினார். அதற்கு நண்பர் "ஐந்தாம் வகுப்பு வரையும் படித்திருந்தால் போதாது. குறைந்தது சா/த பரீட்சை முடிவாகிலும் வேண்டும்?" என்று கூறினார். சா/த பரீட்சை எடுத்தால் அரசாங்க வேலை யொன்று எடுக்கலாம் தானே என்ற ஆசையே சா/த பரீட்சை எடுக்கும் எண்ணத்தை நியாஸ் நானாவுக்கு ஏற்படுத்தியது.

நண்பரின் உதவியோடு தனிப்பட்ட பரீட்சார்த்தியாகத் தோற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். விண்ணப்பப்படிவம் உறுதி செய்வதற்கு பாடசாலை அதிபர் ஒருவரின் ஒப்பம் தேவைப்பட்டது. தான் ஐந்தாம் வகுப்பு வரையும் படித்த பாடசாலைக்கு நீண்ட இடை வெளிக்குப்பின் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டார். பாடசாலை அதிபரோ நானா வுடன் ஆரம்ப வகுப்பில் படித்தவர். எனவே அவரிடம் விடயத்தைக் கூறி உறுதிப்படுத்திக் கொண்டு, விண்ணப்பப்படிவத்தையும் நண் பரின் உதவியுடன் தபாலில் சேர்த்துவிட்டார். பரீட்சைக்கு ஒருவாரமிருக்கையில் பரீ குத் தோற்றுவதற்கான அனுமதிப் பத்திரம் தபாலில் கிடைக்கப் பெற்றது. ஒருவாறாக பரீட்சையும் துவங்கியது. முதல்நாள் தமிழ் பாடம் பரீட்சைக்கென்று வைத்த புதிய சேட்டையும் புதிய ஆனைக்கால் ஜீன்சையும் அணிந்து பரீட்சை நிலையம் சென்ற நானாவுக்கு "விசேஷ" வரவேற்புக் கிடைத்தது. பரீட்சார்த்திகளுக்கு வினாத் தாள்கள் வழங்கப்பட்டன. வினாத்தாளை ஒருவாறாக எழுத்துக் கூட்டி வாசிக்க நானாவுக்கு எல்லாமே குழப்ப மாயிருந்தது.

வினாத்தாளிலிருந்த "பின்வரு வனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குள் அமையுமாறு எழுதுக" என்ற வினாவை வாசிக்கும் போது "உமது ஊரில் உள்ள குறைபற்றி பத்திரிகைக்கு கடிதமொன்று வரைக", என்றிருந்தது. உடனே நானாவுக்கு ஊரில் தபால் நிலையம் இல்லாத குறையே ஞாபகம் வந்தது. உடனே அதனைப் பற்றிப் பக்கம் பக்கமாக 100 சொற்களைத் தாண்டியும் எழுதினார்.

ஒருவாறு எழுதி முடிந்தவருக்கு அப்போதுதான் ஞாபகம் வந்தது. கடிதத்தை அஞ்சல் செய்ய முத்திரையும் தபாலுறையும் தேவைப்படுமே என்று. உடனே மேற்பார்வையாளரை அழைத்து தனக்கு முத்திரையும் தபாலுறையும் தேவைப்படும் விடயத்தைக் கூறினார். நியாஸ் நானாவின் அறியாமையை எண்ணி மனதுக்குள் சிரித்த மேற்பார்வையாளர்- தங்களிடம் கொடுத்தால் தாங்கள் அனுப்பி வைப்பதாகக் கூறினார். ஒருவாறாக அன்றைய பாடம் முடிந்தது. சுகாதாரப் பாடம் நடக்கும் நாள் வந்தது.

வினாத்தாளில் "பின்வரும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய முதலுதவிகளை சுருக்கமாக எழுதுக." என்றிருந்தது. "நீச்சலுக்குச் சென்று நீரில் மூழ்கிய ஒருவருக்கு நீர் மேற்கொள்ளும் முதல் சிகிச்சை" என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதினார் நானா. "நீச்சல் தெரியாதவரை நீச்சலுக்கு அனுப்பியது உங்கள் தவறு. அதுவுமல்லாமல் முதல் சிகிச்சை செய்யத் தெரியாத என்னிடம் அப்படியானதொரு உதவி செய்யச் சொன்னதும் மற்றொரு தவறாகும். இனிமேல் நீச்சல் தெரிந்தவர்களை மட்டுமே நீச்சலுக்கு அனுப்ப வேண்டும்." என்று எழுதினார்.

இப்படியாக பல்வேறு விதமாகவும் பதில்களை எழுதிய நியாஸ் நானா விவசாயப்பாடம் நடந்த நாளன்று மண்வெட்டி , சகிதம் பரீட்சை நிலையத்துக்குச் சென்று விவசாயம் செய்யப்போய் பரீட்சை மேற்பார்வை யாளர்களால் வீட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

இப்போது வீட்டில் விவசாயம் செய்து கொண்டு பரீட்சை முடிவை எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறார்.

## சிந்தும் சிரிப்பு ஆயுளுக்கு உறுதி

# தேன் கிண்ணம்

### கவிஞன் யான் சாக மாட்டேன்!

நீதிக்கு தலைவணங்கி நிற்பேன்! என்றும்
நியாயத்தை குழிதோண்டி புதைக்க மாட்டேன்!
சாதிப்பேய் தலைவிரித்து ஆடும் பொல்லாச்-
சதிராட்டம் தொடரவழி வகுக்க மாட்டேன்!
ஆதிக்க வெறியர்களின் கரத்திலுள்ள
ஆயுதங்கள் கண்டும்யான் அஞ்சமாட்டேன்!
சோதியினை உலகுக்கு உண்டுபண்ணும்
சதந்திரத்துக் கவிஞன் யான் சாகமாட்டேன்!

வந்தனைகள் செய்தேதான் கோழைபோல
வால் பிடித்து கால்பிடித்து வாழமாட்டேன்!
எந்தவொரு பொழுதேனும் இலஞ்சம் பெற்று
எழிலாக என்வாழ்வை ஓட்டமாட்டேன்!
மந்தைகளாய் மதிகெட்டு வாழ்வோர் வாழ்வில்-
மறுமலர்ச்சி தோற்றுவிக்க மறக்க மாட்டேன்!
சந்ததியைத் தலைநிமிரச் செய்யும் கொள்கைச்
சத்தியத்துக் கவிஞன்யான் சாகமாட்டேன்!

நெஞ்சறியப் பொய்யுரைத்தே நிலத்தில்வாழும்
நீசர்களின் கொட்டத்தைப் பாடமாட்டேன்!
வஞ்சமனப் புலையர்தரும் துயரம் கண்டும்
வழிமாறி ஒருபோதும் ஓடமாட்டேன்!
பஞ்சத்தால் பசித்திருந்து மடிந்தாவேனும்
பாரினிலே பிறர்பொருளைத் திருடமாட்டேன்!
கஞ்சல்களைத் தான் ஓ(கூ)ட்டித் தூய்மை பேணும்
கௌரவத்தால் கவிஞன்யான் சாகமாட்டேன்!

-அ. கௌரிதாசன்-

### காதல்

இந்தத் திருவிழாவில்தான்
வாலிபங்கள்
வேண்டுமென்றே
இதயக்குழந்தைகளை
தொலைத்துவிடுகின்றன.

அக்கரைப்பற்று ஏ.ஜீ. சேகர்.

### எனக்கும் ஆசைதான்

எனக்கும் ஆசைதான்.. நான்
எழுத்தாளனாக உருவாக - என்
எண்ணத்தை எழுதினால்-
எவரறிவார் என்னை இங்கு?

உள்ளதைச் சொல்லப்போனால்
உலகுக்குப் பொறுக்காது-
உண்மையைக் கூறாது - என்
உள்ளமும் உறங்காது!

கண்டதைச் சொல்லத் துணிந்தால்-
காட்சிக்கு சாட்சி வேண்டும்-
கதை கூறப் புறப்பட்டால்-
கற்பனைக்கோ குறைபாடு!

'தேன்கிண்ணம்' பகுதி நாட-
தேடினேன் வார்த்தை ஜாலம்-
தேய்ந்ததுவோ நாளும் பொழுதும்-
தேவைதானா எனக்கிதுவும்?

வாசகனாய் இருப்பதொன்றே-
வாய்ப்பான வசதியேன்றே-
வாழ்த்துக்கூறி வாய்மூடி-
வாழ்நாளை போக்கிடுவேன்!

கல்கமுவ - வெற்றி வேந்தன்-

### கட்டலாம்தான்!

எனது அன்புக்காதலியே
சிமெண்ட் விலைமட்டும்
ஏறாமல் இருந்திருந்தால்
கம்பியூட்டர் வசதியோடு
நானும் ஒரு நவீன
தாஜ்மஹால் கட்டியிருப்பேன்
உனக்காக

-ஜீ. ஜீவன்-

### நம் நிலை!

உண்ணவும் உணவில்லை
உயிருக்கும் உத்தரவாதமில்லை
நாளும் இங்கே நடுங்கியே
வாழுகின்ற நம் நிலை யாரறிவார்?


பாஸ் எடுத்துவிட்டால்
பட்டணம் நாம் வந்திடலாம்
ஆனால்....
பணமல்லவோ வேண்டும் அதற்கு!

தங்கத்தை வைரத்தை
கொடுத்திட்டும் வந்திடலாம்
ஆனால்...
நகையல்லவோ வேண்டும் அதற்கு!

எங்களின் கண்ணீருக்கு
விடைதேடி கடவுளிடம்
வந்தால்.. கடவுளும் இங்கே
கல்லாகிப் போனாரே!

எத்தனை நாளைக்குத்தான்
எங்களுக்கு இந்நிலை
பிறந்தமண்ணில் இறந்துபோகவும்
விதியில்லை- இங்கே
இருந்து வாழவும்
வழியில்லை இங்கே.

-தயாளினி பரமசாமி-



### எமது தாய் மண்

தோண்டிய குழியில்
சகோதரனை மூடும்
இங்கிதத்தைப் படிப்பித்த
ஒரு மண்.

செழிப்புகள்
சருகானதால்
தன்னையே
அழித்துக் கொண்டிருக்கும்
ஒரு நிலம்.

வெறுமைகளை
உமிழ்ந்து உமிழ்ந்து
நிஜங்களை இழந்துபோன
பூமி.

கண்ணீரால் மட்டுமே
பன்னீர் தெளிக்கப்
பழகிக் கொண்ட
எமது மக்கள்.

வெறுத்துப் போன
எமது
மண் தரையில்
அவிந்து போயிருக்கும்
எதேச்ச கார
நெருப்பின் சாம்பல்களைக்
கூட்டுவோம்.

விளித்திருக்கும்
வேற்றுமை விலங்கின்
விழிகளுக்குள்
அந்த
கருமாதிச் சாம்பலைப்
போட்டு மூடுவோம்.
உருகிக் கொண்டிருக்கும்
எமதுதாய் மண்ணைக்
காப்போம்.

நிதர்சனங்களை
மௌனத்தினால்
மூடி
மறைந்து கொண்டதான
எமது தாய் மண்ணில்
சேர்தல்
என்பதைப்
புனருத்தாரணம்
செய்வோம்
வாருங்கள்.

-அக்குறணை இளைய அப்துல்லாஹ்-

### இருட்டுக்குள் நான்!

எதிர்காலம்
தொலைத்து-
இருட்டுக்குள் நான்!

வேலைதேடி
சம்பாதித்த
வேதனைச் சில்லறைகள்
விரக்திக்குள்
கலகலத்துச் சிரிக்கிறது
என்
இயலாமையைக் கண்டு!

நேர்முகங்களில்
தேர்வாகாமல்
திரும்பிவரும் போதிலெல்லாம்-
எதிர்பார்ப்புகள்
ஏமாறிப்போய்
பெருமூச்சுகளே
வெளிப்படும்!

என்
பார்வைகள் படும்போது
தகைமைகளை-
திறமைகளை
பறைசாற்றும்
சான்றிதழ்களும்
சாதிக்க முடியாமல்
சங்கடப்பட்டுக் கொள்கின்றன.

நோட்டுகளின்றி
நிர்வாணமாகிப்போன
'பர்ஸு'ம் கூட
பரிகசிக்கிறது
பரிதாபமாய்!

நாளைய
நெருக்கடிகளில்
இன்றே
தொலைந்துபோன
நான்
இருளுக்குள்!

-கே. கனகராஜா-

### ஹைகூ இரண்டு!

நெஞ்சில் நிலா
முகத்தில் அமாவாசை
தாடியுடன் காதலன்.

•

சவர்க்காரம் கரைந்தது
நுரைகள் இருட்டில்
அரை நிலவும்
நட்சத்திரங்களும்.

-எம்.எச்.எம். ஜவ்பர்-

## பயண அனுபவம் ஒரு துளிக்கதையாக

# அந்தப் புன்னகை என்ன விலை?

-எஸ்.ஏ.எச்.ஹஸன்-

அன்று புதன்கிழமை. வழமைபோல் காரியாலயம் செல்வதற்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறேன். கொஞ்சம் நேரமாகி விட்டதால், முகத்திலும் சிடு சிடுப்பு. ஒருவாறு, காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, பஸ் தரிப்பு நிலையத்திற்கு விரைகிறேன். சே..... மீண்டும் சலிப்பு. மிதி பலகையில் கூட நிற்க இடமின்றி, ஒரு கையிலும் ஒரு காலிலும் சர்கஸ்காரர்களைப் போல் பிரயாணிகள்! இதில் நானும் ஏறி, ஆள் பாதி ஆடை பாதியாக காரியாலயம் செல்லத்தான் வேண்டுமா? ஓர் ஐந்து நிமிடம் கழிந்தது. மக்கள் மயப்படுத்திய போக்குவரத்துச் சபை பஸ் வண்டி யொன்று, சுமாரான பயணிகளுடன் வந்து கொண்டிருந்தது. என்னருகில் பஸ் வண்டி நிறுத்தப்பட்டது. ஏறிக் கொள்கிறேன். ஒருவாறு சுதாகரித்து நின்று கொள்வதற்கு தாராளமாக இட மிருந்தது. ஓரளவு இதமாக!

ஆகா, அடித்தது கன்னி ராசி. அந்தக் கன்னி என்னைப் பார்த்துத்தானே புன்னகைக்கிறாள்? இல்லை, ஒரு வேளை பிரமையாக இருக்குமோ? இல்லையே... என்னையேதான் பார்த்துப் புன்னகைக் கிறாள். அவளை இதற்கு முன்னர் நான் பார்த்ததுமில்லையே? ஒரு வேளை என்னை, என் அலுவலகத்தில் சந்தித் திருப்பாளோ? ம்...கூம் ...! அப்படி யிருந்தால் கூட இந்த அழகியை நானா மறந்து விடப் போகிறேன்? பதிலுக்கு நானும் சிரித்துக் கொள்கிறேன். பஸ் வண்டி, 'சென்றி பொயின்ற்'களைக் கடந்து மட்டக்களப்புக்கு விரைகிறது. அவள் ஏன்..... இன்னும், இன்னும் புன்னகைக்கிறாளே...? ஒரு வேளை, என் ஆடைகள் சரியாகச் சீர் செய்யப்பட வில்லையோ? பட படப்புடன் ஆடைகளை 'செக்-அப்' பண்ணிக் கொள்கிறேன். இல்லையே! இருந்தாலும் என்ன, வந்த 'சான்ஸை' நழுவ விடுவேனா? அவள், அடிக்கடி ஏன் பஸ் வண்டியினுள்ளே இடது பக்கமும் பார்த்துக் கொள்கிறாள்? இப்பொழுதுதான் நானும் பார்க்கிறேன். அங்கே, கறுப்பு 'பெயின்ற்'இனால், அழகாக எழுதப்பட்டுள்ளது 'காதல் தடை செய்யப் பட்டுள்ளது' என்று! இப்போது என் நெஞ்சில் ஓர் நெருடல். ஓகோ... அவள், என்னைப் பார்த்துச் சிரிக்கவில்லையோ? ஏமாற்றம் வேதனையானது. பகைத்துக் கொள்ள வேண்டும் போல மனது துடிக்கிறது. அவள் வலது பக்கமும் பார்த்துக் கொள்கிறாளே....? அங்கே என்ன இருக்கிறதோ...நானும் பார்க்கிறேன். 'பகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது' என்னை அறியாமலே நான் இப்போது சிரித்துக் கொள்கிறேன். காதலும் கூடாது. அதற்காகப் பகைக்கவும் கூடாது என்றால், என்ன செய்வேன்? வேதனையை மறக்கப் புகைப்பிடிக்கலாம் என்று பார்த்தால், பஸ் வண்டியின் மற்றோரிடத்தில், 'புகைத்தல்



தடை செய்யப்பட்டுள்ளது' என்றும் இருக்கிறது.

'புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது' என்று, அந்த பஸ் வண்டியில் எழுதப் பட்டிருந்தவற்றை, 'காதல் தடை செய்யப்பட்டுள்ளது', 'பகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது' என, தம்முடைய 'டெக்னிகலைப்', பிரயோகித்து, யார்தான் திருத்தியிருந்தாலும், எனக்கென்ன? மீண்டும் ஒரு முறை அவள் சிரிக்க மாட்டாளா....? இல்லை, அவள் சிரிக்கவில்லை. இதற் கிடையில் நகர் வந்தடைந்து விட்டது பஸ் வண்டி. பெண்ணே சொல்! அந்தப் புன்னகை.... என்ன விலை?

நிமிடக் கதை

# லதாவின் கோபம் ஏன்?

- வை. நிரு -

தாயும், தகப்பனும் மூடி மறைத்த செய்தி எப்படியோ லதாவுக்குத் தெரிந்து விட்டது. ரியூசன் விட்டு அவசர அவசரமாக வீட்டுக்கு வந்தவள் அல்பத்தை புரட்டிப் புரட்டிப் பார்க்கிறாள். காணவில்லை. அந்த போட்டோவைத்தான் காணவில்லை. 'நான் கேள்விப்பட்டது சரிதான். எதற்காக அந்தப் போட்டோவை எடுத்தார்கள்? ஏன் என்னைக் கேட்காமல் எடுத்தார்கள்? கோபத்தில் அவள் நெஞ்சு குமுறுகிறது. எரிமலையாய் வெடிக்கிறது. அந்தக் கோபத்திலே அல்பத்தையும் ஒரு சுழட்டு சுழட்டிவிட்டு மூலைக்குள் எறிகிறாள்.

"அம்மா! அம்மா!" அவள் கோபத்தின் வேகத்திலே தாயை அழைக்கிறாள். கோடியில் நின்ற பார்வதியும் லதாவின் குரல் கேட்டு என்னவோ ஏதோ என்று பதறிக்கொண்டு ஓடி வருகிறாள்.

"என்ன பிள்ளை ஏன் இவ்வளவு அவசரமாக கூப்பிட்டனி?"

"இந்தச் சமாளிப்பு ஒன்றும் எனக்குத் தேவையில்லை. அல்பத்தில இருந்த அந்தப் போட்டோ எங்கே?"

"எந்தப் போட்டோ பிள்ளை? நான் எடுக்கல்லையே. எனக்கு உதைப்பற்றி ஒன்றும் தெரியாது."

"நான் உங்கள் மகள் அதாவது தெரியுமா? என்னைக் கேட்காமல் எதற்காக அந்தப் போட்டோவை எடுத்தீர்கள்?"

"பிள்ளை நீ என்மேலே பாயாதே. எல்லாவற்றுக்கும் அப்பா வரட்டும். கேட்டுப் பார்ப்போம். பேசாமல் இரு."

"சீ...நாகரிகம் தெரியாத கிழடுகட்டைகளோடு இருப்பது பெரிய அவமானமாய் போயிட்டுது. என்னை அவமானப்படுத்திட்டார்களே. இந்த வீட்டில் நடப்பது ஒன்றும் எனக்குத் தெரியாது. யாரும் சொல்லித்தான் தெரிய வேண்டியிருக்கிறது." லதா அங்கலாய்த்துக்கொண்டிருந்தாள்.

"பார்வதி....! பார்வதி....! என்ன வெய்யிலடி இது. நெருப்பாய் கொளுத்துது. வேர்த்துக் கொட்டுது. தாகத்திற்கு கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என குரல் கொடுத்துக்கொண்டே வெளியே போன சுந்தரம் வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கிறார்.

"இஞ்சருங்கோ. சத்தம் போடாதையுங்கோ. பிள்ளை வீட்டுக்குள்தான் இருக்கிறாள். போட்டோவைக் காணலையென்று கண்டுபிடித்திட்டாள் போலயிருக்குது. கோபத்தில துள்ளுகிறாள்."

"என்ன துள்ளுகிறாளோ? ஏனாம் துள்ளுகிறாள்?"

"ஐயோ சத்தம் போடாதையுங்கோ. பரமசிவத்தாரின் பெடியன்ர சாதகம் பிள்ளைக்கு பொருந்திட்டுது என்று, பொம்பிளையைப் பார்க்க போட்டோவையல்லவோ புரோக்கரிடம் கொடுத்தனாங்கள். அது எப்படியோ பிள்ளைக்கு தெரிந்திட்டுது போல இருக்குது. அவளைக் கேட்காமல் கலியாணம் பேசினது கோபமோ தெரியலை. இஞ்சருங்கோ ஒரு வேளை காதல் கீதல் என்று ஏதும் இருக்குமோ."

"அடி பார்வதி. உந்தக் கதையைச் சொல்லி என் கோபத்தை கிளறாதே."

"என்னங்க நீங்களும் கோபத்தில துள்ளுறியள். எதற்கும் பிள்ளையை ஒருதரம் விசாரிச்சுப் பாருங்கோ. காதல் ஏதும் இருந்தால் தந்திரத்தால் பிரிக்கவேணும் பாருங்கோ. பேசின கலியாணத்தை குழப்பினால் அவமானம்தான். அதனால பிள்ளையோட ஆதரவா கதைச்சுப் பாருங்க. அவசரப்பட்டு ஏதும் பேசிடாதையுங்கோ. நாங்கள் பேச அது ஏதாச்சும் கோபத்தில் செய்ய, எங்களால அதைத் தாங்க முடியாது. பிள்ளை அறைக்குள்தான் இருக்கிறாள். போங்க பிள்ளையோட போய் கதையுங்கோ நானும் பின்னால வருகிறேன்" என முன்னே சுந்தரத்தை அனுப்பிவிட்டு மெல்ல பின்னால் தொடர்கிறாள். பார்வதி.

தான் வருகிறேன் என்றதை லதாவுக்கு புரிய வைப்பதற்காக ஒரு செருமலுடன் "பிள்ளை! பிள்ளை!" என கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைகிறார் சுந்தரம்.

"வாங்க! உங்களைத்தான் தேடினேன் அப்பா வாங்க! அல்பத்திலே ஏன் அந்தப் போட்டோவை எடுத்தீர்கள்?"

அவள் கேட்ட விதத்திலேயே புரிந்துவிட்டது. பார்வதி சொன்னது போல கோபத்தில்தான் இருக்கிறாள், என்ன செய்வது? செல்லத்தைக் குடுத்து வளர்த்திட்டோம். அவள் துள்ளினால் நாங்கள் அடங்கத்தான் வேண்டும்.

"பிள்ளை உன்னைக் கேட்காமல் எடுத்தது தப்புத்தான். ஏன் பிள்ளை உனக்கு ஏதும் 'லவ்' இருக்குதோ? இருந்தால் சொல்லு. சும்மா தேவையில்லாமல் கோபிக்காதே."

"அப்பா போட்டோவுக்கும் லவ்வுக்கும் என்ன சம்பந்தம்?"

"பின்னே என்ன பிள்ளை. கலியாணம் பேசினபோது பொம்பிளையைப் பார்க்க ஒரு போட்டோ கேட்டுதுகள். உனக்குத் தெரியாமல் அல்பத்தில் இருந்து நாங்கள் தான் எடுத்துக் கொடுத்தோம். உதை எப்படியோ தெரிந்துதானே இப்ப நீ கோபத்தில துள்ளுகிறாய். உனக்கு விருப்பமில்லையென்றால் சொல்லு பிள்ளை. பேசின சம்பந்தத்தை வேணாமென்று சொல்கிறோம்."

"அப்பா! அப்பா! என்னப்பா இன்னும் என்னை நீங்கள் புரிஞ்சுக்கல்ல. எத்தனையோ வடிவான போட்டோ இருக்கத்தக்க, எண்ணைத் தலையோட பின்னலிட்டு கோணங்கியாய் நின்று எடுத்த அந்தப் போட்டோவைக் கொடுத்திருக்கிறீர்களே. என்னைக் கேட்டிருந்தால் வடிவான போட்டோவைத் தந்திருப்பேனே. அந்தப் போட்டோவைக் கிழித்தெறியாமல் அல்பத்தில வைத்த தப்புக்காக அதுவா சம்பந்தம் பேச கிடைத்தது."

"அட உதுக்கே பிள்ளை நீ கோபிக்கிறாய்? நாங்களும் என்னவோ ஏதோவென்று யோசிச் சிட்டோம்"

சுந்தரத்திடமும், பார்வதியிடமும் இருந்து நிம்மதிப் பெருமூச்சொன்று வெளிப்பட்டது. ■

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

அரைப்பக்க கற்பனை இதழ்

# காதலி

அரைப்பக்க சுவாரசியம்

இது ஒரு குடும்பப் பத்திரிகை

## பட்டாசுச் சத்தத்தால் பதட்டம் ஒற்றுமைக் கூட்டத்தில் சிலநேர சந்தேகம்!

'யார் தலைவராக இருப்பது? யாரை யார் வெட்டி ஓடுவது என்ற நோக்கங்கள்தான் நமது ஒற்றுமைக்கு வேட்டுவைத்தன. இப்போது நம் விழிகள் திறந்தன. எம் மக்கள் தம் அபிலாசைகள் கேட்டு நம் செவிகள் திறந்தன. இனிமேல் ஒன்றுபட்டு செயல்படுவோம்.' இவ்வாறு தமிழ் கட்சிகள் ஒன்றுகூடி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள், ஈ.பி.டி.பி புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய அமைப்புக்களின் தலைவர்கள் அந்த கூட்டறிக்கையில் தெளிவாக கையொப்பம் இட்டுள்ளனர்.

நேற்று மாலை 4.45 மணியளவில் தமிழ் பஞ்சாங்கப்படி கணிக்கப்பட்ட சுபநேரத்தில் அக் கட்சிகளின் தலைவர்கள் தம் இருக்கைகளை விட்டு எழுந்து தம் கரங்களைக் கோர்த்துக் கொண்டனர்.

அக்காட்சியை நேரில் கண்டவர் வியந்தனர். ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

அதற்கு முன்னதாக பகல் 3.30 மணிக்கு கட்சித் தலைவர்களின் கலந்துரையாடல் கூட்டம் ஆரம்பமானது. கூட்டம் நடைபெற்ற மண்டபத்தைச் சுற்றி இராணுவ வீரர்கள் அங்குலத்திற்கு ஒருவர் வீதம் பலத்த காவலில் ஈடுபட்டிருந்தனர்.

கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கூட்டணித்தலைவர் திரு.மு.சிவா அவர்கள் வந்தபோது புலிகளின் தலைவர் பிரபாகரன் எதிர்பாராத வேகத்தில் ஓடிவந்து கட்டியணைத்தார். மெய்மறந்த திரு.சிவா "தம்பி எப்படியிருக்கிறீர்கள்?" அவர் தலையை ஆதரவாக வருடினார்.

"எனக்கென்ன அண்ணே. நீங்கள் இப்போதும் உயிரோடிருப்பது என் பாக்கியம்"

என்று கூறிய புலிகளின் தலைவர் தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

அருகில் நின்ற ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் திரு. டக்ளஸ் தேவானந்தா "ஏன் தோழர் கண் கலங்குகிறீர்கள்" என்று கேட்டபடி



புலிகளின் தலைவரை ஆதரவாக அணைத்துக் கொண்டார்.

"இந்த நேரத்தில் அமிர் அண்ணா இல்லை என்று நினைக்கும் போது...." என்று ஏதோ சொல்ல முயன்ற பிரபாகரன் கட்டுமீறி வந்த விம்மலினால் சொல்லி முடிக்காமல் வாயைப் பொத்தியபடி குலுங்கினார்.

அப்போது புகைப்படம் எடுக்க முயன்ற பத்திரிகையாளர்களை இராணுவத்தினர் அன்போடு தடுத்து விட்டனர். பாசத்தை படமாக்கி கொச்சைப்படுத்த வேண்டாம் என்று அவர்கள் கூறியதை பத்திரிகையாளர்களும் ஆமோதித்தனர்.

இதற்கிடையே திடீரென்று எங்கோ வெடிச்சத்தங்கள் கேட்டன.

திரு.டக்ளஸ் தேவானந்தாவின் அணைப்பில் இருந்து விடுபட்ட திரு.பிரபாகரன் அவரை ஒருவித சந்தேகத்தோடு பார்க்க, அவரும் பிரபாகரனை அதே போல் சந்தேகத்தோடு நோக்க, ஏனைய தலைவர்களும் பதட்டத்தோடு சுற்றும் முற்றும் பார்த்தனர். அந்த நேரத்தில் கூட்டணித் தலைவர் திரு.சிவா மட்டும் சிரித்தபடி கலங்காமல் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

வெளியே கேட்ட வெடிச்சத்தங்கள் ஒற்றுமைக் கூட்ட செய்தியறிந்த மக்களால் கொளுத்தப்பட்ட பட்டாசு வெடிகளின் சத்தங்களே என்று தொண்டர் ஒருவர் வந்து கூறினார்.

விபரம் அறிந்த கட்சித்தலைவர்கள் மீண்டும் அணைத்துக் கொண்டனர்.

கூட்டணித் தலைவர் திரு.மு.சிவா அவர்களை நெருங்கிய பத்திரிகையாளர் ஒருவர் "வெடிச்சத்தம் கேட்ட போதும் நீங்கள் கலங்கவில்லையே காரணம் என்ன?" என்று கேள்வி எழுப்பினார்.

"எல்லாம் ஒரு அனுபவம்தான். இன்னமும் தேநீர் குடித்து பிஸ்கட் சாப்பிடவில்லை. அசம்பாவிதம் செய்வதாக இருந்தால் கூட தேநீர் குடித்து முடித்து ஆறுதலாகத்தானே செய்வார்கள்" என்று கூறினார்.

சிவா கூறியதைக் கேட்ட பிரபா அடக்க முடியாமல் சிரித்துவிட்டார்.

(கூட்டணித்தலைவர் அமுதர் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் யாரோ சில கொலையாளிகள் அவரோடு தேநீர் அருந்தி பிஸ்கெட் சாப்பிட்டது வாசகர்கள் அறிந்ததே. அப்போது திரு சிவாவும் அங்கிருந்தது தெரிந்ததே.)

## ஒய்வு பெறும் ரஜனி ஓவியரானார்

தமிழகத்தின் பிரபல நடிகர் ரஜனிகாந்த் நடிப்புலகில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்றிரவு அறிவித்தார்.

பத்திரிகையாளர்களை சந்தித்து ஓய்வு பெறும் அறிவிப்பை அவர் வெளியிட்டார். அப்போது தன் இடது கரத்தில் இருந்த தூரிகையை வலது கையில் ஸ்ரைலாக எறிந்து பிடித்தபடி புதிய செய்தி ஒன்றையும் வெளியிட்டார்.



ஓவியத்துறையில் நுழையப்போவதாகவும், ஓவிய உலகிலும் சுப்பர் ஸ்டாராக வரமுடியும் என்று நம்புவதாகவும் அவர் கூறினார். இடது கரத்தில் இருந்த தூரிகையை மீண்டும் வலது கரத்திற்கு ஸ்ரைலாக எறிந்து நிருபர்களுக்கு வணக்கம் சொல்லி விடை பெற்றார்.

## இலக்கிய நயம்

கவியரசு கண்ணதாசன். நீட்டி விளக்கிப் போதித்தால் புரியாத விஷயங்களை சுருக்கமாக சுள்ளென்று உறைக்கும் விதத்தில் சொல்வதில் வல்லவர். அவரது எண்ணற்ற படைப்புக்களில் இங்கே ஒரு சிறு துளி.



## ஆத்மாவில் பலமிருந்தால்

மன்மதனுக்கும், ரதிக்கும் கடுமையான வாக்குவாதம் நடந்தது.

ஆரண்யத்தில் கடுந்தவம் புரிந்து கொண்டிருந்த ஒரு முனிவனைக் காமுகனாக மாற்ற முடியுமா என்பதே இருவருக்கும் நடந்த விவாதம்.

"முடியும்!" என்றாள் ரதி.... "முடியாது" என்றான் மன்மதன்.

"புலன்-உணர்ச்சிகளைக் கல்லாக்கிய பிறகே ஒருவன் முனிவனாகிறான். அதிலே ஈரம் உள்ள வரைதான் அதில் காமக் குழம்பு கொதிக்கிறது. துறப்பு என்பது உடல், உள்ளம் அனைத்தையும் துறப்பதே. அப்படிப்பட்டவன் அந்த முனிவன். அவனைக் காமுகனாக்க உன்னால் முடியுமானால் சிவஞான தத்துவம் செத்துவிட்டதாக அர்த்தம்" என்றான் மன்மதன்.

"பஞ்சபாணா! இவ்வளவு பழகியும் என்னை நீ அறியவில்லை. எனது அங்கங்களின் ரஸவாதத்தில் அகிலமே சுருண்டு கிடக்கிறது. காமதேவியின் மைய மண்டபத்தில்தான் விசுவாமித்திரன் மதியிழந்தான்; ராஜ்யங்கள் மூழ்கின. சரித்திரத்தின் பெரும் பகுதியே இதுதான்; இதிலே மயங்காத ஒருவன் இன்னும் பிறக்கவில்லை!" என்றாள் ரதி.

"முடியுமானால் அந்த முனிவனை முயன்று பார்"

என்று அவளுக்கு அனுமதி தந்தான் மாரன்.

ரதி தன்னை அலங்கரித்துக் கொண்டாள். மார்பகங்கள் விம்மி நிற்குமாறு கச்சையைக் கட்டிக் கொண்டாள். ஆடும் போது கால்கள் முழுமையும் தெரியும்படி ஆடை அணிந்து கொண்டாள். ஞான முனிவன் தவம் செய்யும் இடத்தை நோக்கி விரைந்தாள்.

"நமோ நாராயணா! நமோ நாராயணா!"

காட்டு மிருகங்களையே துரத்தி அடிக்கும் அளவுக்கு இந்தக் கோஷம் முனிவனின் வாயிலிருந்து வந்து கொண்டிருந்தது.

ரதி, கால் சலங்கைகளால் ஒலி எழுப்பினாள்.

முனிவன் கண் திறக்கவில்லை.

கைவளையோசை பிறந்தது.

முனிவன் அப்படியே இருந்தான்.

இசையும், ஸ்வரங்களும், சுருதியும் தோற்றுவிடும்படி அவள் சிரித்தாள்.

முனிவன் கண் திறக்கவில்லை.

ரதி பாடிக்கெண்டே ஆடத் தொடங்கினாள்.

"என் அன்பே! சிறியதொரு கோபுரத்தின் சிங்காரக் கலசங்களைப் பார். இந்தக் கோயிலின் வாசலில் பரமனே பல தடவை மயங்கி விழுந்திருக்கிறான். இதனை நீ ஒருமுறை பார்த்து விட்டால் மூச்சுத் திணறும்; பேச்சுத் தடுமாறும்; மறு உலகம் பற்றிய சிந்தனை மரத்துப் போகும்; சிருங்கார லயமே சுகம், சுகம் என்று ஓசையிடும்; காலங்கள் மறந்து போகும். கவலைகள் பறந்து போகும். வலிமைகளைச் சேகரித்து வைத்திருக்கும் உனது உடலை - இளமையைச் சேகரித்து வைத்திருக்கும் என்னிடம் கொடுத்துப் பார்; பிறகு தவம் உனக்குக் கசந்து போகும்!"

ஆனால், முனிவரிடமிருந்து 'நமோ நாராயணா!' என்ற குரலன்றி வேறொன்றும் இல்லை. எனினும் உரத்து நின்ற அந்தக் குரல் தாழ்ந்து கொண்டே வந்தது.

"நமோ நாராயணா! நமோ நாராயணா!"- ஏழு ஆண்டுகளுக்கு முன்னே மூடிய முனிவனின் கண்கள், மெதுவாகத் திறந்தன. அவை கோவைப் பழம் போல் சிவந்திருந்தன.

ரதியின் மேனியை அவர் உற்றுப் பார்த்தார்.

பார்த்தார், பார்த்தார். பார்த்துக் கொண்டேயிருந்தார்.

"நமோ நாராயணா!" என்ற குரல் கீழ் ஸ்தாயிக்கு வந்துவிட்டது.

ரதி அவர் அருகில் வந்து அமர்ந்தாள்.

அவர் கன்னங்களை வருடினாள். ஆள்காட்டி விரலினால் உதடுகளைத் தடவினாள். மார்பினில் சாய்ந்தாள்.

அவரை மார்போடு அணைத்தாள்.

"நமோ நாராயணா!" முனிவன் குரல் மெதுவாக மேலெழுந்தது. ஏதோ ஒரு வகை உணர்ச்சி அவளை உந்தித் தள்ளியது.

"நமோ நாராயணா!"

கூடைக்குள்ளிருந்து தலை தூக்கும் பாம்பு போல் அவர் மார்பிலிருந்து மெதுவாக விலகினாள் ரதி.

இப்போது அவள் அவரையே உற்றுப் பார்த்தாள்.

அவள் கண்கள் சிவந்தன. அவை மெதுவாக மூடின.

"நமோ நாராயணா!"-இப்போது அவள் அதை உச்சரிக்கத் தொடங்கினாள்.

சுருதியும், லயமும் கூடிக் கொண்டே போயின. முனிவனைக் காமத்துக்கு அழைக்க வந்த ரதி, தான் ஞானத்துக்குள் நுழைந்துவிட்டாள்.

முனிவர் சிரித்தார்.

மன்மதன் அலறினான்.

"தவத்தைக் கலைக்கப் போன என் அருமை ரதியே, நீயுமா தவம் செய்யத் தொடங்கிவிட்டாய்?"

திடீரென்று ஒரு சிரிப்புச் சத்தம் கேட்டது; இறைவன் பிரத்தியட்சமானான். அவன் சொன்னார்:

"பலவீனமான ஆத்மாக்கள் மற்றவர்களாலே மாற்றப்படுகின்றன. ஆன்ம பலம் உள்ளவர்கள் மற்றவர்களை மாற்றிவிடுகிறார்கள்." ■

## சூப்பர் அனுபவம்

"நிஜங்கள்" கதைகளாய் கிடைக்கும் போது கற்பனைக் "கதைகள்" எதற்கு?

## ஒரு போட்டி முரளி பாட்டி

-எம். சுரேஷ்-

இலங்கை இந்திய அணிகளுக் கிடையிலான ஒருநாள், (கடைசி) கிரிக்கெட் போட்டியின் நேரடி ஒளிபரப்பைக் காண்பதற்காக, ஒரு பெரிய நண்பர் பட்டாளமே எங்கள் வீட்டில் கூடிவிட்டது. அவர்கள் வீடுகளிலும் (T.V) இருக்கிறது. ஆனால் ஒரே இடத்தில் கூடி, அரட்டை அடித்துக் கொண்டு, விமர்சனம் செய்து கொண்டு 'மெச்' பார்ப்பதற்கு எங்கள் வீடு வசதியாக இருந்தது.


இப்போது 'மெச்' ஆரம்பம். விமர்சனங்களும் ஆரம்பம். எனக்குக் கிரிக்கெட்டில் அதிக ஈடுபாடு இல்லாவிடினும் "முரளி"யின் ஆட்டத்தைப் பார்ப்பதற்காகவே குந்தியிருந்தேன். பக்கத்தில் ஒரு வயதான பாட்டியும் குந்தியிருந்தார். இடைக்கிடை நண்பர் பட்டாளம் என்னென்னவோ சொல்லிக் கத்தியது. நானும் கூட்டத்தோடு சேர்ந்து கத்தினேன். சிரித்தேன். ஒன்றும் புரியவில்லை!

மொரட்டுவை மைதானம் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. மைதானத்துக்குள்ளே "பௌன்றி" லைனுக்கு வெளியிலும் புற்தரையில் ஆட்களை உட்காரவைத்திருந்தனர் அல்லது உட்கார அனுமதித்திருந்தனர். "பௌன்றி" லைனைச் சுற்றி பொலிசாருக்கும் பஞ்சமில்லை. பாட்டியும் பொலிசாரைக் கண்டுவிட்டார். காரணம் கேட்டார். விளக்கினோம். மீண்டும் ஆட்டத்தில் லயித்துப் போனோம்.

"ஆகா! சூப்பர் சொட்... கமோன் முரளி...." கூட்டம் கூச்சல் போட்டது. பாட்டி "முரளியை" பிடித்துக் கொண்டார். காரணம் பெயர் தமிழாயிற்றே. அதனால் பாட்டிக்கு முரளியை டி.வியிலேயே அறிமுகப் படுத்தி, அவர் ஒரு தமிழ் வீரர் என்பதையும் தெளிவுபடுத்தினோம். அதன்பின் பாட்டி "மெச்" பார்க்கவில்லை, முரளியைத்தான் பார்த்தார். (முரளியின் பாடு கொண்டாட்டம் தான்!)

பிறகென்ன...வரும் பந்துகளையெல்லாம் முரளி உருண்டு, உருண்டு பிடித்துக் கொண்டிருந்தார். பாட்டிக்குப் பயங்கர சந்தோசம். கைதட்டினார். நேரம் ஓடியது....

துடுப்பாட்டக்காரருக்கு அண்மையில் நின்ற முரளியை "பௌன்றி"லைனுக்கு இடம்



மாற்றினர். பாட்டி இன்னும் பழைய இடத்திலேயே முரளியைத் தேட, நாங்கள் "பௌன்றி" லைனுக்கு அருகே முரளி விளையாடுவதைக் காட்டினோம். அவ்வளவுதான். பாட்டியின் முகம் கறுத்துப் போனது! விரக்தியாகத் திரும்பினார்.

"தம்பி! அங்க பொலிசுக்காரர் நிக்கினமெல்லோ"

"அதுக்கு என்ன பாட்டி?"


"இவன் முரளிப் பொடியன் அங்க ஏன் போனவன்...சிலநேரம் அவர்கள் ஐடன்டி (I.C) காட்டைக் கேட்டுப் பிடிச்சுக் கொண்டு போனாலும் போவார்கள்" பாட்டி சொன்னதும் நண்பர்கள் எல்லோரும் வெடிச் சிரிப்பு சிரித்தனர். (ஒரு நண்பன் எறும்பு கடித்ததைப் போல் உருண்டு, உருண்டு சிரித்ததை மறக்க முடியவில்லை) .... அது சரி பாட்டி சொன்னதில் ஏதாவது பிழையிருக்கிறதா?.... நீங்களும் கொஞ்சம் சிரித்துவிட்டு, அதிகம் சிந்தியுங்களேன்!!

(உண்மைதான்)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

ஸ்போர்ட்ஸ்

# விளையாட்டு சபை பணத்தை விளையாடியது! வேதனையோடு வெளியேறும் வீரர்கள்!!



சிங்கப்பூரில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற டிவேகா-மோர்காடோவுக்கு போட்டியில் பங்குபற்றும் போது மட்டகரமான பாதணியே வழங்கப்பட்டது. இருப்பினும் தங்கம் வென்றார்.

கடந்த 12 வருடங்களாக பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த தடகளப் போட்டி வீராங்கனை லிடியா டி வேகா மோர்காடோ, 100 மீட்டர் ஓட்டப் போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்றவர். பல தங்கப்பதக்கங்களைப் பெற்ற இவர் இப்பொழுது பந்தயங்களிலிருந்து வெளியேறுகிறார். பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதி பிடல் ராமோசினால் அமைக்கப்பட்ட புதிய பிலிப்பைன்ஸ் விளையாட்டு சபை மீது நாட்டின் விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் போர் தொடுத்துள்ளனர்.

இந்தச் சபை விளையாட்டு வீரர்கள், சர்வதேச அரங்கில் சிறப்புப் பெறுவதற்காக அமைக்கப்பட்டது. ஆனால் இதற்கென ஒதுக்கப்பட்ட பணத்தின் பெரும் பகுதியினை அதிகாரிகள் தங்கள் சொந்தச் செலவுக்கே எடுத்து ஏப்பம் விட்டு விடுகின்றனர் என்ற குற்றச் சாட்டு இப்போது பரவலாக எழுந்துள்ளது. அத்துடன் விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் துஷ்பிரயோகப் படுத்துகிறார்களாம். பாரம் தூக்கும் போட்டியில் சிறப்பிடம் வகித்த ஒருவரை இச்சபையினர் விளையாட்டுக்களில் இடம் பெறாமல் தடுத்து விட்டனர். நீரில் மூழ்கிச் சாதனை படைக்கும் வீராங்கனை சபையின் உயர் அதிகாரி ஒருவரினால் கற்பழிக்கப்பட்டாராம்.

தென்கிழக்காசிய விளையாட்டுப் போட்டிகளில் மூன்றாவது இடத்தைப்பிடித்துள்ள இக்குழுவினர் இப்பொழுது நாடு திரும்பியுள்ளனர். தங்களுக்கு நல்ல இடம் கிடைக்க முடியாமற் போனமைக்கு விளையாட்டுச் சபை உறுப்பினர்களே காரணம் என்று கொதித்தெழும்பியுள்ளனர். இதனால் இச்சபையிலிருந்த மூன்று முக்கியஸ்தர்கள் இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். உண்மையைக் கண்டறிய அரசாங்கத்தால் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சபையினை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் என்று இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறைக்கான செனற் சபைக்குழுத் தலைவர் சென் ஜோஸ் லினா ஜுனியர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஆடி அடங்குகிறார் தந்தை களம் நாடி ஆடவருகிறார் தனயன்!



இயன்பொத்தம்



ஸியாம் பொத்தம்

கிரிக்கெட் உலகின் ஒரு சகாப்தமாக விளங்கியவர் இயன் பொத்தம். 1974ம் ஆண்டு தனது பதினெட்டாவது வயதில் முதல் தரப் போட்டிகளில் ஆடத் தொடங்கிய பொத்தம் கடந்த ஜுலை மாதம் 19ம் திகதி, முதல்தர டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

எந்தப் பந்தையும், பவுண்டரிக்கோ அல்லது சிக்ஸருக்கோ அடித்து ஆட்டத்தின் போக்கையே மாற்றி விடும் போர்க்குணம் கொண்டவர் இவர். றிச்சர்ட் ஹாட்லி, கபில்தேவ், இம்ரான் கான் போன்ற சகலதுறை ஆட்டக்காரர்கள் வரிசையில் இவருக்கு முதலிடம் உண்டு.

37 வயதான பொத்தம் இங்கிலாந்து அணிக்காக 102 டெஸ்ட் பந்தயங்களில் ஆடியுள்ளார். 12 டெஸ்ட் பந்தயங்களுக்கு தலைமை தாங்கினார். மொத்தம் 5200 ஓட்டங்களையும், 383 விக்கட்டுக்களையும் பெற்றுள்ளார். இந்த ஓட்ட எண்ணிக்கையில் 14 சதங்களும் அடங்கும். அது மாத்திரமன்றி 120 பிடி (கட்ச்) களையும் பிடித்துள்ளார்.

ஒரு டெஸ்ட்டில் 10 விக்கட்டுக்களுக்கு அதிகமாக, என்ற சாதனையை நான்கு டெஸ்ட்களிலும், ஒரு இன்னிங்ஸில் 5 விக்கட்டுக்களுக்கு மேல் என்ற வகையில் 27 தடவைகளும் எடுத்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் மாத்திரமன்றி ஒரு நாள் போட்டிகளிலும் அவர் பிரகாசிக்கத் தவறவில்லை. 116 ஒரு நாள் போட்டிகளில் ஆடியுள்ள பொத்தம் 1530 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் கிரஹாம் கூச், பொத்தம் பற்றிக் கூறும் போது, "அணியில் ஆட்டத்தை வெற்றி கொள்ளும் நட்சத்திரம் யாராவது உண்டென்றால் அது பொத்தம் தான். இப்போது அவருக்கு வயதாகி விட்டதாக பலர் கூறிகின்றனர். ஆனாலும் அறிமுக ஆட்டத்தில் எப்படி ஆடினாரோ அதே போன்றுதான் இப்போதும் ஆடுகிறார்," என்று தெரிவித்தார்.

1988ம் ஆண்டு, போதை மருந்து உபயோகிக்கிறார் என்று கூறி போட்டிகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட பொத்தம், மீண்டும் 1991ல் அணிக்குள் நுழைந்தார். பின்னர் 1992ல் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியின் போது துவக்க ஆட்டக்காரராக களத்தில் புகுந்து வெற்றிக் கொடி நாட்டினார். எனினும் உலகக் கிண்ணத்தொடருக்குப் பின்னர் அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

அவுஸ்திரேலிய அணிக்கும், துர்ஹாம் அணிக்கும் இடையே நடைபெற்ற 3 நாள் போட்டிதான் பொத்தம் ஆடிய கடைசிப் போட்டியாகும். அதே நாள் இன்னொரு இடத்தில் நடந்த போட்டியில் இயன் பொத்தமின் மகன் ஸியாம் பொத்தம் தனது கிரிக்கட் வாழ்க்கையைத் தொடங்கினார்.

முதல் போட்டியிலேயே நான்கு விக்கட்டுக்களைக் கைப்பற்றினார். பதினாறு வயது நிரம்பிய ஸியாம் பொத்தம் "வேகப்பந்து வீச்சில் அப்பா செய்த நுட்பங்களை எல்லாம் மகன் செய்கிறார்" என்று அன்றையப் போட்டியைப் பார்வையிட்ட பார்வையாளர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆக மொத்தத்தில் ஒரு வாரிசு உருவாகிறது.

ஆன்மீகம்

## தேவன் திடப்படுத்தி வெளிச்சமாயிருப்பார்

கொடூரமானவர்களின் சீறல், மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப் போல இருக்கையில், தேவன் ஏழைக்கு தைரியமும் நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெரு வெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெய்யிலுக்கு ஒதுங்கும் நிழலுமானவர். (ஏசாயா 25:4)

தேவன். தாழ்ந்தவர்களை உயரத்தில் வைத்து, துக்கிக்கிறவர்களை இரட்சித்து உயர்த்துகிறார். (யோபு 5:10)

'நாம் தைரியம் கொண்டு, கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே.' (எபிரேயர் 13:6

கர்த்தர் என் வெளிச்சமும், என் இரட்சிப்புமானவர். யாருக்கு பயப்படுவேன், கர்த்தர் என் ஜீவனின் தைரியமானவர். யாருக்கு அஞ்சுவேன்? (சங்கீதம் 27:1)

## நல்லவருடன் நட்பு

நல்லவருடன் நட்புக்கொண்டவன் தனக்குத் தெரியாமலேயே நல்லவனாகி விடுகிறான். தீயாரை நேசிப்பவன் தீயவனாகி விடுகிறான். இதனாலேயே தீயார் உறவை விட்டு மக்கள் விலக்கப்படுகின்றனர். சேர்க்கை வாசனை என்பது மானிடர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. மிருகங்களுடன் பழகுபவன் அவனையறியாமலேயே அம்மிருகத்தின் குணங்களில் சிலவற்றைப் பெற்று விடுகிறான்.

"ஒட்டக, குதிரைகளின் சொந்தக்காரர்கள் பெருமையுடையவர்களாகி விடுகின்றனர். ஆட்டின் சொந்தக்காரர்கள் எளிமை குணம் படைத்தவர்களாக இருக்கின்றனர்" என்று நபி மொழி ஒன்று கூறுகின்றது.

நல்ல நண்பர்கள் கஸ்தூரி விற்பனை செய்பவர் போன்றவர். தீய நண்பர் துருத்தி ஊதுபவர் போன்றவர். கஸ்தூரி விற்பவர் உனக்கு இலவசமாக அதைத் தரக்கூடும் அல்லது அதன் நறுமணத்தை நீ நுகரக்கூடும். துருத்தி ஊதுபவர் உனது ஆடையை எரித்து விடக்கூடும் அல்லது அவரிடமிருந்து கெட்ட வாடையை நீ அடைய நேரும்.

"நபிகள் நாயகம்" அல்ஹதீஸ்.




## உண்மை உன் குலத்தைக் காக்கும்

கேசினி என்றோர் அரச குமாரி மிகச்சிறந்த அழகி. அவளை மணக்கப் பலர் போட்டியிட்டனர். அவர்களைச் சலித்துப் பார்த்ததில் இருவர் மிஞ்சினர். பிரகலாதன் மகனான விரோசனன் ஒருவன். ஆங்கிரஸ் மகனான சுதன்வா ஒருவன். இந்த இருவரில் யார் உயர்ந்தவர் என்று அவளால் தீர்மானிக்க முடியவில்லை. "நான்தான், நான்தான்" என்று இருவரும் சாதித்தனர்.

"உங்களிருவரில் யார் உயர்ந்தவர் என்று நீங்களே தீர்மானித்துக் கொண்டு வாருங்கள். உயர்ந்தவருக்கு என் மணமாலை" என்று கூறிவிட்டாள் கேசினி.

விரோசனன், "தர்மம் தெரிந்த பெரியோரை அணுகி நம்மில் யார் சிறந்தவர், என்று கேட்போம். என் சொத்துக்கள் முழுவதையும் பணயமாக வைக்கிறேன் நீர் உயர்ந்தவன் என்று கூறிவிட்டால் அந்தச் சொத்து முழுதும் உமக்கே" என்றான் சுதன்வாவிடம்.

சுதன்வாவோ, "இல்லை, சொத்து வேண்டாம். நாம் நம் உயிர்களையே பந்தயப் பொருளாக வைத்துக் கொள்வோம்", என்றான்.

இதற்கு ஒப்புக் கொண்ட விரோசனன், "தேவரிடமோ, மனிதரிடமோ எனக்கு நம்பிக்கையில்லை. எனவே, இவர்களில் யாரையும் நீதிபதியாக நியமிக்கக்கூடாது," என்றான்.

"அப்படியானால், உன் தந்தை பிரகலாதனையே நீதிபதியாக வைத்துக் கொள்வோம். அவர் மகன் என்பதற்காக பட்சபாத தீர்ப்புச் சொல்ல மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது," என்றான் சுதன்வா.



இருவருமாகப் பிரகலாதரிடம் சென்றார்கள். விசயத்தைச் சொன்னார்கள். பிரகலாதன் தயங்கினார். "விரோசனன் என்மகன். அவன் உயிரைப் பணயம் வைத்து ஈடுபட்டுள்ள இந்த வழக்கில் நான் எப்படி நீதிபதியாக முடியும்;" என்றார்.

"மகனிடம் காட்ட வேண்டிய பாசம் தனி. நீதிக்கு முன் பாசம் குறுக்கிடலாகாது. 1000 அஸ்வமேத யாகத்தையும், சத்தியத்தையும் தராசில் நிறுத்தினால் சத்தியமே பளுவாக நிற்கும். இது தங்களுக்குத் தெரியாததல்ல. இந்த விஷயத்தில் தாங்கள் தான் நீதிபதி. தங்களிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. தீர்ப்புச் சொல்லுங்கள்," என்றான் சுதன்வா.

ஒரு நிமிடம் கண்களை மூடித்திறந்தார் பிரகலாதர்.

ஆழ்ந்த பெருமூச்சோடு விரோசனனை நோக்கினார். "விரோசனா, என்னைவிட சுதன்வாவின் தந்தை சிறந்தவர். உன் தாயை விட இவன் தாய் சிறந்தவள். உன்னை விடச் சுதன்வாவே சிறந்தவன்," என்றார் தீர்க்கமாக.

ஒரு நிமிடம் மயான அமைதி. பிரகலாதர் கண்கலங்க சுதன்வாவிடம் திரும்பினார். "சுதன்வா, விரோசனர் என் ஒரே மகன். அவனுக்கு உயிர்ப்பிச்சை கொடு."

கையேந்தி நின்ற அந்த உத்தமரைக் கண்டு உடல் குலுங்கினான் சுதன்வா. ஒரு சமயத்தில் பெருமாளே கண் முன் தோன்றி, "உனக்கென்ன வரம் வேண்டும்?" என்று கேட்ட போது, தனக்கென்று எதுவுமே தேவையில்லை என்று மறுத்த பிரகலாதர் இன்று தன்முன் கையேந்தி நிற்கிறார்.

"பிரகலாதரே, மகன் உயிரைக் காக்க வேண்டும் என்பதற்காகப் பொய் கூறாமல், சத்தியமே சொன்னீர்கள். நீதிக்கு முன் பாசபந்தம் இல்லை என்பதை நிரூபித்தீர்கள். உங்கள் சத்தியத்திற்கு நான் பணிகிறேன். விரோசனன் உயிரோடு இருக்கட்டும். அதுமட்டுமல்ல, அவனே கேசினியை மணந்து கொள்ளட்டும்" என்று கூறிவிடை பெற்றான் சுதன்வா.

பிரகலாதன் மகன் உயிருக்காகப் பொய் சொல்லியிருந்தால் சுதன்வாவின் சாபம், பிரகலாதனையும் சேர்த்து அழித்திருக்கும். உண்மை பேசியதால் மகன் உயிரையும் காப்பாற்ற முடிந்தது. நாம் தர்மத்தைக் காத்தால் அந்தத் தர்மம் நம்மையும், நம் குலத்தையும் காக்கும்.

www.padippakam.com

வாரமலர் தினமுரசு




கார்தான்- ஆம்பர்தான்

கார்களில் பல ரகங்கள் வந்துவிட்டன. எனினும் என்ன பழைய கார்களை பார்க்கும் போது இப்போதும் ஆசை வருகிறது. இது அமெரிக்காவில் 1930இல் வடிவமைக்கப்பட்ட அமெரிக்கன் மோர்கன் சூப்பர் ஸ்போர்ட்ஸ் கார்தான் இது ஆசைப் படத்தான் கிடைக்காது.




சந்தனக் கலவை!
இதற்கில்லை இணை!!
லக்கிலான்ட் பிஸ்கட்ஸ்
ஈடில்லாச் சுவை. இலங்கையெங்கும் இணையற்ற விற்பனை
சிறுவர் முதல் முதியோர் வரை லக்கிலான்ட் பிஸ்கட்டுக்கள் என்றால் விரும்பிநாடும் இரகசியம் என்ன?
அதில் – சுவை மட்டுமல்ல –
பால் –கோதுமை, சீனி, ஆகியவற்றிலிருந்து பெறப்படும் விட்டமின்களும்– புரதங்களும் உடலுறுப்புக்களை ஊக்குவிக்கின்றன.
இதுவன்றோ பிஸ்கட்ஸ்
Luckyland Biscuits
Natterampote,
Kundasale.
Sri Lanka
Tel.
08-24217
08-32574


## சினம் கொண்ட சிறு பையன்!

அணுக்குண்டுகள் உலகை அச்சுறுத்தும் காலம் இது. இன்று ஒரு குண்டு போதும் உலகை சர்வநாசம் செய்ய. மனித நாகரிகத்தை மயானமாக்க!

இன்று அமெரிக்காவிடம் அணுக்குண்டுகள் இருக்கின்றன. ஆயுதக்குறைப்புப் பேச்சுக்கள் மத்தியிலும் அமெரிக்கா அணுக்குண்டுகளை பத்திரமாக வைத்திருக்கிறது. தனது முதலாவது அணுக்குண்டை 1945 ஆகஸ்ட் 6ம் திகதி காலை 8.16க்கு ஜப்பானிலுள்ள ஹிரோசிமாவில் அமெரிக்கா வீசியது.

அந்தக் குண்டுக்கு சிறு பையன் என்று அமெரிக்கா பெயரிட்டிருந்தது. அந்த சிறு பையன் செய்த கொடுமைகளின் தாக்கம் இன்னமும் ஜப்பானில் மறையவில்லை.

முதலாவது ஈதரசன் குண்டை அமெரிக்கா வீசியபோது எடுக்கப்பட்ட அதிசயப் படமே இது.





## பழமைதான் - ஆனால் விலை கடுமை!

புதியன புகுதலும் பழையன கழிதலும் என்று பேசிக் கொண்டாலும் கூட பழையவற்றை சேகரிப்பதில் ஆர்வமுள்ளவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். 20 டொலர் பெறுமதியான தங்க நாணயம் ஒன்று 1907ம் அன்று ஏலத்திற்கு வந்தது. கடும் கிராக்கி. ஏகப்போட்டி. இறுதியில் வாங்கியவர் கொடுத்த விலை என்ன தெரியுமோ? 15 இலட்சம் டாலர்கள். இது விற்பனையில் ஒரு உலக சாதனை. கின்னஸ் புத்தகத்தில் பதிந்தும் விட்டது. நாணயத்தின் இரு புறத்தினதும் தோற்றமே படத்தில் உள்ளது.



### சாதனை முடி!

[illegible]



### சாதனைச் சைக்கிள்!

[illegible]

## கோழி சாலட்

மேற்கத்தைய உணவுமுறையில் பிரதான உணவின் பின்னர் 'சாலட்' என்ற இறுதி உணவு உட்கொள்ளப்படுவதுண்டு. பொதுவாகக் கீரைவகைகள், தக்காளி, வெள்ளரிக்காய் போன்றவற்றின் துண்டுகள் எல்லாம் கலந்த ஒரு கதம்ப உணவாக இதனை உண்பர். உருளைக் கிழங்கும் சேர்க்கப்படும். இது சைவ உணவாகவே கருதப்பட்டது.

இப்பொழுது இத்தகைய உணவில் மாமிசமும் சேர்க்கப்படுவதுண்டு. அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இவை சாதாரணமாக இரவு நேர உணவுகளில் மேசையை அலங்கரிக்கும்.

இறைச்சிவகைகளுடன் இறால் மற்றும் மீனும் சேர்க்கப்படுவதுண்டு.

நாமும் இம் முறையை அனுசரித்து குளிர்காலங்களில் உண்ணலாம்.

தமது நாட்டில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் இதனைத் தயாரித்துப் பரிமாறலாம்.

தேவையானவை:

| | |
|---|---|
| கோழி | -6 எலும்பற்ற துண்டுகள் |
| சலாது இலை | -8 |
| லோன் | -1/4 கிலோ |
| பசளி | -1/4 கிலோ |
| பச்சைமிளகாய் | -4 |
| சோயா சோஸ் | -1 மேசைக்கரண்டி |
| சீஸ் | -150 கிராம் (துருவியது) |
| ஏலக்காய் | -4 |
| கறுவாப்பட்டை | -1 அங்குலத்துண்டு |
| மிளகு தூள் | -அளவாக |
| உப்பு | -அளவாக |
| ஒலிவ் எண்ணெய் | -1 மேசைக்கரண்டி |
| தாவர எண்ணெய் | -1 மேசைக்கரண்டி |

செய்முறை:

முதலில் கோழியின் கால் இறைச்சியின் எலும்பை நீக்கிவிட்டு இவ்விரண்டு துண்டுகளாக ஆறு துண்டுகளை (3 கால்கள்) எடுத்து நன்றாகக் கழுவியபின், ஒரு பாத்திரத்தில் தாவர எண்ணெயை விட்டு அடுப்பில் இளஞ்சூட்டில் ஏற்றிய பின் கோழி இறைச்சித் துண்டுகளை போட்டு பொன்னிறமாகும் வரை வதக்கவும்.

இலைக்கறி வகைகளை ஓரளவாக வெட்டிக் கழுவி கொதிநீரில் தோய்த்து எடுக்கவும். இத்துடன் பச்சை மிளகாயையும் நேராகக் கீறி இரண்டு துண்டுகளாக்கி கீரைகளுடன் சேர்க்கவும்.

கறுவாப்பட்டை, ஏலக்காய் ஆகிய இரண்டையும் நசித்து தூள்போலாக்கிக் கொள்ளவும்.

ஒரு பரந்த தட்டில் கீரைகளை ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து அவற்றின் மேல் கோழி இறைச்சித்துண்டுகளையும் வைக்கவும்.

சோயாசோஸையும் ஒலிவ் எண்ணெயையும் ஒன்றன்பின் ஒன்றாக இறைச்சி மற்றும் இலைக்கறி வகைகள் நனையும் வரை ஊற்றுங்கள். சீஸையும் சிறு துகள்களாகத் தூவி விடுங்கள். ஏலக்காய் மற்றும் கறுவாப்பட்டைத் தூளையும் எல்லாவற்றிலும் படத்தக்கதாகத் தூவி விடுங்கள். உப்பு, மிளகாய்த் தூளையும் அளவாகத் தூவியபின் உணவு மேசையில் எடுத்து வைத்தால் பார்ப்போர் கண்களையும் மூக்கையும் கவர்ந்திழுப்பதுடன் நாவிலும் நீரூற வைக்கும்.

நால்வருக்குப் பரிமாற இது அளவானது.





[illegible] தினமுரசு பதிப்பகத்தாரால் ... அச்சகத்தில் செப்டெம்பர் ... வெளியிடப்படுகிறது.